Vol: 25 Issue : 05 Jan - 2026
ஆண்டு: 25 இதழ்: 05 ஜன. 2026
ரூ.40


# இனிய உதயம்

இலக்கியத் திங்களிதழ்

## நான் அப்போது பார்த்த திராவிட இயக்க வாழ்வியலையே நாவலாக்கினேன்!

கவிஞர் அ. வெண்ணிலாவின் அதிரடி நேர்காணல்!

## ரிஸ்குன்னு தெரிஞ்சேதான் படமாக்கினோம்!

-'ப்ளாக் பாரஸ்ட்' குறும்பட இயக்குநர் ராம்பிரசாந்த் ஜி

மொழி பெயர்ப்புச் சிறுகதைகள்
தமிழில் : சுரா

## வந்துநில்வாய் தைப்பாவாய்!

-தமிழர் திருநாள் கரும்புக் கட்டுரை!

நக்கீரன் பொது அறிவு உலகம்

# 2026 இயர்புக்

- முக்கிய நிகழ்வுகள்
- அறிவியல் தொழில்நுட்பம்
- விருதுகள் விளையாட்டுகள்
- தமிழக அரசின் புதிய நலத் திட்டங்கள் அனைத்து மத்திய அரசு திட்டங்கள்
- ஆபரேஷன் சிந்தூர்
- பொருளாதார வளர்ச்சியில் முதலிடம்

# தமிழர்களின் தொல்பெருமைக்கு துணைநின்ற முதல்வர்!

பொருநை அருங்காட்சியகத்தைப் பார்வையிடும் முதல்வர்

விக்டோரியா ஹாலில் முதல்வருடன் நக்கீரன் ஆசிரியர், இந்து என்.ராம்

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.**

-என்று நாடாளும் தலைவர்களுக்கான பண்பை வரையறுக்கிறார் வள்ளுவர்.

இதன் பொருள், துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் நாடாளுபவர்க்கான தகுதிகள்.

அரசியல் எதிரிகளுக்கு அஞ்சாமலும், தன் அரசுத் திட்டங்களில் இரக்க சிந்தனை வெளிப்படும் வகையிலும், அறிவாற்றல் துலங்கும்படி எதிரிகளுக்கு பதில் சொல்வதிலும், தனது உயர்ந்த குறிக்கோளை எட்டும் வகையில், தமிழ்ச் சமூகத்தின் மாண்பையும் மரியாதையையும் மீட்டெடுப்பதிலும், வள்ளுவன் சொல்லும் தகுதிகளையுடைய முதல்வராக தளபதி ஸ்டாலின் தன்னை நிரூபித்துக்கொண்டே இருக்கிறார்.

அவரது உயர்ந்த குறிக்கோளை அடையாளப்படுத்தும் செயல்களில் ஒன்றாகத்தான் தற்போது, பழம்பெருமை வாய்ந்த சென்னை விக்டோரியா ஹால் புனரமைக்கப்பட்டிருக்கிறது.

முதல்வர் ஸ்டாலினுக்கும் இங்கிலாந்தின் பேரரசியாகத் திகழ்ந்த விக்டோரியா அம்மையாருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? இருப்பினும் வரலாற்றை வணங்கவேண்டும். தொன்மையைப் போற்றவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தின் வெளிப்பாடுதான், விக்டோரியா ஹாலின் புனரமைப்பு.

ராணி விக்டோரியாவின் பொன் விழாவை நினைவுகூரும் வகையில், ராபர்ட் சிசோல்ம் என்பவரால் 1887-ல் இந்த அரங்கம் உருவாக்கப்பட்டது. இதை உருவாக்க அப்போதைய திருவிதாங்கூர் மன்னர் தொடங்கி, நம் புதுக்கோட்டை மன்னர் வரை நிதிகொடுத்திருக்கிறார்கள். மேலும், சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதியரசர் முத்துசாமி, ராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி, எட்டையபுரம் ஜமீன்தார் உள்ளிட்ட பெரு மக்களும் இதை உருவாக்க, தாராளம் காட்டியிருக்கிறார்கள். இந்தக் கட்டடம் இந்திய- முகலாயக் கட்டடக் கலைகளை இணைத்த இந்தோ-சரெசெனிக் பாணியில் உருவாக்கப் பட்டதாகும்.

இந்த விக்டோரியா அரங்கில் விவேகானந்தர், மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார், சர்தார் வல்லபாய் படேல் உள்ளிட்ட

பெருமக்கள் கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

இப்படி பல்வேறு வரலாற்று நினைவுகளை அடைகாத்துக் கொண்டிருக்கும் விக்டோரியா அரங்கம் சிதிலமாகிவிடக் கூடாது என்கிற எண்ணத்தில் இதை அதன் தொன்மை மாறாமல் இப்போதைய அரசு 32.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்திருக்கிறது. பல ஆண்டுகளாக பராமரிப்பின்மையால் சிதிலமடைந்த இந்த ஹால், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி செலவில் அதன் பழமையான அமைப்பை மாற்றாமல், நவீன வசதிகளுடன் நிலநடுக்கம் தாங்கும் வகையில் சீரமைக்கப்பட்டது. 2025 டிசம்பர் 23-இல் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்துவைத்த இந்த அரங்கம், டிசம்பர் 26 முதல் பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது.

திறப்பு விழாவில் விக்டோரியா பொது அரங்கின் வரலாற்றைச் சொல்லும் ஆவணப் படம், கவிதா ராம் இலியாஸ் ஐ.ஏ.எஸ். அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அனுஷம் குழுவினரின் நாட்டிய நிகழ்வு இரண்டுமே பார்வையாளர்களை வியக்கவைத்தது. நடனக் குழுவினர், பார்வையாளர்கள் கண் முன்னே வரலாற்றை மீள நிகழ்த்திக்காட்டினர். அதேபோல சிதம்பரத்தைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு படிக்கும் சிறுமியான வர்ஷா, விக்டோரியா ஹாலின் வரலாற்றைச் சொல்லச் சொல்ல, பின்னணியில் எல்.இ.டி. திரையில் அந்தந்த காலகட்ட நிகழ்வுகளையும் காட்டியது பொருத்தமாக இருந்தது.

டிசம்பர் 20-ஆம் தேதி தூத்துக்குடி சென்ற தமிழக முதல்வர் ஸ்டாலின், நெல்லை ரெட்டியார்பட்டி சாலையிலுள்ள பொருநை அருங்காட்சியகத்தை திறந்துவைத்துப் பேசினார்.

அப்போது, “இந்திய துணைக்கண்டத்தின் வரலாறு தமிழ்நிலத்திலிருந்து எழுதப்பட வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்திவருகிறேன். இது வெறும் பெருமிதமல்ல, அறிவியல் உண்மை. கீழடி அருங்காட்சியகத்தின் வெற்றிக்குப் பிறகு தமிழ் நாகரிகத்தை ஆவணப்படுத்தும் பெரிய அடிவைப்பு பொருநை அருங்காட்சியகம். சிவகளை அகழாய்வில் கிடைத்த இரும்புப் பொருட்கள் 5,300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என தெரியவந்துள்ளது. இதை நாம் சொல்லவில்லை. சர்வதேச ஆய்வுகள் சொல்லியிருக்கின்றன. இதை ஒன்றிய அரசு அங்கீகரிக்க மறுக்கிறது. தமிழர்களின் அறிவியல், விவசாய அறிவு போன்றவை போற்றத்தக்கவை. இதை உலக அரங்குக்கு எடுத்துச் செல்லவேண்டும்” என்றார்,

2023-ல் தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு ரூ 67 கோடி செலவில் இரண்டு ஆண்டுகளில் பணிகள் முடிக்கப்பட்டு எழுந்துநிற்கும் இந்த அருங்காட்சியகம், தமிழர்களின் பெருமையையும் கூடவே முதல்வரின் செயல்வேகத்தையும், அக்கறையையும் பேசி நிற்கிறது.


இனிய உதயம்

இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**நக்கீரன்கோபால்**

இணை ஆசிரியர்:
**ஆரூர் தமிழ்நாடன்**

பொறுப்பாசிரியர்: **க.சுப்பிரமணியன்**
மொழிபெயர்ப்பாளர்: **சுரா**

வடிவமைப்பு:
**RD.சரவணப்பெருமாள்**

உதவி ஆசிரியர்கள்:
**அழகு, கமல்**

கணினி அச்சுக்கோர்ப்பு:
**ச.ராஜேந்திரன், ஜோ.ஸ்டாலின்**
பிழை திருத்துநர்: **எஸ்.ராஜா, எம்.ராமலிங்கம், D.கிறிஸ்டோபர்**

நெறிகாட்டியவர்:
**கவிக்கோ அப்துல்ரகுமான்**

நக்கீரன் பப்ளிகேஷனுக்காக
பிரிண்டர் **ஆர். குருசாமி** அவர்களால்
**M/s. சாருபிரபா பிரிண்டர்ஸ் லிமிடெட்**
எண் 105, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14-ல்
அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும்
உரிமையாளர் **நக்கீரன்கோபால்**
தொலைபேசி: 044-43993000

**iniyaudhayam@nakkheeran.in**

NAKKHEERAN PUBLICATIONS
PRINTED BY **R. GURUSAMY**
**M/s. SAARUPRABHA PRINTERS LTD.**
at No. 105, Jani Jahan Khan Road, Royapettah,
Chennai-600014.
Owned Published by **NAKKHEERAN GOPAL**
on behalf of **NAKKHEERAN PUBLICATION**,
Place of Publication, No105, Jani Jahan Khan Road,
Royapettah, Chennai-600014
Editor : **NAKKHEERAN GOPAL**


# மோடியின் இரட்டை வேஷம்!

**தக்காங்கு நாடி தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து**

-இந்தக் குறளுக்கு ஏற்ப செயல்பட்டிருக்கிறாரா பிரதமர்?

மாறாக, குற்றங்களைச் செய்பவர்களைத் தண்டிக்காமல், கண்டுகொள்ளாமல், கிறிஸ்துமஸ் விழாவிலும் கலந்துகொண்டு இரட்டை வேஷம் போட்டிருகிறார்.

கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி, இந்தியப் பிரதமர் டெல்லியிலுள்ள கதீட்ரல் சர்ச் ஆப் ரிடெம்ப்ஷன் தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் கலந்து கொண்டார், அங்கு பிரதமருக்காக கிறித்துவர்கள் ஒரு சிறப்புப் பிரார்த்தனையையும் மேற்கொண்டனர்.

அதேசமயம் நடந்துமுடிந்த கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் கிறித்துவர்கள்மீது இந்துத்துவர்கள் தாக்குதல் நடத்தியிருப்பது அதிர்ச்சி அலைகளை எழுப்பியிருக்கிறது. வழக்கமாக, இந்துத்துவர்களின் இலக்காக முஸ்லிம்கள் இருந்தது இந்த கிறிஸ்துமஸ் தினத் தில் மாறியிருக்கிறது.

புல்டோசர் அரசியல் நடக்கும் உத்தரப்பிரதேசத்தில், கிறிஸ்துமஸ் தினத்தை பின்னுக்குத் தள்ள அன்றைய தினத்தை முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் நினைவாக

தேவாலயத்தில் மோடி

நல்லாட்சி தினம் என அறிவித்து அனைத்துப் பள்ளிகளுக்கும் விடுமுறையை ரத்து செய்திருக்கிறது யோகி அரசு. அன்றைக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் தவறாமல் ஆஜராகவேண்டுமென கட்டாயப்படுத்தியிருக்கிறது. இது மறைமுகமாக கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை தடைசெய்யும் திட்டம் என கிறிஸ்துவ அமைப்புகள் விமர்சனம் செய்திருக்கின்றன.

இதே உ.பி.யின் ஜபல்பூரில் பார்வையற்ற கிறித்தவ பெண்ணைக் கூட விடாமல், பா.ஜ.க. மாவட்ட துணைத்தலைவர் அஞ்சு பார்கவி தாக்குதல் நடத்திய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதல் நடத்தியதோடு நிறுத்தாமல், பார்வையற்ற இந்த பெண், அடுத்த பிறவியிலும் பார்வையற்றவராகத் தான் பிறப்பாரென்று சாபம் விடுவது போல் தரக்குறைவாகப் பேச, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய போலீசார், அஞ்சு பார்கவியை கைதுசெய்வதை விடுத்து அவரை சமாதானப்படுத்தி தடுக்கிறார்கள்.

பா.ஜ.க.வின் தாக்குதல்

ராஜஸ்தானிலோ தங்களது வழக்கமான மதமாற்ற முயற்சி எனும் வியூகத்தை இந்துத்வ அமைப்புகள் கையிலெடுத்துள்ளன. ராஜஸ்தானின் துங்கர்பூர் மாவட்டத்திலுள்ள பிச்சிவாரா கிராமத்தில், செயின்ட் ஜோசப் கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் நுழைந்த இந்துத்வ கும்பல், கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவதாகக் கூறி, அங்குள்ள பாதிரியார்கள், கிறிஸ்தவ மக்கள்மீது வெளிப்படையாகத் தாக்குதல் நடத்தியது.

உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்துவாரிலுள்ள உத்தரப் பிரதேச சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான ஹோட்டலில் நடக்கவிருந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்ச்சியை, இந்துக்களின் மனதைப் புண்படுத்துவதாகக் கூறி ரகளை செய்ததில் இந்நிகழ்ச்சி ரத்துசெய்யப்பட்டது.

இந்தியாவின் தலைநகரான டெல்லியிலோ, சாண்டா க்ளாஸ் எனப்படும் கிறிஸ்துமஸ் தாத்தா தொப்பிகளை அணிந்தபடி அரட்டையடித்துக்கொண்டிருந்த கிறித்தவ இளம்பெண்களிடம், மதமாற்றத்தில் ஈடுபடுவதாகக்கூறி பஜ்ரங்தள் கும்பல் வம்புக்கிழுத்ததோடு, அப்பெண்களை அங்கிருந்து விரட்டியடித்தது.

சமீபகாலமாக சத்தீஸ்கர் மாநிலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறையும், கிறிஸ்தவர்கள் மீதான வழக்குப் பதிவுகளும் அதிகரித்துள்ளன. இதையெதிர்த்து கிறிஸ்தவ அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்த நிலையில், கிறிஸ்தவ அமைப்புகளுக்கு எதிராக இந்துத்வ அமைப்புகளைச் சேர்ந்த சிலர், கிறிஸ்துமஸுக்கு முந்தைய நாளில் சத்தீஸ்கர் மாநிலம் தழுவிய வேலைநிறுத்தத்துக்கு அழைப்புவிடுத்தது பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்த ஒடிஷா மாநிலத்தின் பூரி நகரில், சாலையோரத்தில் கிறிஸ்துமஸ் குல்லா, முகமூடிகளை விற்பனை செய்த வியாபாரியை, அச்சாலையில் பயணித்த இந்துத்வக் கும்பல், "இங்கெல்லாம் கிறிஸ்தவ பொருட்களை விற்கக்கூடாது!" என விரட்டியடித்தது பரிதாபத்தை ஏற்படுத்தியது..

உத்தரபிரதேசத்தின் காஜியாபாத்தில் கிறிஸ்தவ போதகர் ராஜு சதாசிவத்தையும் அவரது மனைவியையும், சத்யனிஷ்ட் ஆர்யா என்ற இந்துத்வ ரவுடி, கிறிஸ்தவ மதம் குறித்து இழிவாகப் பேசி மிரட்டிய வீடியோ, சமூக வலைத்தளத்தில் வைரலாகப் பரவி பலரால் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதுமட்டுமல்ல இன்னும் சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், கேரளம் போன்ற மாநிலங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் கேரள கம்யூனிஸ்ட் கட்சி, சம்பந்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ். ரவுடிகளை தைரியமாக கைது செய்துள்ளது.

ஆக, நாட்டின் பிரதமர் கிறித்துமஸ் நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவிக்க, மறுபுறம் நாடெங்கும் கிறித்துவ தேவாலயங்கள், கிறித்துவர்கள் குறிவைத்துத் தாக்கப்படுவதும், அதற்கெதிராக பிரதமரோ, ஒன்றிய அரசில் முதன்மையானவர்களோ குரல் கொடுக்காததும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இருக் கிறது.

இந்தியாவை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்வதை விடவும், அதனை இந்துத்துவ நாடு என்னும் முத்திரைக்கு ஏற்றவாறு மாற்றவேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ்.ஸின் கொள்கைக்கு ஏற்றவாறு செயல்படுவதுதான் பா.ஜ.க.வின் முன்னுரிமையாய் இருக்கிறதோ என்ற எண்ணம் எழுகிறது.

ராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி, அனுமன் ஜெயந்தி போன்ற நாட்களை மட்டுமே தங்களின் இந்துத்வ சில்மிஷங்களுக்கு இலக்காய் வைத்திருந்த இந்துத்துவர்கள், இப்போது கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்ற பிற மத பண்டிகை நாட்களுக்கும் தங்கள் சில்மிஷங்களை நீட்டிப்பு செய்துள்ளனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இதை முளையிலேயே களைந்தெடுக்காவிட்டால், ஆபத்தான மதக்கலவர வைரஸை வளர்த்தெடுத்த பிரதமர் என்றே மோடியை வரலாறு பதிவுசெய்யும்!

*—வருத்தத்துடன்*

**நக்கீரன்கோபால்**

# தரணி போற்றும் தமிழர் திருநாள்!

● பாவலர் **கருமலைத்தமிழாழன்**

**ஊ**ருக்கே உணவளிக்கும் உழவர் தம்மின்
உழைப்புதனைப் போற்றுகின்ற உயர்ந்த நன்னாள்
தேருக்கே அச்சாணி போல மண்ணைத்
தேனாக்கும் மாடுகளை வணங்கும் நன்னாள் !
ஏருக்குத் துணைநின்று பயிர்வி ளைத்தே
ஏற்றத்தைத் தரும்கதிரை ஏத்தும் நன்னாள்
யாருக்கும் இல்லையெனச் சொல்லி டாமல்
யாசிக்கும் முன்கொடுக்கும் விழாதான் பொங்கல் !

கல்மூன்றை அடுப்பாக்கிப் பானை வைத்துக்
கறந்தபாலில் அரிசியொடு ஏலம் போட்டு
வெல்லமென வாழ்வெல்லாம் இனிக்கு மென்றும்
வேதனைகள் போனதென முழக்க மிட்டே
எல்லோரும் கேளிரென ஒன்று சேர்ந்தே
எழில்மஞ்சள் கரும்புதனை அருகி லிட்டுக்
கல்லுருவம் மதச்சாயல் ஏது மின்றிக்
காண்கின்ற இயற்கையினைப் போற்றும் நன்னாள் !

மாவிலையின் தோரணங்கள் வீடு தோறும்
மாடுகளின் கொம்பெல்லாம் வண்ணப் பூச்சு
காவிளைந்த மலர்களினைக் கொட்டி னாற்போல்
கவின்கொஞ்சும் மாக்கோலம் வாசல் தோறும் !
கூவிகூவிப் பொங்கலோநற் பொங்க லென்று
குதுகலமாய்ப் பாடியாடி மகிழும் தைநாள்
தாவிவரும் தென்றலெனத் தரணிக் கெல்லாம்
தலைவிழாவாம் பொங்கலெனும் தமிழர் நாளாம்!

ஆதிக்க மழையே
அறமில்லையா உன்னிடத்தில்
நள்ளிரவுத் தூக்கத்தில்
நானிருந்த வேளையில்
இடி மின்னல் என
உன் வான்படை திரட்டி வந்து
வஞ்சம் தீர்த்தாயோ

கண் விழித்து
நான் கதவு திறக்கையில்
கடல் காட்சி காட்டிவிட்டாயே
பாறையெனில் விழுந்த வேகத்தில்
உருண்டோடுகிறாய்

மேட்டுப் பரப்பில்
தாக்குப்பிடிக்க முடியாமல்
தப்பிவிடுகிறாய்

சற்றே பள்ளமென்றாலும்
இடம்பிடித்து
இளைப்பாறிக்கொள்கிறாய்

சேரிடம் சேராமல்
சேற்றிலும் சேர்கிறாய்
செந்நிலத்திலும் கரைகிறாய்
நண்டுக்கும் வண்டுக்கும் தூது
சொல்லி
வரும் நீ
எதிர்பாரா அம்புகளை
என்னிடத்தில் ஏன் பாய்ச்சுகிறாய்

எனக்குள் ஊடுருவி
கணத்தில் உடை நனைத்து
உருவம் காட்டிவிடுகிறாய்
யாரிடம் உரிமம் பெற்றாய்
பொல்லாத மழையே
பொல்லாப்பு செய்வாயோ

இவ்விதம் இங்கிதம் என்பது
இம்மியும் இல்லையோ
உன்னிடம்

●

## என் மௌனத்தையே

என் மௌனத்தையே உன்னால்
புரிந்துகொள்ள முடியாவிட்டால்
என் வார்த்தைகளையும்
உன்னால் புரிந்துகொள்ள முடியாது

என் வார்த்தைகளையே
புரிந்துகொள்ள முடியாத நீ
அதன் அர்த்தங்களை
எப்படி அறிவாய்

என்கோபத்தைக் கூட
புரிந்துகொள்ளாத நீ
என் குணத்தை எப்படித்
தெரிந்துகொள்வாய்

என் பைத்தியகாரத்தனம் கூட

# இரா.காந்திமதி கவிதைகள்

தெரியவில்லையானால்
என் புத்திசாலித்தனம்
எப்படித் தெரியும் உனக்கு

என் காயத்தையே
பார்க்க முடியாத உன்னால்
அதன் இரணத்தை
எப்படி உணர முடியும்

என் கடினத்தைக்
கடக்க முடியாத உன்னால்
எந்தன் மென்மனதை
எப்படி நெருங்க முடியும்

என்னை இரசிக்கவே தவறுகின்ற நீ
என்னை எப்படி நுகர்வாய்
என் பக்கங்களைக் கூட
புரட்ட முடியாத உன்னால்
ஒருபோதும்
என்னைப் படிக்கவும் முடியாது.

●

## கூடலுக்குப் பின்னும்

ஏனிந்த மயக்கம்
எதற்கிந்தத் தயக்கம்
புதையல் வந்து
மடியில் கிடந்த பின்பும்
தேடல் நீள்கிறது

விடை எழுதிய பின்னும்
என் தாள்களில்
வினாக்கள் குவிகின்றன

கூடடைந்த பின்னும்
வானளந்து விரிகின்றன
சிறகுகள்

கரைகடந்த பின்பும்
கைகள் நீச்சல் பழகிட
தத்தளிக்கின்றன

என்னில் நீயும்
உன்னில் நானும் என
ஒன்றில் ஒன்றாய்
கரைந்துவிட்ட பிறகும்
புது வெள்ளமாய்
பாய்ந்தோடுகிறது மனம்

மெய்யிலும் உயிரிலுமென
என் ஒவ்வொரு அணுவிலும்
கலந்துவிட்ட
ஆத்மார்த்தனே

இன்னும் இன்னும்
ஏதோ சொல்ல வருகிறேன்
என் உணர்வுகளை
முழுதாய்
சொல்லிவிடும் முயற்சியில்
உறைகிறது பெண்மை

வா மீண்டும் தவழ்ந்து
நடை பழகுவோம்
வானவில்லை எட்டிப் பிடித்து
வண்ணங்கள்
பூசிக்கொள்வோம்

மழைக்கு முன்னும் பின்னும்
வரும் மண்வாசம் போலே
மழை வந்த வாசமா
மழை வரும் வாசமா
நுகர்வோம்

உன்னில் என் வாசமும்
என்னில் உன் வாசமும்

●

## பிரிதலும் கொலைத் தொழிலே

இரவொன்றின் யாமத்தில்
பசி என்றதும்
பதறி உதறி
விழித்தெழுந்து
அமுதூட்டிய தாய்மையன்

கண்ணே கேள்
அந்த சாமிமேல்
இந்த உயிர்மேல்
என் பிறப்பின்மேல்
சத்தியம்
என் வேலை
அதில் பெறும் ஊதியம்
எனக்குற்ற நோய்
இதோ கையிலிருக்கும்
அதன் மருந்து
யாவும் பொய்க்கட்டும்

உன்னிடத்தில் நான் பொய்த்தால்
என்ற சத்தியன்
உன்மீது படும் சிறுபார்வையும்
உன்னைத் தாக்கும்
ஒரு வார்த்தையும்
தாங்கிடா நெஞ்சத்தனன்
நான் என்ற
தூய்மையன்

அழகோவியமே
அசல் தமிழ்ப்பெண்ணே
நீ என் பாக்கியம் என்று
பூரித்த புண்ணியன்

நீயின்றி நானில்லை
என்றபோது
நீயின்றி ஏதுமில்லை எனக்கு
என்ற நித்தனன்

என்ன சொல்லியும் என்ன
இன்று
எனைத் தவிர்த்த
இன்னொன்று அவனிடத்தில்
அவன் சொற்கள் மட்டும்
என்னிடத்தில்.

●

# கவிஞர் அ. வெண்ணிலாவின் அதிரடி நேர்காணல்!

தமிழிலக்கிய வானில் கடந்த முப்பது ஆண்டு களுக்கும் மேலாக ஒளிரும் கவிதை முகத்துக்குச் சொந்தக்காரர் அ.வெண்ணிலா. பள்ளி ஆசிரியராகத் தனது கல்விப்பணியைத் தொடர்ந்தவர், சிறு பத்திரிகைகளில் எழுதத் தொடங்கி, தற்போது 'ஆனந்த விகடனில்' 122 வாரங்கள் வெளியான 'நீரதிகாரம்' எனும் பெருந்தொடரையும் எழுதியுள்ளார். இதுவரை 7 கவிதை நூல்கள், 4 சிறுகதை நூல்கள், 3 நாவல்கள், 7 கட்டுரை நூல்களோடு, உலகத் தமிழ்ப் பெண் கவிஞர் களின் கவிதைகளை 'கனவும் விடியும்', தமிழ்ப்பெண் எழுத்தாளர்களின் கதைகளை 'மீதமிருக்கும் சொற்கள்' எனும் நூல்களாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

'தேவரடியார்கள்: வாழ்வும் கலையும்' எனும் தனது முனைவர் பட்ட ஆய்வினையும் நூலாகத் தந்துள்ள இவர், 'இந்திய சரித்திரக் களஞ்சியம்', 'ஆனந்த ரங்கப்பிள்ளை - தினப்படி சேதிக்குறிப்பு' எனும் வரலாற்றுப் பொக்கிஷங்களாக விளங்கும் நூல்களை எழுத்தாளர் மு.ராஜேந்திரனோடு இணைந்து செம்பதிப்பாக கொண்டுவந்துள்ளார்.

'உத்ரா' எனும் திரைப்படத்தில் பாடல் எழுதியவர், 'சகுந்தலாவின் காதலன்' திரைப்படத்தில் வசன ஆசியராகவும், இணை இயக்குநராகவும் பணியாற்றியுள் ளார். டிசம்பரின் குளிர் மாதப் பொழுதில் 'இனிய உதயம்' இதழுக்காக அவரோடு உரையாடியதிலிருந்து...

**தங்களின் பள்ளி நாள்கள் பற்றி சொல்லுங்களேன்!**

தமிழிலக்கிய வானில் கடந்த முப்பது ஆண்டு களுக்கும் மேலாக ஒளிரும் கவிதை முகத்துக்குச் சொந்தக்காரர் அ.வெண்ணிலா. பள்ளி ஆசிரியராகத் தனது கல்விப்பணியைத் தொடர்ந்தவர், சிறுபத்திரிகை களில் எழுதத் தொடங்கி, தற்போது 'ஆனந்த விகடனில்' 122 வாரங்கள் வெளியான 'நீரதிகாரம்' எனும் பெருந்தொடரையும் எழுதியுள்ளார். இதுவரை 7 கவிதை நூல்கள், 4 சிறுகதை நூல்கள், 3 நாவல்கள், 7 கட்டுரை நூல்களோடு, உலகத் தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதைகளை 'கனவும் விடியும்', தமிழ்ப் பெண் எழுத்தாளர்களின் கதைகளை 'மீதமிருக்கும் சொற்கள்' எனும் நூல்களாகத் தொகுத்து வெளி யிட்டுள்ளார்.

'தேவரடியார்கள்: வாழ்வும் கலையும்' எனும் தனது முனைவர் பட்ட ஆய்வினையும் நூலாகத் தந்துள்ள இவர், 'இந்திய சரித்திரக் களஞ்சியம்', 'ஆனந்த

# ‘நான் அப்போது பார்த்த திராவிட இயக்க வாழ்வியலையே நாவலாக்கினேன்!’

ரங்கப்பிள்ளை- தினப்படி சேதிக்குறிப்பு’ எனும் வரலாற்றுப் பொக்கிஷங்களாக விளங்கும் நூல்களை எழுத்தாளர் முராஜேந்திரனோடு இணைந்து செம்பதிப் பாகக் கொண்டுவந்துள்ளார்.

‘உத்ரா’ எனும் திரைப்படத்தில் பாடல் எழுதியவர், ‘சகுந்தலாவின் காதலன்’ திரைப்படத்தில் வசன ஆசியராகவும், இணை இயக்குநராகவும் பணியாற்றி யுள்ளார். டிசம்பரின் குளிர் மாதப் பொழுதில் ‘இனிய உதயம்’ இதழுக்காக அவரோடு உரையாடியதிலிருந்து.

எனக்கு வளமான, நினைவுகூரத்தக்க பால்யம் அமையவில்லையே என்ற ஏக்கம் எப்போதும் உண்டு. தனிமையும், விளையாட்டுக் கூட்டாளிகளுக்காகக் காத்துக் கிடந்த கணங்களும் மட்டுமே நினைவில் இருக் கின்றன. ஆறாம் வகுப்புக்குப் பிறகான பள்ளி நினை வுகள் மட்டுமே இன்னும் மறக்காமல் இருக்கின்றன. பத்து வயது வரை ஆங்காங்கு சில காட்சிகள் மட்டுமே நினைவில் இருக்கின்றன.

வீட்டுத் தோட்டத்தில், அநேகமாக அன்றைய காலத்தில் எல்லார் வீட்டுத் தோட்டத்திலும் இருந்த ஈச்சம்பழ மரத்தின் கீழே, தோழிகள் ஒவ்வோர் வட்டம் போட்டு வைத்துவிட்டுப் பள்ளிக்குச் செல்வோம். பள்ளிக்கூடத்தில் 11 மணிக்கு இடைவேளைக்கான மணி அடித்தவுடன், ஒரே ஓட்டம் வீடு நோக்கி ஓடி வருவோம். அவரவர் வட்டத்தில் விழுந்திருக்கிற ஈச்சம்பழங்கள் அவரவருக்கு.

அக்கா, தங்கைகள், சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகள் எனப் பெரும்பாலும் உறவினர்களாய் இருக்கும் தோழிகளில் யாராவது ஒருத்தி, என் வட்டத் தில் இருக்கும் நல்ல தேர்ந்த ஈச்சம்பழத்தை, என் கையைத் தட்டிவிட்டு எடுத்துக்கொள்வாள். என் சார்பாக பேசி, வாங்கிக்கொடுக்க சகோதர, சகோதரி கள் இல்லாத நிலையில், ஏக்கமாய் பார்த்துக்கொண்டு, கிடைத்தவரை லாபம் என்று முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு, மணி அடிப்பதற்குள் பள்ளி நோக்கி ஓடும், பலவீனமான சிறுமியின் தோற்றம் அவ்வப்போது என் கண்ணில் தோன்றி மறையும்.

**வாசிப்பின் மீதான காதலை உங்களுக்குள் உண்டாக்கியவர் யார்?**

என் அப்பா. அப்பா என்றாலே கையில் செய்தித் தாளோ, புத்தகமோ வைத்துக்கொண்டு வெள்ளை கட் பனியனும் வேட்டியும் கட்டிக்கொண்டு, தீவிரமாகப் படித்துக்கொண்டிருக்கும் உருவம்தான் நினைவில் வரும்.என் அப்பா, வாசிப்பின் ருசியை எனக்குக் காட்டா மல் இருந்திருந்தால், நான் அடையாளமற்ற பல கோடிப் பெண்களில் ஒருத்தியாகவே இருந்திருப்பேன்.

**எப்போது கவிதை எழுத ஆரம்பித்தீர்கள்? நீங்கள் எழுதிய முதல் கவிதை எது?**

பெண்ணாக இந்தச் சமூகத்தை எதிர்கொள்ளப் போவதன் அச்சமே எனக்குள் கவிதையைக் கொடுத் தது. பெரும்பாலும் மனசுக்குள் காதல் வந்தால், அதிலும் முதல் காதல் வந்தால் கவிதை வரும் என்பார்கள். எனக்கு அச்சத்தில் இருந்துதான் கவிதை வந்தது.

‘அடுத்த வருஷமும் வசந்தம்
ஆர்ப்பாட்டமாய் வரும்;
வசந்தத்தின் வாசத்தை உணர
நான் மட்டும் இங்கிருக்க மாட்டேன்,
மணமாகிப் போயிருப்பேன்’ என்றெழுதியதே என் முதல் கவிதை.

**உங்கள் பெற்றோருக்கு நீங்கள் ஒரே பிள்ளையாக இருந்துள்ளீர்கள். இது உங்களுக்கு நெருக்கடியைத் தந்ததா? சுதந்திரத்தைத் தந்ததா?**

அப்பா மூலம் சுதந்திரத்தைப் பெற்றேன். அம்மாவின் வழியே நெருக்கடி கிடைத்தது.

**இளைய வயதிலேயே ஓர் அரசுப்பள்ளி ஆசிரியராகப் பணியேற்ற அந்த அனுபவம் எப்படி இருந்தது?**

நெருப்பைக் கையாளும் அனுபவம்தான்

சந்திப்பு: **புதுகை முருகுபாரதி**

ஆசிரியப் பணி. விரும்பி அருகில் சென்று அள்ளி அணைத்துக்கொண்டதில்லை. முழுமையாக விலகி நின்றதுமில்லை. குடும்பச் சூழலால், பத்தாம் வகுப்பு முடித்தவுடன், பள்ளிகளில் 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் தொழிற்கல்விப் பாடப்பிரிவாக அமல்படுத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தேன். அன்றைக்கு என்னைப் பொறுத்தவரை, படிப்பில் பின்தங்கியவர்களே ஆசிரியப் பயிற்சியில் சேர்வார்கள். நன்றாகப் படிக்கும் நாம் ஏன் ஆசிரியர் பயிற்சியில் சேர வேண்டும் என்ற தாழ்வு மனப்பான்மை மிகவும் துன்புறுத்தியது. ஆசிரியர் பயிற்சி படிக்கிறேன் என்று சொல்வதில்கூட எனக்கு மனத்தடை இருந்தது. எதிர்நிலையில் என் அப்பாவுக்கு நான் ஆசிரியராவது மிகவும் பிடித்தது.

படித்து முடித்து 20 வயதில் அரசுப்பள்ளி ஆசிரியரானபோது, என் பார்வையை, புரிதலைச் சரிசெய்தவர் அப்பாதான். கிராமப்புறத்தில் திசையறியாமல், கல்வியின் மீது நம்பிக்கை வைத்து பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு ஆசிரியர்களே குன்றா விளக்காய் இருந்து வழிகாட்ட வேண்டியவர்கள் என்பதைப் புரிய வைத்தார். பணியில் சேர்ந்த ஓராண்டில் என் மனநிலை முழுமையாக மாறியது. பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் நான் பல ஆண்டுகள் சென்றிருக்கிறேன். விடுமுறை நாள்கள், மறியல்கள், கடையடைப்புகள், பேருந்து ஓடும் நாள்கள், ஓடாத நாள்கள் எவையும் பொருட்டின்றி பணியாற்றியிருக்கிறேன்.

இன்றைய மனநிலைக்கு, கற்பிக்கும் மனநிலையில் இருந்து விலகி வந்துவிட்டேன். பள்ளிகளில் சூழல்கள் தற்போது வெகுவாக மாறிவிட்டன.

**சிறுபத்திரிகைகளுடனான உங்களின் எழுத்தனுபவமும் தொடர்பும் எப்படி அமைந்தன?**

கையெழுத்துப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகத்தான் என் எழுத்துப் பயணம் தொடங்கியது. மிகச் சிறிய காலம் மட்டுமே சிற்றிதழ்களில் எழுதினேன். பத்திரிகைகளுக்கு எழுதுவது என்பது குறைவுதான். கேட்டு வாங்கி வெளியிடுபவர்களுக்குப் படைப்புகள் கொடுத்திருக்கிறேன். பெரும்பாலும் புத்தகங்களாகத்தான் வெளியிட்டிருக்கிறேன்.

**சிறிய கிராமத்தில் முற்போக்கான சிந்தனைகளுடன் செயல்பட்டவர் நீங்கள். இதற்கான எதிர்விளைவுகள் வீட்டிலும் வெளியிலும் எப்படி இருந்தன..?**

வீட்டில் பெரிதாக எதிர்ப்புகள் இருந்ததில்லை. வீடு எப்போதுமே என் விருப்பத்திற்கு இணக்கமானது. வெளியாட்கள் சொல்லும் விமர்சனங்களுக்கு நான் காது கொடுப்பதில்லை.

**மணநாளிலேயே இணையரின் கவிதைகளோடு, உங்கள் கவிதைகளையும் சேர்த்து, 1998-இல் 'என் மனசை உன் தூரிகை தொட்டு' எனும் கவிதை நூலை வெளியிடும் எண்ணம் எப்படி வந்தது..?**

வழக்கமான திருமண வீடுகளைப்போல் இருக்க வேண்டாம் என்று நூல் வெளியீடு என முடிவெடுத்தோம். அப்போதுதான் நான் எழுதத் தொடங்கிய காலம். புத்தகம் போடும் அளவுக்கு என்னிடம் கவிதைகள் இல்லை. எனவே, இருவரின் கவிதைகளையும் சேர்த்து, ஒரே தொகுப்பாக வெளியிடலாம் என்ற யோசனையை முருகேஷ் சொன்னார். அதற்கான முழுப் பொறுப்பையும் அவரே ஏற்றுச்செய்தார். திருமணத்திற்கு முதல் நாள் வரவேற்பன்று, எங்களின் நூல் வெளியீட்டு விழாவாக நடத்தினோம்.

**திருமணத்திற்கு முன்பாக உங்கள் இணையரான கவிஞர் மு.முருகேஷுக்கு நீங்கள் எழுதிய கடிதங்கள் 'கனவிருந்த கூடு' எனும் நூலாக வெளியாகி, பரவலான பாராட்டுகளையும் விமர்சனங்களையும் பெற்றது. கடிதங்களை நூலாக உருவாக்கும் யோசனை எப்படி உருவானது..?**

இதுவும் முருகேஷின் யோசனைதான், எனக்குத் தோன்றவில்லை. அவருடைய கடிதங்களையும் சேர்த்திருக்கலாம் என்று அம்பை, பிறகு சொன்னார். கி.ரா.வும், கல்யாண்ஜியும் எழுதியிருந்த வாழ்த்துரைகளை இப்போது படிக்கையில், என் எழுத்துப் பயணத்தை முன்னமே கணித்ததுபோல் இருக்கும்.

**தமிழினி வெளியீடாகத் தங்களின் முதல் கவிதை நூல் 'நீரிலலையும் முகம்' வெளியாகி, பல்வேறு அமைப்புகளின் விருதுகளையும் பரிசுகளையும் பெற்றது. அப்போதைய தங்களின் மனநிலை குறித்து..?**

முதல் புத்தகத்துக்குக் கிடைத்த பரவலான கவனிப்பும் அங்கீகாரமும் தொடர்ந்து எழுதுவதற்கான மனநிலையைக் கொடுத்தது. தமிழினி பதிப்பகம் வசந்தகுமார் அண்ணாச்சி, 'நீங்க ரொம்பப் பிரபலமா, வரிசையா உங்க புஸ்தகத்தைக் கேட்டு வாங்குறாங்களே?' என்றார். உண்மையில் எனக்கென்று எந்த அடையாளமும் உருவாகாத காலகட்டம் அது.

**கவிதைகளை எழுதிக்கொண்டிருந்த உங்களுக்குச் சிறுகதை எழுதும் ஆர்வம் எதனால் வந்தது..?**

கவிதை, சிறுகதை, நாவல் என்றெல்லாம் எழுத்தில் படிநிலைகள் இருப்பதாக நான் நினைக்கவில்லை. கவிதையெழுதுவதற்கான உத்வேகம் போன்றே, சிறுகதை எழுதவும் எண்ணம் பிறந்தது. உரைநடை மீதான ஆர்வம் சிறுகதை, நாவலுக்குள் என்னை நகர்த்தியது.

குறிப்பாக, பெண் வாழ்வு சார்ந்து என்னுடைய அனுபவங்களையே நான் கவிதை, கதைகளுக்குள் எழுதியிருக்கிறேன்.நான் பார்த்து வளர்ந்த,என் கண்முன் நடமாடிய பல பெண்களின் வாழ்க்கை என் கதைகளுக்குள் இருக்கிறது. முதன்முதலில் மாதவிலக்கு நாள்களைக் கையாளத் தெரியாததுடன், அதைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் தயக்கம் காட்டும் பெண்ணைப் பற்றிய கதைதான், கணையாழியில் வெளியான என்னுடைய முதல் கதை, 'பட்டுப் பூச்சிகளை தொலைத்த ஒருபொழுதில்.'

**பெண் வாழ்வு சார்ந்து என்னுடைய அனுபவங்களையே நான் கவிதை, கதைகளுக்குள் எழுதியிருக்கிறேன். நான் பார்த்து வளர்ந்த, என் கண்முன் நடமாடிய பல பெண்களின் வாழ்க்கை என் கதைகளுக்குள் இருக்கிறது.**

இந்தக் கதையை இன்றைக்குள்ள ஒரு நவீன பெண்ணால் புரிந்துகொள்ள முடியுமா என்பது சந்தேகமே. 'பிளடி ஃபக்' என கடந்துபோக வாய்ப் பிருக்கிறது. ஆனால் நாப்கின், (சன் டிவிபோல், நாப்கினுக் குப் பொதுப்பெயர் விஸ்பர்தான் எங்கள் காலத்தில்) வாங்கவும், அதை அப்புறப்படுத்தவும் நரக வேதனை அனுபவித்த பெண்கள் என்னுடன் இருந்திருக்கிறார் கள். கண்கொத்திப் பாம்பாய் ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் வரும் நாள்களைக் கவனத்தில் கொண்டு, குழாயடியில் நின்று 'இன்னுமா தீட்டு வரலை' எனக் கேட்கும் பெண்களுக்கு மத்தியில்தான் எங்கள் வாழ்க்கை இருந்தது.

கழிப்பறை இல்லாத காலங்களில் வீட்டுப் பின்புறத் தோட்டத்தில் மலங்கழிப்பது வெட்கம் பிடுங்கித் தின்னும் செயல். முற்றத்தில் சுற்றி ஐந்தாறு பேர் ஆண் களும் பெண்களுமாய் வேலை செய்துகொண்டிருக்கும் போது, குளித்தாக வேண்டிய சூழலைப் பார்த்திருக் கிறீர்களா? இயல்பாக எடுத்துக்கொண்ட பெண்கள் இருந்திருக்கிறார்கள். பொருந்திப்போக முடியாத பெண்களின் அனுபவங்களே என் கதைகள்.

**படைப்புவெளியில் தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இப்படி தொடர்ந்து இயங்குவதற்கான உத்வேகத்தை எங்கிருந்து பெறுகிறீர்கள்?**

எழுதுவதற்கான உத்வேகத்தையும் எழுத்துதான் தருகிறது. வெவ்வேறு விதமான எழுத்தனுபவங்கள் எப்போதுமே எழுத்தை நேசிக்கச் செய்கின்றன. கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரைகள் என்று எழுதும் நேரத் தைய, தேவையை எழுத்து மட்டுமே தீர்மானிக்கிறது. சமீப வருடங்களில் நாவல் எழுதும் பரவச அனுபவத்தை நான் மிகவும் அனுபவிக்கிறேன். புதுப் புதுக் களங்களை உருவாக்குதல், சவாலான கதா பாத்திரங்களை உயிர்ப்பித்தல், மனித மனங்களின் ரகசியங்களை, சிடுக்குகளை, முரண்களை அறிவதற்கான வழியாக நாவல் எழுதுவது அமைகிறது.

ஒரு கதாபாத்திரம் எப்படித் தன்னை வளர்த்துக் கொள்கிறது என்பதை நாவலில் நிதானமாக கண்டு ரசிக்கலாம். நான்தான் அந்தப் பாத்திரத்தின் கர்த்தாவாக இருக்கலாம். ஆனால் என் கட்டுப் பாட்டை மீறி, என் விருப்பு வெறுப்பை மீறி, அந்தக் கதாபாத்திரம் தன்னை, தன் விருப்பத்துக்கு வளர்த்துக் கொண்டு செல்வது விந்தையான நிகழ்வு. நாவலில் நடக்கும் ரசவாதம். வரலாற்றுக் காலமோ, வரலாற் றுக்கு முந்தைய காலமோ, மனித மனம் விசித்திரமானது. அந்த விசித்திரத்தை அறியும் முயற்சியே கலை, இலக்கியம் எல்லாம்.

விசித்திரத்தை அறிவதற்கான இந்த எழுத்துப் பயணம் எப்போதுமே சோர்வைத் தராது.

**தங்களின் எழுத்துக்கான முன்னோடியென்று யாரைச் சொல்வீர்கள்?**

தமிழ் இனத்தின் சித்திரத்தைத் தம் எழுத்தில் கொண்டு வந்துள்ள ஒவ்வொரு படைப்பாளியுமே என் முன்னோடிகள் தான். எனக்கு முன்னோடியாக கொள்ள பல்லாயிரம் ஆண்டு நீண்ட பாரம்பரியம் கொண்ட புலவர்களின் வரிசையே இருக்கிறது.

ஒக்கூர் மாசாத்தியார், நக்கீரர், கபிலர், அம்மூவனார், பெருந்தேவனார், அவ்வையார், கணிமேதாவியார், கூடலூர் கிழார், ஆண்டாள், காரைக்கால் அம்மையார், செங்கோட்டை ஆவுடையக்கா என நீண்ட மரபில் வந்த புலவர்கள் ஒவ்வொருவருமே என் எழுத்துக்கான முன்னோடி. என்னை வசீகரிப்பவர்கள்; எழுதத் தூண்டுபவர்கள்.

உரைநடையிடப்பட்ட செய்யுளான சிலப்பதிகாரம் தொடங்கி, 18-ஆம் நூற்றாண்டில் முதல் உரைநடை எனக் கொண்டாடப்படும் ஆனந்த ரங்கப்பிள்ளை தினப்படி சேதிக்குறிப்பு, பாரதியின் வசனக் கவிதைகள், கட்டுரைகள், வ.உ.சியின் தமிழ், நாமக்கல் கவிஞரின் என் கதை என தொடர்ந்து நவீன உரைநடையின் பிதாமகர்

**எல்லா நேரமும் தோட்டத்தில் உட்கார்ந்து பாத்திரம் தேய்க்கும்போதும், தண்ணீர் இறைத்து ஊற்றும்போதும், நம்முடன் இருப்பது பெரும்பாலும் பறவைகள்தான்.**

களான புதுமைப்பித்தன், தி.ஜானகிராமன், கி.ராஜ நாராயணன். சுந்தர ராமசாமி, வண்ணநிலவன், வண்ண தாசன், பிரபஞ்சன், ஜெயமோகன், இமையம், அம்பை, உஷா சுப்பிரமணியம் என என்னை ஈர்த்தும், பாதித்துக் கொண்டும் இருக்கும் எழுத்தாளர்கள் பலர்.

**'வந்தவாசிப் போர் 250' எனும் நூல் ஒரு பல்கலைக்கழகம் செய்யவேண்டிய பெரிய முயற்சி. அதைச் செய்ய வேண்டுமென்கிற எண்ணம் வரக் காரணம் உங்கள் ஊரின் மீதான பற்றுதானே..?**

ஊரைப் புரிந்துகொண்டதே 'வந்தவாசிப் போர்-250' என்றொரு புத்தகத்தைத் தொகுத்த பிறகுதான். தினம் கடந்துசெல்லும் பாதை, கடைவீதி, கோயில், கடைகள் என்றாலும் 40 வயதுக்குப் பிறகு, அவை ஒவ்வொன்றின் பின்னாலும் இருந்த வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்தேன். வரலாறு, நம் ரத்தநாளங்களைப்போல் நமக்குள் இருப்பதை உணர்ந்த பிறகே என் எழுத்துக்கு ஒரு முழுமை வந்தது.

வரலாறை அறிதல் என்பது, வெறும் கடந்த காலத்தை அறிதல் மட்டுமல்ல. நிகழ்காலத்தில் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள நமக்கு அவசியம் வேண்டிய கடந்த காலம். கடந்த காலத்துக்கு உயிர்கொடுத்து பார்க்கும் கலையைக் கற்றுக்கொடுத்த அன்பிற்குரிய டாக்டர் முராஜேந்திரன் அவர்களை நன்றியுடன் நினைத்துக்கொள்கிறேன்.

**வரலாற்று நாவல்களில் அகவுணர்வை மிக நுட்பமாகப் பேசிய பெண்மொழியிலான சிறந்த நாவல் என்று கொண்டாடப்பட்ட 'கங்காபுரம்' நாவலுக்கான வரவேற்பு குறித்து..?**

என்னுடைய முதல் நாவல், கங்காபுரம். ஒரே வாரத்தில் நாவல் சென்றடைந்த விதம் பிரமிப்பைத் தந்தது. எத்தனை வாசகர்கள், எத்தனை ஊர்கள், வயது வித்தியாசமின்றி எல்லா வயதினரும் கங்காபுரத்தை வரவேற்றுக் கொண்டாடியதை மறக்கமுடியாது.

**திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க. பிரிந்த காலத்தையொட்டி, ஒரு நெசவாளர் குடும்பத்தின் பின்னணியில் எழுதப்பட்ட 'சாலாம்புரி' நாவல், உங்களின் வாழ்க்கை அனுபவமென்று சொல்லலாமா..?**

என் ஊரார், உறவினர்கள், குடும்பத்தினர் என என் பால்யத்தின் பகுதியாக இருந்தவர்கள் பற்றிய கதைதான் 'சாலாம்புரி.' நான் அப்போது பார்த்த திராவிட இயக்க வாழ்வியலைத்தான் நாவலாக்கினேன். சாலாம்புரி அடிப்படையில் என் அப்பாவின் கதை. அறுபத்தைந்து வயதில் என் அப்பா தன்னுடைய சுயசரிதையை எழுத முனைந்தார். 20 பக்கங்கள் மட்டுமே அவர் எழுதியிருந்த வேளையில் மரணம் முந்திக்கொண்டு அவரை அழைத்துக்கொண்டது. அப்பாவின் கதை பாதியில் நின்றுபோனதில் பெரும் இழப்பு எனக்கு. அவரின் நினைவுகளில் எங்கள் ஊரின் மூன்று தலைமுறை இருந்தது. மூன்று தலைமுறைகளின் வழியாக அவர் பெற்றிருந்த அனுபவம் பெரிது. இழந்த பிறகுதான் அருமையை உணர முடியும் என்பது போல், என் அப்பாவை நான் எழுதவைத்துப் பார்க்காமல் விட்டதைப் பெரிய இழப்பாக பார்க்கிறேன்.

**122 வாரங்கள் ஆனந்த விகடனில் தொடராக வெளிவந்த 'நீரதிகாரம்' நாவலை எழுதுவதற்கான உத்வேகத்தை எங்கிருந்து பெற்றீர்கள்..?**

உத்வேகம் ஒவ்வொரு படைப்புக்குமே தேவைதான். ஒரு வரலாற்று நாவலை 122 வாரங்கள் எழுதுவதற்கு, அடிப்படையில் வரலாற்றுத் தரவுகள் தேவை. கதைகளனுக்கு உதவும் தரவுகள் இருப்பின் கதையை

வளர்க்கலாம். நீரதிகாரம் தொடருக்காக நான் மேற்கொண்ட களப்பயணங்கள், தொடர்புடைய மக்கள் பகிர்ந்துகொண்ட கதைகள், ஆவணக்காப்பகம், நூலகங்களில் கிடைத்த ஆவணங்கள் எல்லாம் கதையை வளரச் செய்தன. இன்னும் 100 அத்தியாயங்கள் எழுதலாம். நானாகவே 122 என்று குறைத்துக் கொண்டேன்.

**'நீரதிகாரம்' நாவலின் நாயகன் பென்னி குக்கின் கல்லறையைப் பார்ப்பதற்காகவே லண்டன் சென்று வந்த அனுபவம் பற்றி..?**

பென்னியின் கல்லறை மட்டுமல்ல, அவர் படித்த தொடக்கப் பள்ளி, படித்த கிழக்கிந்திய கம்பெனியின் ராணுவ கல்லூரி, வேலை பார்த்த ராயல் இன்ஜினியரிங் கல்லூரி, அவர் வாழ்ந்ததாக நம்பப்படும் வீடு உட்பட, பென்னி குக் தொடர்புடைய அனைத்து இடங்களுக்கும் சென்று வந்தேன். தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் கிடைக்காத புகைப்படங்கள், ராணுவ அதிகாரிகள் பற்றிய குறிப்புகள், பெரியாறு அணை ஒப்பந்தம் உள்ளிட்டவற்றை பிரிட்டீஷ் நூலகத்தில் பார்ப்பதற்காக இங்கிலாந்து பயணத்தைத் திட்டமிட்டேன். என் எழுத்துப் பயணத்தில் மறக்க முடியாத பயணம், அந்த 18 நாள்கள்.

ஆங்கிலேயர்களின் வாழ்க்கை முறை, வரலாற்றைப் பாதுகாப்பதில் அவர்களுக்கு இருக்கும் அர்ப்பணிப்பும் ஈடுபாடும், வயது முதிர்ந்தோருக்கு அவர்கள் அளிக்கும் மரியாதையான வாழ்வு எனப் பல விஷயங்கள் வியக்க வைத்தன. இந்தியாவைத் தவிர்த்து வேறொரு நாட்டினை வசிப்பதற்காக தேர்வு செய்யச் சொன்னால் என் தேர்வு நிச்சயம் இங்கிலாந்துதான்.

**தங்களின் தேவதாசிப் பெண்களின் கலையும் வாழ்வும் பற்றி ஆராய்ச்சி செய்து, முனைவர் பட்டம் பெற்றிருக்கிறீர்கள். அந்த ஆய்வு எண்ணம் எதனால் வந்தது?**

உண்மையில் அப்படியொரு தலைப்பில் ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்படி எனக்குள் தோன்றியது என்பது பற்றி முடிவுக்கு வர முடியவில்லை. இரண்டாயிரத்தின் தொடக்கத்தில், சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வுக்காக இந்த தலைப்பைத் தேர்வு செய்தேன். பல்வேறு காரணங்களால் தலைப்பைப் பதிவுசெய்ய முடியாமல் அலையவிட்டார்கள். என்னுடைய வசிப்பிடம் பல்கலைக்கழகத்தின் புவியியல் எல்லைக்குள் வரவில்லை என்ற காரணமும் அதில் ஒன்று.

அரசுப் பணியில், பதவி உயர்வுக்கோ, ஊதிய உயர்வுக்கோ பயன் கொடுக்கமுடியாத முனைவர் பட்டத்திற்காக அலைந்ததுபோதும் என அந்த எண்ணத்தை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டேன். என்னுடைய தொகுப்புப் பணிகள் வெளியாகும்போதெல்லாம் நண்பர்கள், 'இதுவொரு முனைவர் பட்ட ஆய்வுக்கும் மேலான வேலை' என்று. இந்த நற்சான்றே போதுமென்று பத்தாண்டுகள் சென்றது.

தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக என்னுடைய மரியாதைக்கும் அன்பிற்கும் உரிய முனைவர் ம.ராஜேந்திரன் இருந்த நேரம். ஒருமுறை அவரிடம் பேசும்போது, என்னுடைய முனைவர் பட்ட ஆய்வுக்காக அலைந்த கதையைச் சொன்னேன். அவர் உடனே, “தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பதிவுசெய்யுங்களேன்“ என்றார். உடனே, நானும் முருகேஷும் விண்ணப்பித்தோம். முருகேஷ், தொழில்பிரிவில் பட்டயப் படிப்பு முடித்திருந்ததால், ஆய்வுக்குத் தேவையான கல்வித் தகுதி அவருக்கு இல்லாமல் போனது.

கல்வித் துறையின்கீழ், பதிவு செய்து, ஆய்வை உரிய காலத்தில் முடித்தேன். 20-ஆம் நூற்றாண்டில்தான் பெண்களுக்குப் படிப்பறிவு வந்தது, பெண்களுக்குப் பொது வாழ்வு ஒன்று இருந்ததில்லை எனப் பல கருத்துகள் நிலவுகின்ற சூழலில், கல்வியறிவு பெற்ற, பல்வேறு மொழிகள் பயின்றிருந்த, கலை தேர்ச்சி மிக்க பெண்களாக இருந்த தேவரடியார்கள் கல்வி பற்றி ஆய்வு செய்தது மிகுந்த நிறைவு தந்த காலம்.

**இதிகாச காலம் தொட்டு, இன்றைக்கு வரைக்குமான பெண்களின் அகமனவுலகைக் குறிப்பாக காமத்தைப் பற்றி எழுதிய 'இந்திர நீலம்' சிறுகதை நூல் போதிய கவனத்தைப் பெறவில்லை என்று நினைத்ததுண்டா..?**

எந்தப் படைப்பு குறித்தும் எழுதி வெளியான பிறகு நான் கவலைப்படுவதோ, அதுகுறித்து யோசிப்பதோ கிடையாது.

'இந்திர நீலம்' பெரும் வரவேற்பைப் பெற்றது. 'கனலி' இணைய இதழில் வெளியானபோதே ஆயிரக்கணக்கான வாசகர்கள் அக்கதை குறித்து பெரும் விவாதம் நிகழ்த்தினார்கள். கதையின் கருப்பொருள் சார்ந்து ஆரோக்கியமான விவாதங்களும் நடந்தன. பெண்ணின் பாலியல் இச்சையை வெளிப்படையாகப் பேசும் கதைகளை எழுதலாமா போன்ற அர்த்தமற்ற விவாதங்களும் நடந்தன. கதையைப் படித்த பல பெண்கள் தங்களின் சொந்த அனுபவத்தை, வெளிச்சொல்லமுடியாத அனுபவத்தைப் பேசுவதாக ஆத்மார்த்தமாக எனக்குப் பகிர்ந்திருக்கிறார்கள். கதையின் ஆழம் அதுவே. யாருடைய அனுபவத்தை வெளிக்கொண்டு வரவேண்டுமோ, அது நடந்திருக்கிறது.

தொகுப்பில் இருக்கிற ஒவ்வொரு கதையும் எனக்கு மிக நெருக்கமானவை. நான் நேசித்து, நீண்ட நாள்கள் எடுத்துக்கொண்டு எழுதியவை.

**20 ஆண்டுகளுக்கு முன் தமிழின் தொடக்ககால பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தேடியெடுத்து 'மீதமிருக்கும் சொற்கள்' எனும் நூலாகத் தொகுக்கும் எண்ணம் எதனால் உருவானது?**

2004-ஆம் ஆண்டு லீனா மணிமேகலையோடு ஒருநாள் அசோக்நகரில் தேநீர் குடித்துக் கொண்டிருந்தபோது, லீனா, 'நாம் ஏன் பெண் எழுத்தாளர்கள் பற்றி ஒரு தொகுப்பு கொண்டுவரக்கூடாது?' என்று என்னிடம் கேட்டார்.

ஏற்கெனவே சாகித்திய அகாடமி மூலம் உலகத் தமிழ் பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுப்பு 'கனவும் விடியும்' என்றொரு தொகுப்புப் பணியை செய்துமுடித்திருந்தேன். (2004 இல் நான் கொடுத்த தொகுப்பை 2021-இல் புத்தகமாகக் கொண்டு வந்தார்கள் சாகித்திய அகாடமியினர்.)

லீனா இப்படிக் கேட்டவுடன் ஏற்கெனவே கவிதைகள் செய்திருக்கிறோம், இப்போது சிறுகதை என்று உற்சாகமானேன். சின்னதாக ஒரு பொறி கிடைத்தால், அதில் பேய்த்தனமாக இறங்குவதை வழக்கமாகக் கொண்டவள் நான். அதன் நடைமுறைச் சிக்கல்கள் எதைப் பற்றியும் நான் யோசிக்காமல், நிச்சயமாகச் செய்யலாம் என்று லீனாவிடம் சொல்லிவிட்டு, உடனடியாக யார் யாரையெல்லாம் முக்கிய எழுத்தாளர்கள் என்று ஒரு பட்டியல் தயாரிக்க ஆரம்பித்தோம்.

தமிழில் 'அப்பொழுது எழுதிக்கொண்டிருந்த பெண் எழுத்தாளர்கள் மற்றும் முன்பு எழுதிய பெண் எழுத்தாளர்கள்' என்று வரையறை வைத்துக்கொண்டு, தொகுப்புப் பணியைத் தொடங்கினேன்.

இந்தத் தொகுக்கும் பணி என்பது, ஒரு படைப்பாளருடைய நேரத்தை மட்டுமல்ல, படைப்பூக்கத்தையும் நிச்சயமாகக் குலைக்கின்ற செயல்தான். தொகுக்கும் பணி, வரலாற்றைத் தேடிச் செல்லுதல் என்பதெல்லாம் பெரும்பாலும் படைப்புக்கு எதிரான மனநிலையை பல நேரங்களில் கொடுக்கும். இக்கருத்தில் தனி நபர் வேறுபாடுகள் நிச்சயமாக இருக்கும். ஊரெல்லாம் அலைந்து திரிந்து என்னால் இதுபோன்ற பணிகளைச் செய்ய முடியும். படைப்பூக்கம் பாதிக்கப்பட்டாலும் வரலாற்றை நினைவூட்டுவதற்காகத் தொகுப்பு பணிகள் செய்யும்போது நான் பெரிதாக வருத்தப்பட்டதில்லை.

2004-இல் தொடங்கிய இந்தப் பணியை 2006-இல் முடித்தேன். இரண்டு வருடம் எடுத்துக்கொண்டேன். அப்போது எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்து, அவர்களுக்கு மூன்றரை வயது இருக்கும். வந்தவாசியில் இருந்து அதிகாலை ஐந்து முப்பது மணி அளவில் பேருந்து ஏறி, எட்டு முப்பதுக்குச் சென்னை வருவேன். பாரிமுனையில் இருக்கும் குறளகத்திற்கு பேருந்து வரும். அங்கு இறங்கி, குளத்தூரில் இருந்த ரோஜா முத்தையா நூலகத்திற்குச் செல்வேன். இப்பொழுது ரோஜா முத்தையா ஆய்வு நூலகமாக தரமணியில் செயல்படுகிறது. அப்போது அங்கு மிகுந்த கெடுபிடி உண்டு. இப்போது போன்று மின் நூலகம் கிடையாது. அப்போது அவ்வளவு இணக்கமான சூழல் இல்லை. ஒரு நாளைக்கு நான்கு புத்தகங்கள் கேட்டோம் என்றாலே யோசிப்பார்கள். முதலில் கொடுத்ததைப் படியுங்கள் என்று சொல்வார்கள். தேவையான கதைகளை நகல் எடுத்துக்கொண்டால், சற்று நிதானமாக வீட்டிற்கு சென்று படிக்கலாம் என்று ஒரு எண்ணம் இருந்தது. அப்போது நகல் எடுப்பதற்கும் நிறைய தொகை. ஒரு பக்கத்திற்கு வழக்கமாக வெளியே இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் என்றால், அங்கு இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிகமான தொகை இருக்கும். மறைமலை அடிகள் நூலகம், கலைமகள் காரியாலயம் உள்ளிட்ட நூலகங்களிலும் சிறுகதைத் தொகுப்புகள் வாசித்து, குறிப்புகள் எடுத்தேன். இத்துடன், மூத்த எழுத்தாளர்களின் சேகரிப்பில் இருந்த பழைய தொகுப்புகளையும் தேடி, பல்வேறு இடங்களுக்கு ஒவ்வொரு வாரமும் பயணம் செய்தேன். இத்தொகுப்புப் பணியின் போதுதான் தியடோர் பாஸ்கரன் அவர்களைச் சந்தித்தேன். இன்றும் தொடரும் அருமையான நட்பு.

அப்படி கொஞ்சம் கொஞ்சமாக, ஒவ்வொரு இடத்திற்கும் அலைந்து திரிந்து, ஒரு பட்டியலை எடுத்துப் பார்க்கும்போது, முதலில் நான் ஒரு 200 பெண் எழுத்தாளர்களின் பெயர்களை எழுதி முடித்திருந்தேன். இதற்கே ஆறு மாதங்கள் ஆகிவிட்டன.

ஏனென்றால் அதற்கு முன்பாக, இது சார்ந்த குறிப்புகளோ, தரவுகளோ கிடையாது.

முதன்முறையாகப் பெண் எழுத்தாளர்கள் யார் என்று ஒரு நீண்ட பட்டியலை எடுக்கும்போது, அது மிகப்பெரிய சிரமமாக எனக்கு இருந்தது. இதன் பிறகுதான் சுவாரஸ்யமே. பட்டியலை எடுத்துக்கொண்டு, மூத்த எழுத்தாளர் ஐயா வல்லிக்கண்ணனைப் பார்க்கச்சென்றேன். அவரிடம், 'பெண் எழுத்தாளர்கள் கதைகளை தொகுக்கப் போனேன். 'இவர்களில் யாரெல்லாம் உங்களுக்கு நேரடியான அறிமுகம் இருக்கிறது? இவர்களுடைய புத்தகங்கள் எல்லாம் எங்கு கிடைக்கும்?' என்று கேட்டு, அவரிடம் பட்டியலைக் கொடுத்தேன். அதை வாங்கிப் பார்த்த அவர், ஒரு பேனாவை எடுத்து வேகவேகமாகச் சில பெயர்களை அடிக்க ஆரம்பித்தார்.

200 பேரில் சுமார் 25 பெயரை அடித்துவிட்டார். ஏனென்று கேட்க, 'இவர்கள் எல்லாம் பெண் பெயரில் எழுதிய ஆண் எழுத்தாளர்கள்' என்று கூறினார்.

இப்படி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக நாள்களைத் தின்று தொகுப்புப் பணி நடந்தது. அது ஒரு மன நிறைவான காலம். அநுத்தமா, கிருத்திகா போன்ற எழுத்தாளர்களையும் வசுமதி ராமசாமியின் மகள், வை.மு.கோ.வின் பெயரன், ஸரோஜா ராமூர்த்தியின் மகன் ஜெயபாரதி, கு.ப.சேது

அம்மாளின் உறவினர் போன்ற எழுத்தாளர்களின் குடும்பத்தினரையும் சந்தித்தது சிறப்பான அனுபவத்தைக் கொடுத்தது. தங்கள் குடும்பத்தில் இருந்த எழுத்தாளர் குறித்த அடையாளமே தெரியாத குடும்பங்களையும் பார்க்கமுடிந்தது. மறக்க விரும்புகிற அல்லது மறைக்க விரும்புகின்ற பெண் எழுத்தாளர்களையும் சில இடங்களில் பார்க்கமுடிந்தது. அநுத்தமா மற்றும் கிருத்திகா வினுடைய சந்திப்பு மிகவும் ஊக்கமளிக்கும் சந்திப்பாக இருந்தது,

அநுத்தமாவை சந்தித்தபோது அவருக்கு 83 வயது இருக்கும். அதற்குப்பின் ஓரிரு வருடங்களில் அவர் மறைந்துவிட்டார். அவர் எழுத்தாளராக வாழ்ந்த அந்தக் காலத்தைப் பகிரும்பொழுது அவ்வளவு ஆச்சரியம் நிறைந்ததாக இருந்தது. பறவைகளைப் பற்றி அவர்கள் ஒரு தனி புத்தகமே எழுதி இருக்கி றார். அப்போது அவரிடம், ‘அம்மா எப்படி உங்களுக்கு இந்த ஆர்வம் வந்தது?’ என்று கேட்டேன்.

‘பறவைகளுக்கும் பெண்களுக்கும் உறவு இல்லாமல் இருக்குமா? எல்லா நேரமும் தோட்டத்தில் உட்கார்ந்து பாத்திரம் தேய்க்கும்போதும், தண்ணீர் இறைத்து ஊற்றும்போதும், நம்முடன் இருப்பது பெரும்பாலும் பறவைகள்தான். இதற்கு என்ன தனியாக ஆர்வம் வேண்டி இருக்கிறது?’ என்றார். ‘பளார்’ என்று அறை ந்தது போலிருந்தது.

ஒரு பெண்ணிற்கு இதை எழுதுவதற்கு என்ன வாய்ப்பு இருக்கும் என்ற ஒரு வழக்கமான பார்வை இருக்கிறது. அதை அநுத்தமா அழுத்தமாக ஒரு விநாடியில் தூக்கி எறிந்துவிட்டார்.

அதன்பிறகு கிருத்திகாவின் சந்திப்பும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. எப்படி ஓர் எழுத்தாளரை ஒரு வீடு கொண்டாடும் என்பதை அவர் வீட்டில் பார்த்தேன். செல்போன் வராத காலமாக இருந்த நேரத்தில், நான் அவருடைய வீட்டின் லேண்ட்லைன் தொலைபேசிக்குத் தொடர்புகொண்டு செய்திகளைத் தெரிவிப்பேன். மிகச் சரியான நேரத்தில், என்னுடைய வருகைக்கான தயாராகி உட்கார்ந்திருப்பார்.

**வரலாற்றறிஞர் ப.சிவனடியின் 'இந்திய சரித்திரக் களஞ்சியம்' எனும் 140 ஆண்டுக்கால உலக- இந்திய- தமிழக வரலாற்று நூலைத் தேடியெடுத்து பதிப்பித்திருக்கிறீர்கள். அது உங்களின் கனவு முயற்சியா..?**

இதுவும் எதேச்சையாக நடந்ததுதான். எங்களின் திருமணத்தன்று இலக்கிய வட்டம் நாராயணன், சிவனடியின் இந்திய சரித்திரக் களஞ்சியத்தின் ஒரு தொகுதியை எங்களுக்குப் பரிசளித்திருந்தார். திருமணம் முடிந்த பத்தாண்டுகளுக்குப் பிறகு, அந்தப் புத்தகத்தை மறுபடியும் படித்தபோது, உலக வரலாற்றில் சிவனடியைப் போன்ற வரலாற்றறிஞர் இல்லையென்று தோன்றியது.

அவரின் எழுத்துகளைச் சமகால வாசகர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், வரலாற்று ஆர்வலர்கள் வாசிக்க வேண்டும் என்பதற்காக மறுபதிப்பு கொண்டு வரலாம் என்று நினைத்தோம்.

எங்களின் நண்பரும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியுமான டாக்டர் மு.ராஜேந்திரன், இ.ஆ.ப. கொடுத்த உற்சாகத்தினாலும் உதவியினாலும் மிகப் பெரிய பதிப்புப் பணியைச் செய்ய முடிந்தது.

**நீங்கள் இதுவரை பெற்ற விருதுகளில் பரிசுகளில் மிகவும் பிடித்தமானதாக எதை நினைக்கிறீர்கள்..?**

ஒவ்வொரு விருதும் என்னுடைய படைப்புகளுக் காகக் கொடுக்கப்பட்டவை. விருதுகளில் இருந்து விலகியிருக்கும் மனோபாவம் கொண்ட நான், அதற்காகவே அவற்றை நான் ஏற்றுக்கொண்டி ருக்கிறேன். விருது வழங்கும் விழா மேடைகளிலும் நான் பெருமளவு விலகியே தான் இருந்திருக்கிறேன்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், நாமக்கல் பாவை கல்லூரி நிறுவனங்கள் வழங்கிய விருது விழாவினைச் சொல்லலாம். கவிஞர் சிற்பி, ஏன் இவ்விருது வழங்கப்படுகிறது என்பதற்காக என் படைப்புகள் குறித்த திறனாய்வு செய்து பேசினார். ஒரு படைப்பாளியின் இடம் என்ன, மிக நீண்ட மரபுடைய தமிழ் இலக்கிய மரபில் நம் படைப்புகள் எங்கிருக்கும் என்ற கேள்விகளுக்குப் பதில் போல் அவர் உரை இருந்தது. எனவே, மனதுக்கு நெருக்கமாய் இருந்தது அவ்விழா.

**இன்றைக்கு எழுதிக்கொண்டிருக்கும் படைப்பாளி களில் மிகவும் ஈர்த்த எழுத்து யாருடையது?**

லஷ்மி சரவணகுமார், கார்த்திக் புகழேந்தி, அகர முதல்வன், கமலதேவி, ஜாதீபா, மானசீகன், கார்த்திகைப் பாண்டியன், கார்த்திக் பாலசுப்பிரமணியம் என இந்த வரிசை நீளமானது. பொதுவாக, பட்டியல் என்றாலே விடுபடல்கள் வந்துவிடும். நான் பெரும்பாலும் அதை விரும்புவதில்லை. தற்போது வாசித்துக் கொண்டிருக்கும் நூல்களில் இருந்து உடனடியாக மனத்தில் எழும் பெயர்களாக இதனைக் குறிப்பிட்டுள்ளேன்.

**உங்களின் பார்வையில் 'இனியஉதயம்' இதழ்..?**

இன்றைக்கு அச்சிதழ் நடத்துவது என்பதே பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளான ஒரு பணியாக மாறியிருக்கும் சூழலில், தொடர்ந்து ‘இனிய உதயம்’ இதழின் வழியே சிறந்த படைப்பாளர்களின் தரமான படைப்புகளை வெளியிடும் இதழாக வெளிவரும் ‘இனிய உதயம்’ இதழின் பணி பாராட்டுக்குரியது. கவிதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், மொழி பெயர்ப்புகள் என ‘இனிய உதயம்’ இதழின் வழி சிறப் பான படைப்புகள் வாசகப் பார்வைக்கு அறிமுக மாகின்றன. தமிழ் வாசகர்கள் தொடர்ந்து இத்தகைய இதழ்களை ஆதரிக்க வேண்டும்.

●

# வந்தருள்வாய் தைப்பாவாய்!

மனித வாழ்க்கை இயற்கையை அடிப்படையாக அமைத்துக்கொண்டு வாழவேண்டும். இந்தப் பூமியில் இருக்கும் எல்லா உயிர்களும் இயற்கையின் கட்டளைக்குக் கட்டுப்பட்டே வாழ்கின்றன. நாகரிக மனிதன் இயற்கையைவிட்டு வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டான் என்ற எண்ணம் எந்த அளவுக்கு உண்மையானதோ அதே அளவுக்கு, ஆண்டுதோறும் அவன் இயற்கையைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறான் என்பதும் மறுக்கமுடியாத பேருண்மை. அறிவியல் சாதனங்கள் இல்லாத காலத்திலேயே இயற்கையைப் பற்றிப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டான். அப்படி இயற்கையிடமிருந்து கற்றுக்கொண்ட விவசாயத்தைத் தனக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளாமல் எல்லா உயிர்களுக்கும் உணவு தரும் பணியாக அதை மாற்றிக்கொண்டான். தேவையான அளவு உணவை உற்பத்தி செய்து, அதைப் பகிர்ந்து கொடுத்து வாழப் பழகினான்.

நம்முடைய அடிப்படைத் தேவையான உணவு உற்பத்திக்கு முக்கியப் பங்காற்றுவது சூரிய ஒளியே என்ற அறிவியல் உண்மையைத் தெரிந்துவைத்திருந்தான் என்பது நம்மை வியக்கவைக்கிறது. அந்த இயற்கைக்கு நன்றி செலுத்தும்விதமாக ஒரு திருவிழாவையும் ஏற்படுத்தி, அது காலங்காலமாக நடைமுறையில் இருப்பதற்கும் காரணமாக அமைந்திருப்பதும் பேரதிசயம். தைத்திருவிழா மனிதாபிமானத்தின் நீட்சியாக, பண்பாட்டின் தொடர்ச்சியாக, மரபின் ஆணிவேராகப் பல காலமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. முன்பனிக் காலம் என்று குறிப்பிடப்படும் தை மாதம் அறுவடை நாளாக மாறி மகிழ்ச்சியைக் கொண்டுவந்து சேர்க்கிறது.

மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று இன்றைய ஆன்மிகம் மார்கழி மாதத்தைக் கொண்டாடும்போது, சங்க இலக்கியங்கள் தை மாதத்தில் விழா எடுக்கின்றன. மக்களின் உயிரோடும், உணர்வோடும் கலந்த திருநாள் தைத் திருநாள். இந்த உலகத்தில் எத்தனை தொழில்கள் இருந்தாலும் உழவுத் தொழிலைப் போன்ற சிறந்த தொழில் வேறெதுவும் இல்லை என்பது வள்ளுவரின் தீர்ப்பு.

**"சுழன்றும் ஏர்ப்பின்னதுஉலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"**

என்ற திருக்குறளின் சத்திய வாக்கு எல்லா காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருத்தமானது. பயிர்த்தொழில் செய்யும் மக்கள் இயற்கைக்கு நன்றி செலுத்தும் வகையில் பொங்கலிட்டு வழிபடுவது வழக்கம். வெளிநாடுகளிலும் அறுவடைத் திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுவதை இன்று வரை பார்க்கிறோம். சமீபத்தில் வெளியான 'கும்கி' படத்திலும்,

**"வானளவு விட்டத்திலே வரப்பளவு**

## முனைவர் இரா. மஞ்சுளா

**தூரம் மச்சான்**
**அளவு தேவையில்ல அது தான் பாசம் மச்சான்**
**நாம வேண்டிக்கொண்டாலும்**
**வேண்டா விட்டாலும் சாமி கேக்கும் மச்சான்**
**சொய் சொய் "சொய் சொய்"**

என்ற பாடல் பழங்குடியினர் வாழ்க்கையில், அறுவடைக்காகப் பாடப்படுகிறது என்பதைத் திரைப் படத்தின் வழியாகப் புரிந்துகொள்கிறோம். இந்தப் பாடலில் தை மாதத்தில் நிகழும் அறுவடைத் திருவிழாவை, உணர்வுப்பூர்வமாகக் கொண்டாடிய பண்பாட்டுக் கூறுகளைக் காண முடிகிறது.

தை மாதம் என்றாலே கிராமப்புறங்களில் உற்சாகமும் - மகிழ்ச்சியும் களை கட்டத் தொடங்கி விடும். பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் புதிதாக அறுவடை செய்யப்பட்ட நெல்மணிகள் குவியலாகக் கிடக்கும். இதிலிருந்து உண்டாகும் வாசனையும், அறுவடை நாளில் உண்டாகும் மண்வாசனையும் நம் உணர்வுக்குள் கலந்து இதயத்தை இதமாக்கும். நெல்மணிகளின் பதர்களை நீக்கி அரிசியாக மாற்றி குவியலாக வைக்கப்பட்டிருக்கும் காட்சி மக்களின் வயிற்றுப் பசிக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் சாட்சியாக அமையும். மஞ்சளின் மங்கலமும், இஞ்சியின் வாசமும், கரும்பின் சுவையும், பசுவின் நெய் மணக்க முந்திரி - திராட்சை வறுத்து மணக்க மணக்க தயாராகும் சர்க்கரைப் பொங்கல் தை மாதத்திற்கே உரிய உன்னதமான படையல்.

ஒரு பக்கம் வீட்டைச் சுத்தம் செய்து, வெள்ளை அடித்து, வாசலில் அழகிய கோலம் போட்டு, மாட்டுச் சாணத்தில் பூவை நடுவிலே நட்டு வைத்து ஒவ்வொரு வீடும் விழாவிற்கு தயாராகிவிட்டோம் என்பதை மௌனமாகச் சொல்லிக் கொண்டிருக்கும். இன்னொரு பக்கம் தனக்கான இணையைத் தேடிக் கண்டவர்கள், திருமணக் கனவில் மிதந்துகொண்டிருப்பர். உழவுத் தொழிலுக்கு உதவிய மாடுகளும் அலங்கரிக்கப்பட்டு மனித அன்பில் நனைவது நன்றியுணர்ச்சிக்குச் சான்றாக அமையும். இந்தக் கலவையான உணர்வுகளைப் பொங்கல் பண்டிகையைத் தவிர வேறு எந்தப் பண்டிகையால் தரமுடியும். பல இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடப்பதும், சாதிமத பேதம் இல்லாமல் சமத்துவப் பொங்கல் என்று கிராமமே கொண்டாடுவதும் தமிழர் திருநாளாம் பொங்கலின் தனிச்சிறப்பு.

**"தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்**
**தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம் (தை)**
**ஆடியிலே வெத வெதைச்சோம் தங்கமே தங்கம்**
**ஐப்பசியில் களை எடுத்தோம் தங்கமே தங்கம்**
**கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம்**
**கழனி யெல்லாம் பொன்னாச்சு தங்கமே தங்கம் (தை)"**

என்ற பாடலாசிரியர் மருதகாசியின் வரிகளில் பண்டிகையின் பெருமையும், விவசாயத்தின் இயல்பும் தத்ரூபமாகச் சொல்லப்படுகிறது. தமிழர்கள் உணர்வுகளுடன் கலந்திருக்கும் தைப்பொங்கலைப் பாடாத கவிஞர்களே இருக்கமுடியாது. தை மாத விழாவில் கன்னிப் பெண்களின் நோன்பும் இணைந்து கொள்வதால் இன்னும் சிறப்பாக மாறிவிடுகிறது.

தை மாதத்தில் இளம்பெண்கள் அதிகாலையில் எழுந்து நீர்நிலைகளுக்குச் சென்று நீராடி நோன்பு இருந்தனர் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் காணமுடிகிறது. ஆவணி மாதம் முதல் மழை பெய்ததால் ஆறுகள், குளங்கள், குட்டைகள் ஆகியவை நீரால் நிரம்பிக் கிடக்கின்றன. தை மாதம் பனிக்காலம் என்பதால், வாடைக் காற்றும் வீசுவதால் நீர்நிலைகள் குளிர்ந்திருக்கும். இதை, புறநானூறு சொல்லும் விதமே தனி அழகு!

**"தைஇத் திங்கள் தண் கயம் போல**
**கொளக் கொளக் குறையா கூழுடை வியனகர்"**

என்ற வரிகளில் சோழ அரசனின் நகரச் சிறப்பும் விவரிக்கப்படுகிறது. எப்படி தை மாதத்தில் எல்லா குளங்களும் குளிர்ச்சியை வாரி வாரி வழங்குகிறதோ, அதைப்போல அள்ள அள்ளக் குறையாத உணவு நிறைந்த வீடுகளைச் சோழ நாடு முழுக்கப் பார்க்கலாம் என்று புலவர் பாடுகிறார். இதுபோல இன்னொரு பாடலும், திருமண நிகழ்வை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெண்கள் குளிர்ந்த நீரில் நீராடிய வழக்கத்தைப் பேசுகிறது. நல்ல கணவனைப் பெறுவதற்காகக் குளத்து நீரில் நீராடும் திருமண மாகாத பெண்களை நமக்கு அடையாளம் காட்டுகிறது நற்றிணைப் பாடல்.

**"இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇ**
**தைஇத்திங்கள் தண் கயம் படியும்**
**பெருந்தோட் குறுமகள் அல்லது**
**மருந்து பிறிது இல்லை யான் உற்ற நோய்க்கு"**

என்ற வரிகளில் நோன்பின் சிறப்பு சொல்லப்படுகிறது. நோன்பு என்பது, தான் எண்ணியிருக்கும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தனக்கு நேரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய மனவுறுதி என்று புரிந்துகொள்ளலாம். வெட்கம் என்ற பண்பு இயல்பாக மகளிருக்கு அமைந்திருப்பதால், காதலனோடு புறப்பட்டுச் சென்று விடாமல் தடுத்து நிறுத்தி விடுகிறது. அதனால் நோன்பு இருக்கவேண்டிய சூழல். இப்படி நீராடும் பெண் மீது காதல் கொண்ட ஒருவன் தன் உள்ளத்து ஆசைகளை மற்றவர் கேட்கும்படி வெளிப்படையாகப் பேசும் இடத்தில் அன்புக்குத் தரப்பட்ட முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

நீர்நிலைகளில் நீராடும் இந்தப் பெண்ணே எனக்கு நோயைச் செய்பவளாகவும் அந்த நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கிறாள் என்று ஒரு காதலன்

தன்னுடைய காதல் நோயைப் பக்கத்திலிருந்து காதலியின் தோழி கேட்குமாறு பேசுகிறான். இப்படிப் பெண்கள் நீராடுவதை 'அம்பா ஆடல்' என்று பரிபாடலும் உறுதிசெய்கிறது. அதாவது திருமணமாகாத இளம் பெண்கள் தன் அம்மாவைப் பக்கத்தில் இருக்கவைத்து நீராடுவதால், 'அம்பா ஆடல்' என்று அழைக்கப்பட்டது. சங்க கால மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தனர் என்பதற்கு இந்தத் தை நீராடல் ஒரு முக்கியமான உதாரணம். நோன்புக்குப் பிறகு அறுசுவை உணவு சமைத்து உண்ணும் வழக்கம் இருந்திருக்கிறது. இந்த நோன்பின் தொடர்ச்சியாக, திருப்பாவையும் - திருவெம்பாவையும் மார்கழி மாதத்தின் பாவை நோன்பினைக் காட்டி மகிழ்கின்றன. பல்லவர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 400 முதல் கி.பி. 800 வரை) தை நீராடல் என்ற விழா தமிழ் நிலத்தில் சிறப்பு வாய்ந்த திருவிழாவாகவே கொண்டாடப்பட்டு வந்தது. காலப்போக்கில் அதில் சிறு மாற்றம் ஏற்பட்டு அது மார்கழி மாதத்திற்குச் சென்றிருக்கலாம்.

தை மகளின் சிறப்புகளைக் கூறும்போது கவியரசர் கண்ணதாசனின் 'தைப்பாவை' என்ற படைப்பைக் குறிப்பிடாமல் கடந்துவிடமுடியாது. திராவிடக் கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, திராவிட இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தபோது இந்நூலை எழுதினார் கவிஞர். முன்பிருந்த பாவை நூல்களில்

**சிந்து சமவெளி சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளையின் உருவமும், அதை அடக்க முயலும் வீரரையும், அந்த வீரரை காளை தூக்கி எறிவது போன்ற காட்சியும் பொறிக்கப்பட் டுள்ளது. எனவே பழங்காலந்தொட்டு இந்த வீர விளையாட்டுகள் தமிழ் மண்ணின் மகத்துவத்தைப் பேசி வருகின்றன...**

இருக்கும் வழக்கத்தைத் தனக்குப் பிடித்த வழக்கமாக மாற்றி அமைத்தார். 'எம்பாவாய்' என்ற முறையை 'தைப் பாவாய்!' என்று பாடுவது தைமகளை அழைப்பதாகவே என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

'காளை மணியோசை களத்துமணி நெல்லோசை
வாழை இலையோசை வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை தாயர் தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை குழவியர் வாய்த்தேனோசை
ஆழி அலையோசை அத்தனையும் மங்கலமால்
வாழிய பண்பாடும் மாயமொழி கேட்டிலையோ!'

என்ற வரிகளில் மங்கலச் சொற்களும், இயற்கைச் சூழலும் கைகோத்து வரவேற்கின்றன. அதே போல, இலக்கியத்தை நிறைவு செய்யும்போதும் கண்ணதாசனின் கவிநயத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம். நமக்கான நல்வாழ்வு தரக்கூடிய வாழ்த்தை 'தை' மகளிடமே வேண்டி நிற்கிறார் கவிஞர்,

'வானேறி மேகம் விழ
மண்ணுழவர் பொன்னுதிர
ஊனாகி வந்தெம்
உயிர் காக்கும் மெய்வடிவே!
பூ நேர் விழியாரும்
பூத்துவரும் குலந்தளிரும்
வான் வாழ்வு வாழ
வாழ்த்தாயோ தைப்பாவாய்'

என்ற வரிகளில் தை மகளிடம் கவிஞர் நன்மைகளை வேண்டிநிற்கும் நிலை தெளிவாகப் புரிகிறது. தமிழர்கள் தை மாதத்தின் முதல் நாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடும் வழக்கத்தைத் திராவிட கருத்தியலை அடிப்படையாக அமைத்துக்கொண்டு தமிழர் மரபுக்கு மேலும் வலுச் சேர்க்கிறார். இதிலே காதல் வாழ்வு, மூவேந்தர்களின் சிறப்பு முதலிய பல செய்திகளையும் சுவையுடன் கவிதைகளாக வடித்துக் கொடுத்திருக்கிறார். தை மகள் திருமண வரம் தருபவள்; அவளால் எல்லா நன்மைகளும் கிடைக்கவேண்டும் என்பது கவிஞரின் உள்ளத்து ஆசை.

தை மாதத்தின் இன்னுமொரு சிறப்பு - ஏறு தழுவுதல் என்ற ஜல்லிக்கட்டு போட்டிகளே. மஞ்சு விரட்டு என்றும் சொல்லப்படும் இந்தப் போட்டி, தமிழர்களின் முக்கியமான வீர விளையாட்டு. பழைய காலத்தில் மாடுகளை மேய்க்கும் காட்டுப் பகுதியில் வாழும் மக்கள் மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுப்பதற்கான முறையாக ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்தி வந்தனர். பெண்கள் வீட்டில் வளர்க்கப்படும் காளைகளை அடக்கி வெற்றிபெறுவது ஒரு சாதனை. அந்தச் சாதனைக்குப் பரிசாக அந்த வீட்டுப் பெண்ணை மணம் முடித்துத் தருவது வழக்கம்.

'எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர்'

என்ற கலித்தொகைப் பாடல் ஏறு தழுவுதல் குறித்த செய்திகளை விளக்குகின்றன. வீர விளையாட்டில் ஈடுபட்டு வெற்றிபெற்ற வீரனையே இளம்பெண்கள் தங்கள் கணவன்களாக ஏற்க விரும்புவர் என்ற செய்தியையும் தெரிந்துகொள்ளலாம்.

இந்தப் போட்டியின்போது சல்லிக்காசு என்னும் நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கமும் இருந்தது. மாட்டை அடக்கி வெற்றிபெறும் வீரனுக்கு இந்தப் பண முடிப்பு சொந்தமாகும். இது காலப்போக்கில் சல்லிக்கட்டு, ஜல்லிக்கட்டு என்று மாறியது. தில்லியில் உள்ள தேசியக் கண்காட்சியில் சிந்து சமவெளி சார்ந்த காட்சி பொருள் ஒன்று உள்ளது. சிந்து சமவெளி சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளையின் உருவமும், அதை அடக்க முயலும் வீரரையும், அந்த வீரரை காளை தூக்கி எறிவது போன்ற காட்சியும் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே பழங்காலந்தொட்டு இந்த வீர விளையாட்டுகள் தமிழ் மண்ணின் மகத்துவத்தைப் பேசி வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு விழாவுக்குப் பின்னால் இருக்கும் வரலாறு வெறுமனே சடங்கு முறைகளைச் சொல்லும் வாதம் அல்ல! மாறாக அந்த விழாவின் அடிப்படையாக அமைந்திருக்கும் பண்பாட்டுக் கூறுகளை, மரபார்ந்த பழக்கவழக்கங்களைத் தெரிந்துகொள்ள முன்னோர்கள் செய்து வைத்திருக்கும் உறுதிப் பத்திரம் என்றே விளங்கிக்கொள்ளலாம். பொதுவாக, எல்லா பண்டிகைகளுக்குள்ளும் கடவுள் சார்ந்த கொள்கை இழையோடிக் கிடக்கும். தை விழாவில் இயற்கையே கடவுளாக மாறி பேருருக் கொண்டு பரிணமிக்கிறது. இங்கே சாதி - சமயம் என்ற எந்தச் சிக்கலும் எழுவதில்லை. சகோதர நேசத்துடன், எல்லா உயிர்களையும் அரவணைத்துச் செல்லும் திருவிழாவாகவே பொங்கல் காலத்திற்கும் நிலைத்து நிற்கும்!

●

# கவிஞர் அறிவுமதியின் அறப்பார்வையில் புறநானூறு!

கவிதையோ இலக்கியமோ படைத்தளிக்கப்பட்டபின் அவை ஒற்றைப் பரிமாண புரிதலை மட்டுமே உடையதாக அமைந்துவிடுவதில்லை. படிப்போரின் பார்வைக்கானவையாக மாறுகின்ற நிலையில் அவற்றுக்கான புரிதல் படிப்போரின் நோக்கு, சமூகப்பின்னணி, அணுகப்படும் கொள்கைப் பின்னணி போன்றவற்றுக்கு ஏற்ப மாறுபடும் தன்மையுடையதாக அமைவது இயல்பு. இந்தவகையில் சிலப்பதிகாரம் தொ.மு.சி. ரகுநாதனால் சமூகவியல் நோக்கில் அணுகப்பட்டுள்ள நிலையில் அது, 'இருவேறு வர்க்கங்களுக்கும் இடையிலான போராட்டத்தை வணிகவர்க்கத்துக்கு ஆதரவான ஒரு சமூகப்புரட்சியாக மாற்றும் நோக்கத்தோடு மிகவும் நயமாகவும் நாசூக்காகவும் ஒரு புரட்சி இலக்கியத்தையே படைத்துத் தந்திருக்கிறார்' (1984:461) எனும் நோக்கில் ஆராயப்பட்டுள்ளது. இந்தவகையில் உலகநாடுகளுக்கு இடையிலான போர்களே மிகுந்துள்ள இக்காலச்சூழலில் புற நானூறு, கவிஞர் அறிவுமதியால் 'உலக அமைதிக்கான நூல்' எனும் நோக்கில் அணுகப்பட்டுள்ளது.

கவிஞர் அறிவுமதியின் இலக்கு

**நாங்கள் யார் எனில்... தமிழர்.**
**நாம் யார் எனில்... உலகர்.**
**எங்களின் தாய்மொழியா? தமிழ்...**
**அது உலக உயிர்களின் தாய்மொழி.**

எனத் தமிழை உலக உயிர்களின் மொழியாகக் காட்டியுள்ளார் அறிவுமதி. இந்த நோக்கில், 'அமிழ்தமே என்றாலும் அதையும் பொதுவில்வைத்து உண்டு, தமக்கென முயலாமல் பிறர்க்கென முயன்ற பொதுநோக்காளர்களின் முயற்சியால்தான் இந்த உலகமே இயங்கிக்கொண்டுள்ளது' எனும் (புற.182) நோக்கினது தமிழினம் என்கிறார்.

இந்த உலக உயிர்நல நோக்குடன், சங்கச் சான்றோரால் 'நோய்த்தொழில்' (பதி. 84:16) எனப்பட்ட போர்த்தொழிலுக்குக் காரணமான அணுஆயுதங்களால் நேரும் அழிவுகளைத் தடுத்தே ஆகவேண்டும் என்கிற தாய்மையோடு,

பல்லுயிர் காக்கும் பயிர்த்தொழிலின் பெருவளத்தைப் பெருக்கி ஏற்றத்தாழ் வற்று எல்லா உயிர்களும் இனிதே இணைந்து வாழவேண்டும் என்கிற உயரிய நோக்கில்தான் இந்த நூலை உலகர்களின் கைகளில் ஒப்படைக்கின்றேன் (2025:15) எனக் கூறி நூலின் படைப்பு நோக்கை முன்வைத்துள்ளார்.

### வள்ளுவத் தூண்டல்கள்

இன்றைய தமிழ்க் கவிஞர் எவரும் முன்வைக்காத இந்த உலக உயிர்நல நோக்கை முன்வைத்துச் செல்லும் இந்த நூலின் செல்நெறி மிகத் தனித்துவமானது. இந்நோக்குடைய இந்நூலுக்கு வள்ளுவமே தூண்டலானதைப் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

செல்வம் உடையவராக இருப்பதும், தெள்ளிய அறிவுடையவராக இருப்பதும் வேறுவேறானவை (குறள்.374) எனும் நிலையில், செல்வச்செழிப்பு மிக்க, அரசாளுவோரின் மூளைக்குள், 'பிற உயிரின் துன்பத்தைத் தன்துன்பம் போலக் கருதிச் செயற்படுதல்' (குறள். 315) எனும் அறிவுத்தெளிவைப் புகுத்தி உளவியல் மருத்துவம் பார்க்கவேண்டியது அறிவுத் தெளிவுடையோர்தம் பணி. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' (குறள். 322) என்பதைப் போலப் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (972) என்பதும் பொதுநோக்கி னதே என்றுள்ளார்(18, 19). இவற்றை வள்ளுவத்

• பெ.மாதையன்

தூண்டல்களாகக் காட்டி,

'மாந்தநேயம்' என்பது வாழ்வின் நுனிச்சொல், 'உயிர்நேயம்' வாழ்வின் வேர்ச் சொல் (19)

எனக் கூறி உயிர் நேயத்தை உலகநல வாழ்வுக்கான மூலமாக முதன்மைப்படுத்தியுள்ளார் அறிவுமதி. இந்த உலக உயிர்நலப் பொதுமைநோக்கு,

**'காக்கை குருவி எங்கள் சாதி'**
**'உலகம் உண்ண உண்'**
**'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'**

எனப் பாரதியார், பாரதிதாசன், வள்ளலார் எனும் அற அறிவோர் வழியில், தொடர்ந்த மரபை எடுத்துக்காட்டி இது தமிழ்ச் சிந்தனையரின் தலையாய பணியாகத் தொடர்ந்து இருந்துவந்துள்ளது என்கிறார் (20, 21).

இந்த நோக்கில் 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' (392) எனும் குறளுக்குத் தனித்தன்மை வாய்ந்த விளக்கத்தைத் தந்துள்ளார் அறிவுமதி. இதில் வரும் 'வாழும் உயிர்' என்பது மக்களைக் குறிப்பதன்று, உலகில் வாழும் அனைத்து உயிர்களையும் குறிப்பது எனக் கூறிக் 'கல்வியும், படிப்பும் மக்களுக்கு மட்டுமே' என்பது தமிழ்ச் சிந்தனைக்கு ஒவ்வாதது என்றுள்ளார். இதனால், எண் என்பது பணத்தாள் கணக்கன்று எனக் கூறி,

ஒரு காடென்றால், இத்தனை புலிகளுக்கு, இத்தனை மான்கள் இருக்கின்றனவா என்கிற சூழலியல் கணக்காகப் பாருங்கள்.

ஒரு நாடென்றால் இத்தனை பெண்களுக்கு இத்தனை ஆண்கள் இருக்கிறார்களா என்கிற வாழ்வியல் கணக்காகப் பாருங்கள் (22, 23)

எனும் புதுக்கணக்கைக் காட்டி, இந்த உயிர்கள் எல்லாம் அறமற்ற போர்களால் ஏன் கொல்லப்படவேண்டும் என்கிற உலக அமைதியை நோக்கியதே இந்த வள்ளுவக் கணக்கு என்றுள்ளார்.

எழுத்து என்பது கூட்டங் கூட்டமாய் வாழ்ந்த மூதாதையர்களின் வாழ்வு அனுபவங்களின் பிழிவான 'பண்பாட்டின் மூலிகைச் சாறு' என்பதை எடுத்துரைத்து,

எழுத்து என்பது கற்பதற்கான கருவி மட்டுமன்று, கற்பிப்பதற்கான அருளின் கருவும்கூட.

அனைத்து உயிர்களின் நலனுக்காவும், அறத் துணிவில் உரத்துக் குரலெழுப்ப வல்ல ஒரே அறப் போர்க் கருவி எழுத்துதான் (24, 25)

எனக் கூறி இந்தக் குறளே தம் நூலின் ஆக்கத்திற்கான தூண்டுதல் என்றுள்ளார்.

**சங்கப் புலவர்களே வள்ளுவ ஆசான்கள்**

சங்கப்புலவர்கள், போரில் கொள்ளையடித்த பொருள்களை எல்லாம் குருதிக் களத்திலேயே பரிசுகளாய்ப் பெற்றுக்கொண்டு கொலையர்களையும் வள்ளல்களாய்ப் புகழ்ந்தவர்களாக இருந்தாலும் புத்தறிவு புகட்டும் அறிவின் அறவர்களாகவும் நின்று அரசர்களுக்கு அறவுரைகளும் வழங்கியிருக்கின்றார்கள் என்கிறார் (27, 29). பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பற்றிய நெட்டிமையாரின்,

**"பாணர் தாமரை மலையவும் புலவர்**
**பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்**
**அறனோ மற்றிது விறன்மாண் குடுமி**
**இன்னா வாகப் பிறர்மண் கொண்டு**
**இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே" (புற. 237)**

எனும் பாடலின் பின்னிரண்டடிகளைக் காட்டி வஞ்சப்புகழ்ச்சியாய் அமைந்த இந்தப் பாடலடிகள், ஒருநிலையில் அவனுக்குப் போர் அறத்தை உரைப்பனவாகவே உள்ளன எனக்கொண்டு விளக்கிச் சங்கப்புலவர்கள், 'உலகம் காக்கும் உயர் கொள்கை' (புற.400) உடையவராகவும்; 'பொய்த்தலறியா, உரவோன் செவிமுதல் வித்திய பனுவல் விளைந்தன்று நன்றென' (புற.237), 'இசைநுவல் வித்தின கையேருழவர்' (மலை. 60) என்றெல்லாம் அறத்தை அரசர் செவிகளில் விதைத்தவர்களாகவும் உள்ளனர் (29,39) என்கிறார். உடைமைச் சமுதாயத்தில் போர் தவிர்க்க இயலாதது என்பதை உணர்த்தும்,

**ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**
**புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை (புற.17)**

எனும் புறப்பாடல் அடிகளுக்கு உரையெழுதியது போன்றது ஓஷோவின் கருத்து எனக்கூறி,

இந்தப் பூமியில் வாழ்க்கை இருக்கிறவரை, போரும் நம்முடன் இருக்கத்தான் செய்யும்... பூமியின் மீது போரே இல்லமற்போவது என்பது முடியாத காரியம். மனிதனே இல்லாமற் போனால்தான் போரும் இல்லாமற்போகும். அல்லது மனிதன் பரிபூரணநிலைமை அடைந்துவிட்டால் போர் இல்லாமற் போகலாம் (பூ மலரும்

*புல்லாங்குழல் பக். 216) (35, 36)*

எனும் கருத்தை எடுத்துக்காட்டிப் போரின் தவிர்க்கவியலாத் தன்மையை முன்வைத்துள்ளார். *'உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தன், உள்ளியது உள்ளப் பெறின்' (540)* எனும் குறளை மறுவாசிப்புக்கு உட்படுத்தி,

*அடைய வேண்டிய இலக்கை நோக்கி அயராது உழைத்தால், அடைய வேண்டிய உலகஅமைதியைப் 'போரிலாஉலகு' என்கிற இலக்கை அடைவது எளிதே என்கிறார் வள்ளுவர் (36)*

எனக் கூறி உலக உயிர்களின் பொதுநலம் பேணும் 'போரில்லா உலகு' நோக்கிய மறுவாசிப்பே எனும் தன் நூலாக்க நோக்கத்தை முன்மொழிந்துள்ளார். இதனால்,

*கரடுமுரடான கற்களை ஓயாத ஓட்டத்தினால் ஆறு, உருட்டி உருட்டி அழகான கூழாங்கற்களாக ஆக்கித்தருதல் போலத்தான்... தம் இடையறாத எண்ணத்தால் 'எழுத்தால்' போரிலா உலகை உருவாக்கித் தரலாம் என்னும் உயரிய நோக்கில் மூவாயிரம் ஆண்டுகட்டு முன்னதாகவே நம் புலவர்கள் சிந்தித்திருக்கிறார்கள் என்பதை நீங்களும் கண்டு உணர்ந்து விழிக்கவே இந்த நூல் (37)*

எனக்கூறிப் போரிலா உலகு நோக்கிய புற நானூற்றுப் பயணத்தைத் தொடர்ந்துள்ளார்.

'போர் வேண்டா' எனும் வலி சுமந்த வாழ்வுச்சொல்

*போரால் விளையும் அழிவுக் கவிச்சியின் முடைநாற்றத்தை முழுமையாக உணர்ந்த மூளையரின், அறவெழுச்சிக் குரலாகவே 'போர்வேண்டா எனும் பொறுப்புச் சொல்'... இன்று அடர்ந்து எழுகிறது' (39, 40) என்கிறார்.*

இந்த விழிப்புக் குரல், உலக அறமன்றத்தின் மனச் சான்றுக்குள் மருத்துவ ஒட்டடையடிக்கும் என நம்புவோம்.

*உலக அறமன்றம் என்பது உலக மக்களுக்கானது மட்டுமன்று உலகின் அனைத்து உயிர்களுக்குமானது (40)*

எனக் கூறிக் 'காக்கை குருவி எங்கள் சாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என அனைத்து இயற்கையையும் பேணும் உயிர்நலப் பொதுநோக்கை வலியுறுத்தி யுள்ளார் அறிவுமதி.

**பொதுநோக்காளர்களைக் கொண்ட உலக அறமன்றத் தேவை**

உலக அறமன்றம் என்பது வெற்று மனிதர்களால் ஆனதாக இருக்கக்கூடாது அது உலகநலம் நாடும் பொதுநோக்கர்களால் அமைந்ததாக உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார். இதனால்,

*'வல்லவர்களே வாழ வேண்டும்' (புற. 24) என்ற வழக்கு வழிமொழியப்படாமல் சங்கப் புலவர்கள் வலியுறுத்திய, 'வலியர்' என வழிமொழியலன், 'மெலியர்' என மீக்கூறலன்' (புற.239), 'பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' (புற.192) எனும் நடுவுநிலைமையே பேணப்பட வேண்டுமென்றுள்ளார் (41).*

*தமக்கென முயலாப் பிறர்க்குரியாளர்கள் (அக. 54), பிறர் நோயும் தம்நோய் போல் போற்றுகிற அறனறியும் சான்றோர்கள் (கலி.139), அன்பும் அற னும் ஒழியாது காக்கும் அறவோர்கள் (மது.496), பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சர்கள் (நற்.186), 'அறம் நனி சிறக்க (ஐங்.7); 'அரசு முறைசெய்க' (ஐங்.8) எனும் பொதுவர்கள் எனச் சங்கஇலக்கியங்கள் காட்டுவதைப் போன்ற நல்லியல்புகள் வாய்ந்தோர் அறமன்ற அறவிகளாக இருக்கவேண்டும் என்கிறார் (41,42). அரசுபற்றிப் பேசுகையில்,*

*இன்றுவரையிலும் உலகநாடுகளின் அரச யாப்புகள் உடலுழைப்பற்ற மூளையர்களாலேயே பெரும்பாலும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன (42)*

எனக் குறிப்பிட்டு, குறிப்பிட்டவரால் குறிப்பிட் டோர் நலன்களையே முன்னிலைப்படுத்தியே அரசு கட்டமைக்கப்பட்டுள்ளது என்கிற அடிப்படையில் அதை, 'அரச யாப்பு' எனும் சொல்லால் சுட்டியுள்ளார்.

பண்டை நாளைய அரசும், இந்நாளைய அரசும் ஒரு குறிப்பிட்ட இலக்கு நோக்கிய இயல்பின தாகவே இருப்பது இயல்பான ஒன்றுதான். மாற்றப் படாத இந்த அரசமைப்பில் இருந்து ஆட்சிசெய்த, ஆட்சிசெய்யும் எவரும் அது எந்த இலக்கை நோக்கிக் கட்டமைக்கப்பட்டதோ அதைத்தான் செய்யவியலும். பொதுவுடைமையாளர்கள் என்றாலும் புரட்சி யாளர்கள் என்றாலும் பகுத்தறிவுவாதிகள் என்றா லும் அவர்களும் இப்படித்தான் செயல்படவியலும். அரசமைப்பையே மாற்றாமல் எந்தவொரு சமுதாயத்தையும் நாம் மாற்றிவிடஇயலாது என்கின்ற நிலையில் இவர் ஆண்டுள்ள அரசயாப்பு என்பது முக்கியமான சொல்லாட்சியாக அமைந்துள்ளது.

*அரசை அமைப்பதற்குச் செய்த முதல் முயற்சி குலங்களை உடைத்தெறிவ தாகவே இருந்தது (ஏங்கெல்ஸ், 175)*

*இனக்குழு அழிவிலிருந்து வர்க்கம், வர்க்கப் பகைமை, வர்க்க முரண்பாடுகள், பகைமைகள் இணக்கம் காணமுடியாதவை என்றானபோது அதன் விளை வாக உருவானதே அரசு. இந்த வர்க்கப்பகைமைகள் எப்பொழுது இனங்காண முடியாதவை ஆகின்றனவோ அப்பொழுது அரசு உதிர்கிறது- லெனின். (குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், 2008. தேவபேரின்பன், முன்னுரை)*

என எங்கெல்சும் லெனினும் கூறுவது போல் வர்க்கங்களும், பேரளவிலான தனியுடைமைச் சொத்துகளும் மாறுகையில்தான் அரசு மாற்றுருவம் கொள்ளும். இலக்கிய யாப்பு படைப்பாளரின் மொழிப்பயன்பாட்டுக்கு ஏற்பக் காலந்தோறும் மாறி வந்துள்ள இயல்பினது எனக் கவிஞர் சி. மணி (யாப்பும் கவிதையும் சந்தியா, 2006), குறிப்பிட்டுச் சொல்வதைப்போல, அரசயாப்பு அமைவதில்லை. அரசு என்பது என்றும் ஒரே கட்டமைப்பை உடையதாக 'அரச நலம்விரும்பிகளின் நலன்' என்ற ஒற்றை இலக்கு நோக்கியதாகவே உள்ளது. இந்நிலையில் 'அரசயாப்பு' மாற்றப்பட வேண்டியதாக இருப்பதையே அறிவுமதி,

தொல்குடிகள் என்கின்ற மண்ணின் மக்களின், பெண்களின் உலகை அழகு செய்துகொண்டிருக்கும் குரலற்ற வியர்வையர்களின், சூழலியல் விழிப்பர்களின் கருத்துகளைப் பிழிந்து ஊற்றிக்கொள்ள முன்வராத எந்த நாட்டின் அரசயாப்பும் உலக உயிர்களின் அறப்பொதுமையை அரண்செய்யப் பயன் படாததாகவே அமையும் (42, 43)

எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அமையாதவை எல்லாம் அறமற்ற அரச யாப்புகளே என்கிறார். இத்தகைய அரசயாப்பே போருக்கான காரணம் என்பதையும்,

என் காலடியில் உலகம் என நினைக்கும் ஆதிக்க மூளையரின் அடாவடித் தனங்கள்தாமே உலகப்போர்கள் (44)

எனக் கூறி, ஜப்பான், வியட்நாம், இலங்கைப் போர்விளைவுகளின் அவலங்களை எடுத்துக்காட்டி ஒரு முடிவுக்கு வருகிறார்.

**புறநானூற்றுப் புலவர்களின் இருவகைப் போக்குகள்**

வேட்டைச்சமூக வாழ்வியல், வேளாண்சமூக வாழ்வியல் எனும் இரண்டும் கலந்த படைப்பே புறநானூறு எனும் அறிவுமதி வேட்டைச்சமூக வாழ்வியல் கூறுகளை விதந்து பேசி அதன் விழுமியங்களைத் தேடியவர் (புற. 6, 7, 16), இவ்வாறே வேளாண்சமூக வாழ்வியற் கூறுகளை விதந்துபேசி அவற்றில் விழுமியங்கள் தேடியவர் என இரண்டாகப் பகுத்துக்கொள்கிறார். 'இன்னாதம்ம இவ்வுலகம் இனிய காண்க இதன் இயல்புணர்ந் தோரே' (புற.194) எனும் புறநானூற்று வழியில் இனிய காணலாம் என்கிறார் (51-54).

'ஓரில் நெய்தல் கறங்க, ஓரில் ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப' எனத் தொடங்கும் இந்தப்பாடல் இன்பம் துன்பம் எனும் இருவேறுபட்ட உலகநிலையை விளக்கியுள்ள நிலையில் இதற்கான காரணத்தை,

வேந்தர்கட்கும் ஏனைச் செல்வர்கட்கும் உலகவாழ்வில் பெருவிருப்பந் தோன்றி 'மெய்வலியுடையோர்க்கே இவ்வுலகம் உரியது, உலகத்திற் பிறந்தா ரனைவர்க்கும் பொதுவென்பது பொருந்தாது' என்றும் 'அவ்வலியைக்கெடாது பேணிக்கொள்ளற்குச் செல்வம் இன்றியமையாமையின் செல்வந்தேடுவது வலி யுடையார்க் கேற்பதென்றும் கருதி அவற்றிற்கேற்ப நாளும் போரும் பொரு ளீட்டமுமே நினைந்தொழுகப் பண்ணிற்று'. இதன் விளைவாக நாட்டில் இன்ப வாழ்வுக் கிடனில்லையாயிற்று (புறநானூறு, 1999:418,419)

என விளக்கியுள்ள ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் விளக்கமும் போரும் பொருளீட்டலுமே துன்பங்களுக்குக் காரணம் என்கிறது. இவ்வகையில் இந்தப் பாடலும் போரால் வரும் துயரத்தையே முன்வைப்பதாக உள்ளதை உணரலாம். இந்நிலையில், பாத்தூண் எனப்பட்ட பகுத்துண்ணல், வேளாண் மேலாண்மையின் தேவை எனும் இரண்டையும் புறநானூற்றிலிருந்து எடுத்து விளக்குகிறார் அறிவுமதி.

**வேளாண் பண்பாடு**

உழவுத் தொழிலே சிறப்பானதாக இருந்ததைச் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால், உழந்தும் உழவே தலை' (1031) எனும் குறள்வழி எடுத்துக்காட்டிப் புறநானூறு காட்டியுள்ள நீர்மேலாண்மையின் பெருந்துணை பற்றி எடுத்துரைத்துள்ளார். 'நீரின்று அமையா யாக்கைக் கெல்லாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, உண்டி முதற்றே உணவின் பிண்டம், உணவெனப் படுவது நிலத் தொடு நீரே, நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு, உடம்பும் உயிரும் படைத்திசி னோரே' (புற.18) எனும் பாடலைக் காட்டி, இப்புலவரால்,

உன் மக்களைப் போரில் ஈடுபடுத்தி' கழுகுகளுக்கு விருந்துவை எனப் போர் வெற்றியைத் தூண்டவில்லை.... நன்செய் வேளாண்மையே பெருகும் மக்கட் தொகைக்குப் பெரிதும் பசியாற்ற உதவும் (60,61)

என மக்கள் பசிபோக்கி உயிர் வளர்க்கும் வேளாண்மையே அறிவுறுத்தப்பட்டுள்ளது, போர் வெறி தூண்டப்படவில்லை என்கிறார் அறிவுமதி. மேலும், 'அதற்காக மக்கள் வளத்தைப் போர்க்களத்தில் ஈடுபடுத்திச் சாவை அறுவடை செய்வாயோ' நிறுத்து' (61) எனப் புலவன் அறிவுறுத்துவதாகவும் கருதுகிறார்.

**கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்**
**தொல்லது விளைந்தென நிலம்வளம் கரப்பினும்**
**எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை (புற. 203)**

எனும் பாடலுடன், 'நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய' எனும் புறம் 58ஆம் பாடலையும் காட்டி,

போர் நடத்துவதை விட, ஏர் நடத்துவதே ஏற்புடையது என, ஆணையிடுகிற மன்னனுக்கே

ஆணையிடுகிற தகுதியை... 'தமிழ்' புலவர்களுக்குத் தந்துள்ளதற் கான பண்பாட்டை' இந்தப் பாடல் வழி அறியமுடிகிறதில்லையா? (62) என்றுள்ளார். 'திருவில் அல்லது கொலைவில் அறியார், நாஞ்சில் அல்லது படையும் அறியார்' (புற.20) எனும் பாடலையும் காட்டி, 'முடிவேந்தர் காலகட்டத்திலேயே' படைகளற்ற மக்களரசை உருவாக்க முடிந்திருக்கிற புலவர்தம் பண்பியல் துணிவை எவ்விதம் போற்றுவது' என வியக்கிறார். 'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும், அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான், எல்லாரும் உவப்பது' (புற.195) என்பதையே பெரும்பாலான புலவர்கள் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுள் ளனர் எனவும் கூறுகிறார் (66, 67).

ஒன்றுபட்ட வாழ்வும் போர் வேண்டா இலக்கும் பூம்புகாரை, 'உலக அறிவு மாநாடு நிகழ்ந்த மூதூர்' என்பதுடன், 'அறயாப்புப் பிறழா நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர் மாக்கள் இனவேறுபாடுகளற்ற உணர்வில் யாவரும் உறவராய்க் கூடி இனிது வாழ்ந்த வாழ்விடம்' (பட். 216-218) (73) எனவும் குறிப்பிட்டுள்ளார். திணைமக்கள் சேர்ந்து வாழ்ந்த நிலையைப் பொருநராற்றுப்படை வழி (218-220) காட்டி இந்த ஒற்றுமை நிலைக்கு மகிழ்ந்தவர்களே தமிழ்ப் புலவர்கள் என்கிறார்.

'புலன்உழுது உண்மார்' எனப்பட்ட புலவர்களின் நோக்கம்,

உழுத புலங்களாகிய மன்னர்களது மனங்களில் விதைக்கவேண்டும். படை களற்ற அரசுகள் காண' போர்களற்ற நாடுகள் காண 'அடிமன ஆழங்களில்' பாடல்களை விதைக்கவேண்டும். அதிலிருந்து விளைந்து முற்றி முகம் காட்டுகிற 'உலக அமைதி' எனும் ஒப்பற்ற விளைச்சலை அறுவடை செய்ய வேண்டும் (74, 75)

என்பதே என விளக்கி இவற்றை, 'போர் வேண்டா என்பதற்கான முதிர்ந்த அறிவின் மூத்த குரல்கள்' (75) என்கிறார்.

**அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்**
**சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை**
**பூளை நீடிய வெருவரு பறந்தலை**
**வேளை வெண்பூக் கறிக்கும்**
**ஆளி லத்த மாகிய காடே (புற. 23:18-22)**

எனும் பாடலைக் காட்டி அறிவுமதி தந்துள்ள,

அந்த மனைவி மானைப் போலவே மனத் தைக் கல்லாக்கிக்கொண்டு முலை கொடுத்து மகன்களை வளர்த்து ஆளாக்கி 'ஆளாக்கி' உனக் குப் போரிடும் வீரர்களாய்ப் புதிது புதிதாய் அனுப்பிவைத்துக்கொண்டே இருக்கவேண்டியது தானே இந்தப் பெண்களின் பணியாக இருக்கிறது (82)

மனப்பிறழ்வுக்கு ஆளான பிணந்தின்னிப் பேய் மகளிர்களாகப் பெண்களை அலையவிடுகிறீர்கள் (83)

எனும் இந்த விளக்கம் எந்த உரையாசிரியரும் தராத, பெண்களின் இழிநிலை குறித்த சமுதாய நிலைகளை உலகர்முன் வைக்கிறது. இந்தப் பாடல்வழி,

மன்னனின் மூளைக்குள் புலவன் 'உழுது விதைக்க நினைத்தது' 'போர் வேண்டா உலகஅமைதியே வேண்டும்' என்பதை உணர்கையில்' சிலிர்க்கிறதா இல்லையா (85)

என வினவிப் 'போர் வேண்டாம்' என்கிற உள்ளுறைப் பொருளை விவரிப்பது அறிவுமதி யின் உயிர்நேயப் பண்பின் வெளிப்பாடாக அமைந் துள்ளது.

மூதில் பெண்களின் வீரம் பற்றிய புறநானூற்றின் 86, 279, 278ஆம் பாடல்களின் அடிகளை எடுத்துக்காட்டி, வழக்கமாக மூதில்பெண்டிரின் வீரத்தை மட்டுமே போற்றும் மரபான தமிழ்ச்சிந்தனை மரபிலிருந்து வேறுபட்டு, அவர்களெல்லாம் முதியோள்களாக இருப்பதையும் (புற.270, 277, 278, 276) எடுத்துக் காட்டி,

இயற்கையின் பருவந்தாண்டிய முதியோர்களாய் நரையர்களாய் ஆனபின்பும் ஆண்கருவிகளைப் போருக்குத் தரவேண்டும் என, கருவறைகளைக் கொல்லர்களின் உலைக்களமாக்கிய உயிர்வதையாளரும் நீதானே மன்னா (88)

என வினவியுள்ளார். இத்துடன் 'வேந்துவிடுதொழில்' எனப்பட்ட அரசபணியின் பொருட்டுத் தன் உயிர்த் துணைவியைப் பிரிந்து போர்மேற் சென்ற தலைவன் ஒருவனின், 'துணை இலேம் தமியேம் பாசறை யேமே' (நற்.341) எனும் பாசறைப் புலம்பலையும் விளக்கி இந்தத் தலைவனின் சிந்தனையாக, 'நாடு அமையாமல், அரசு நிறுவாமல், போர்புரியாமல் இந்தப் பழங்குடியினரின் வாழ்வு முறையிலேயே எம் வாழ்வும் அமைந்திருந்தால்' பிரிந்தது துன்பப்படுகிற துயர் நேர்ந்திருக்காதே' (93) என்பதை முன்வைத்து இதை ஆண்களின் உளவியலாகக் காட்டியுள்ளார். இந்த நற்றிணைப் பாடலும் 'படை வேண்டா, போர் வேண்டா' என்ற எண்ணத்தை மன்னர் மனதில் விதைப்பதற்காகவே புலவனால் பாடப்பட்டுள்ளது என்கிறார்.

போர்க்களம் ஏர்க்களமாக உருவகித்துப் பாடப்பட்டுள்ள புறநானூற்றின் 369ஆம் பாடலையும் அதற்கான ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் உரையையும் எடுத்துக் காட்டி, தலைசாய்த்து வீழும் வீரர், வளைந்து தலைசாய்ந்து நிற்கும் பசிய பயிராக வும் பிணக்குவை போராகவும் உருவகம் செய்துகொள்க என்கிறார் உரையா சிரியர் (103)

எனக் கூறி, 'உருவகம் கொண்டு நம்மால் உள்ள மகிழ முடியுமா?' (103) என்கிறார். இந்த வினா

# உன் மக்களைப் போரில் ஈடுபடுத்தி' கழுகுகளுக்கு விருந்துவை எனப் போர் வெற்றியைத் தூண்டவில்லை...

*நம்முள்ளத்தில் எழுப்பும் அவல உணர்வுகளுக்குப் மேன்மேலும் துன்பம் சேர்க்கும் வகையில் 19ஆம் புறப்பாட்டினை விளக்கியுள்ளார்.*

**"குன்றத் திறுத்த குரீஇயினம் போல**
**அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்**
**தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து**
**நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள**
**எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்" (19:8-12)**

*எனும் இந்தப் 'பாடலைத்தான் உலக அமைதிக்கான புறநானூற்றுச் சிந்தனையின் உச்சம் என உரைக்க நினைத்தேன்' (94) எனக் கூறி, இந்த அடிகள் முன்வைத்துள்ள யானையின் உயிர்வதை எனும் அவலமே போதியாய் நின்று 'போர் வேண்டா' என்ற சிந்தனையைத் நமக்குத் தருகிறது என்பதை விளக்கியுள்ளார். இது உயிர்நேயத்தின் உச்சபட்சமாகவும் அமைந்துள்ளது.*

*கலிங்கப்போரின் அவலம் கண்ட அசோகரைப் போல,*

**இந்தமண்**
**மழையால் நனைக்கப்படுவதற்கானது.**
**ஏர்க்கலப்பையால் உழுவதற்கானது.**
**உழுதபின் விதைத்து**
**விளைத்து அறுவடைசெய்து**
**உலக உயிர்களுக்கெல்லாம்**
**பகுத்தளித்துப் பசியாற்றுவதற்கானது**
**இதைத்தான்**
**வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்**
**பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை ஊன்றுசால்**
**மருங்கின் ஈன்றதன் பயனே (புறம். 35)** *என்கிறது புறநானூறு (109)*

*எனக் கூறிப் புறநானூற்றின் வழி, தான் பெற்ற உலக அமைதிக்கான வழியை,*

**இப்போது சொல்லுங்கள்**
**கவிதை என்ன செய்யும்?**
**'போர் வேண்டா'**
**எனச் சொல்லச் செய்யும்.**

**இப்போது சொல்லுங்கள்**
**புலமை என்ன செய்யும்?**
**'உலக அமைதி'**
**வேண்டுமென்று எழுதச் செய்யும்.**

**எது வேண்டும்?**

*'யாவரும் கேளிர்' என உலக உயிர்களை உற வாக்கி*

*உலக அமைதியை உருவாக்கும் உயரிய*
**அற மூலிகையாம்**
**உயிர்களின்**
**உயர்மொழியாம் (புற. 394)**
**'தமிழ் வேண்டும்' (111)**

*என முன்வைத்து 'உலக உயிர்களை வதைசெய்யும் போர்வேண்டா என்றுள்ளார்.*

*போரில்லாது அமைதி மட்டுமே நிலவும் அனை வருக்குமான, உலக உயிர்கள் அனைத்துக்குமான உலகம், போர் உழவல்லாத ஏர் உழவால் விளையும் பொது விளைச்சல், 'யாவரும் சுற்றம்' எனும் ஒற்றை உறவு, அந்த ஒற்றை உறவு நோக்கிய ஒட்டுமொத்த உலக உயிர்களுக்கான பகுத்துண்ணல், இவற்றுடன் இந்தச் சிந்தனை களை எல்லாம் தனக் குள் கொண்டுள்ள தமிழ் எனும் தாய்மைமொழி காட்டும் வாழ்வறமாகிய அறமூலிகை என்பனவே, சங்கத்தமிழ்வழி இந்நூல் காட்டும் வழி என்பதை, 'அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது, மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல' (நற்.136) உலகினர்க்கான வாழ்வறமாய் வைத்துள்ள கவிஞர் அறிவுமதி நம்முன் பயிர்தொழில் பேணிய 'நம்' ஆழ்வாராய்ப் பேருருவம் கொண்டு நிற்கிறார்.*

*1990இல் வெளிவந்த அணுத்திமிர் அடக்கு எனும் (அறிவுமதி, தமிழோசை பதிப்பகம், 1999) கவிதைத் தொகுப்பில் அவர் உயிர்நல நோக்கில் பதியம் போட்டுள்ள,*

**இராணுவம் அழி**
**அரசுகள் அற்ற அரசினைச் செய் (155)**
**இயற்கையை மகிழ்ச்சி செய் (153)**
**ஒற்றை வயிற்றுள் உலகை நுழை நுழை (1999:152)**

*எனும் சிந்தனைச் செடிகளின் விருட்சமாய் உருக்கொண்டு நிற்கும் இந்த நூல் உயிர் நலம், இயற்கை நலம் பேணும், பேண விரும்பும் அனைத்து மனிதர் களுக்குமான வழிகாட்டியாய், ஆற்றுப்படையாய் அமைந்துள்ளது. இயற்கைநலம் பேணா அல்லோரின் மனக்கோட்டம் போக்கும் நூலாய், பாடம் புகட்டும் பாடநூலாய் உருப் பெற்றுள்ளது. இதனால் இது வாசிப்பதற்கான நூல் மட்டுமே அன்று வாழ்வதற்கான வாழவைப்பதான அற நூலுமாம்.*

●

# அச்சத்துக்குரியது மூ

• க.சுப்பிரமணியன்

**இரு நாடுகளுக் கிடையே போர் மூளும் போதெல்லாம், மூன்றாம் உலகப் போர் குறித்த அக்கறையோ, பயமோ தொனிக்கும் கட்டுரைகள், பதிவுகளை சமூக ஊடகங்களிலும் பத்திரிகை களிலும் நாம் காணமுடியும்.**

இன்றைய உலகச் சூழலைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் இஸ்ரேல்- பாலஸ்தீன விவகாரத்தில் ஒரு நெடும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரஷ்யாவுக்கும்- உக்ரைனுக்குமான போர் ஆண்டுக் கணக்கில் நீடிக்கத் தொடங்கிவிட்டது. தைவானை சீனா அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. பஹல்காம் சுற்றுலா தளத்தில் இந்தியப் பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும்கூட ஒருமுறை மோதி அமைதியாகியிருக்கின்றன. அது போக ஒவ்வொரு நாடும் தன் பக்கத்து நாட்டுடன் ஒரு பஞ்சாயத்தை வைத்திருக்கின்றன. பெட்ரோல் பற்றிக்கொள்வதைவிட மிக எளிதானது ஒரு உலகப் போருக்கான வாய்ப்பு!

முதலாம் உலகப் போர் நிகழ்ந்த காலகட்டமான 1900 காலகட்டங்களில் ஐரோப்பாவில் பல்வேறு நாடுகள் வளர்ச்சி கண்டுவந்தன. தொழில் மற்றும் அறிவியல் புரட்சியின் காரணமாக பல நாடுகள் வளமாகத் திகழ்ந்ததுடன் இராணுவ பலத்தையும் அதிகரித்துவந்தன. பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவும் குடியேற்ற நாடுகளைச் சுரண்டி அங்கே தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி செல்வாக்குடன் திகழ்ந்தன. தங்களது இந்த வளத்தையும் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்த அருகிலுள்ள நாடுகளுடன் கூட்டு சேர்ந்துகொண்டு, கூட்டு நாடுகளில் ஏதாவது ஒன்று பாதிக்கப்பட்டால் பிற நாடுகள் உதவிக்கு வரவேண்டும் என ஒப்பந்தம் செய்துகொண்டன.

இந்தச் சூழலில்தான் ஆஸ்திரியாவின் அரசர் பிரான்ஸ் ஃபெர்டினாண்ட், செர்பிய நாட்டவன் ஒருவனால் கொலைசெய்யப்பட ஆஸ்திரிய- செர்பிய பிரச்சனையில் ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் அணி சேர்ந்த நாடுகளுக்கு இடையிலான போர் உலகப் போராக உருவெடுத்தது.

இந்தப் போரில் நேச நாடுகள் எனப்பட்ட பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான், சீனா போன்ற நாடுகள் ஒரு அணியிலும். மைய நாடுகள் எனப்பட்ட ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா உள்ளிட்ட நாடுகள் ஒரு

# ன்றாம் உலகப் போரல்ல!

அணியிலும் இருந்தன.

பிற விவரங்களுக்குள் செல்லாமல், இந்தப் போரில் இறந்தவர்களின் கணக்குக்கு வருவோம். முதல் உலகப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை தோராயமாக 2 கோடியே 20 லட்சம் பேர்.

முதல் உலகப் போர் முடிந்து வெகுகாலமெல்லாம் செல்லவில்லை. 1939-லேயே இரண்டாம் உலகப் போருக்கு உலகம் ஆயத்தமாகிவிட்டது. மோதலில் பலிகொடுக்கப்பட்ட 2 கோடியே 20 லட்சம் பேரின் உயிர்த்தியாகத்துக்கு எந்த அர்த்தமும் இருக்கவில்லை.

முதல் உலகப் போரில் தோல்வியுற்ற ஜெர்மன் மீது வெற்றிபெற்ற நாடுகள் திணித்த வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமும், ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சியும் இத்தாலியில் முசோலினியின் எழுச்சியும் ஒரு காரணம் என்றால், ஜப்பானின் நாடு பிடிக்கும் பேராசை மற்றொரு காரணம்.

இந்த முறை அச்சு நாடுகள் என்றழைக்கப்பட்ட ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் ஒரு அணியிலும் நேச நாடுகள் என்றழைக்கப்பட்ட பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகள் இன்னொரு அணியிலும் இருந்தன. முக்கியமாக இந்தக் காலகட்டத்தில் ஆயுத உருவாக்கத்தில் பல நாடுகள் வெகுவாக வளர்ச்சியடைந்திருந்தன. அமெரிக்கா அணுகுண்டையே உருவாக்கியிருந்தது.

இரண்டாம் உலகப் போரில் 8.5 கோடிப் பேர் இறந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் ஜப்பானின் நாகசாகி, ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சில் இறந்தவர்கள் மட்டும் 2.25 லட்சம் பேர். அணுக்கதிர்வீச்சு தாக்கத்துக்கு ஆளாகி மெல்ல மெல்ல இறந்தவர்கள் கணக்கு தனிக் கணக்கு.

முதல் உலகப் போர் நிகழ்ந்த காலகட்டத்தில் உலக மக்கள் தொகை 186 கோடி. அதில் இறந்தவர்கள் உலக மக்கள் தொகையில் 1.18 சதவிகிதம். இரண்டாம் உலகப் போர் காலகட்டமான 1945-ல் உலகின் மக்கள் தொகை 230 கோடி. அந்த உலகப் போரில் மட்டும் அன்றைய உலக மக்கள் தொகையில் 3 சதவிகிதத்துக்கும் அதிகமானவர்கள் இறந்திருக்கின்றனர்.

இன்றைக்கு உலகின் மக்கள் தொகை 820 கோடி. தவிரவும் இன்றைய உலகில் அணுகுண்டு வைத்துள்ள நாடுகள் மட்டும் 9. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன், பிரான்ஸ், வடகொரியா, இஸ்ரேல். இதில் இஸ்ரேல் மட்டும் அணுகுண்டு வைத்திருப்பதை ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் அதனிடம் அணுகுண்டு இருப்பதாக பல நாடுகளும் நம்புகின்றன.

வல்லரசு நாடுகளின் ஆயுத வியாபாரத்தால், குட்டிக் குட்டியான நாடுகள், வறுமையில் தவிக்கும் நாடுகளைத் தவிர உலகின் அனைத்து நாடுகளும் ஏவுகணைகளையும், போர் விமானங்களையும் பரவலாக வைத்திருக்கின்றன. எனவே உலக நாடுகள் புரிதலின்மை காரணமாகவோ, யார் பெரியவன் என்ற ஆணவத்திலோ, உணர்ச்சிவசப்பட்டோ போரில் இறங்கி, அது உலகப் போராக உருப்பெறுமானால் எந்தப் பக்கம் வெற்றிபெறும் எனச் சொல்வது எளிதல்ல.

**இந்தியாவில் எந்த ஒரு பெரிய நகரமும், தூய காற்றைக் கொண்டிருக்கவில்லை. அதாவது பாதுகாப்பான அளவு மாசு எனச் சொல்லப்படும் காற்று மாசைக் கொண்டிருக்கவில்லை.**

அப்படியே ஒரு அணி வெற்றிபெற்றாலும், தோல்வியுற்ற அணியானது வெற்றிபெற்ற அணிக்கு மறக்கமுடியாத பேரழிவுப் பாடங்களைக் கற்பித்திருக்கும். மொத்தத்தில் இரு பக்கத்துக்கும் பெருஞ்சேதம் விளைந்திருக்கும். அப்படி ஒரு போர் நிகழ்ந்தால், இந்த முறை மரணமடைவது 1 சதவிகிதமாகவோ, 3 சதவிகிதமாகவோ இருக்காது. அது 25%, 30% என எகிறினாலோ, அல்லது ஒட்டுமொத்த மனித குலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களைத் தவிர்த்து ஒட்டுமொத்த உலகமோ அழிந்தாலும் ஆச்சரியமில்லை. இந்தக் காரணத்தால்தான் மூன்றாம் உலகப் போரைக் குறித்த அச்சம் ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கிறது.

# 2050-ல் உலகிலேயே அதிக சர்க்கரை நோயாளிகள் இந்தியாவில்தான் இருப்பர் என மதிப்பிடப்படுகிறது.

ஆனால், இன்று உலகப் போரைவிடவும் ஆபத்து நிறைந்த விஷயமொன்று உலக நாடுகளைச் சூழ்ந்திருக்கிறது. அது கண்முன் துலக்கமாகத் தென்பட்டபோதும் அதைக் கண்டுகொள்ளாமல், நாடுகள் தங்களது வழக்கமான பொருளாதாரப் பேராசையில் இறுக கண்களை மூடிக்கொண்டுள்ளன.

2023 கணக்குப் படி இந்தியாவில் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 10 கோடி. இதுவும் துல்லியமான கணக்கல்ல. இன்னும் பலர் தங்களுக்கு வந்துள்ள சர்க்கரை நோயைக் குறித்த தெளிவின்றியே அதனுடனே வாழ்ந்துவருகின்றனர். ஏதாவது அதீத உடல் மெலிவு, அல்லது இதர உடல்நலக் குறைவுக்காக மருத்துவரிடம் செல்கையில் அவர் கண்டுபிடித்துச் சொல்லும்போதே தங்களுக்கு சர்க்கரை நோய் இருப்பதை அவர்கள் அறியவருகின்றனர்.

இந்தியாவின் கணக்கு இப்படியென்றால் 2023 கணக்குப்படி உலகில் சர்க்கரை நோய் பாதிப்புடையவர்களின் எண்ணிக்கை 53.7 கோடிப் பேர். அதேபோல இதுவும் முழுமையான, துல்லியமான எண்ணிக்கையல்ல வளர்ந்த, வளரும் நாடுகள் தரும் கணக்கு ஓரளவு துல்லியமாக இருக்கலாம். மாறாக, ஏழ்மையிலிருக்கும் நாடுகளில் சர்க்கரையால் பாதிக்கப்பட்டோரின் கணக்கு முழுமையாகவும் இல்லை. அதைக்குறித்து அந்த நாடுகள் பெரிய அக்கறை செலுத்துவதும் இல்லை.

இந்திய மக்கள் தொகையில் 30 சதம் பேர் உயர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவே உலகில் 113 கோடி பேர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்சொன்னதுபோலவே இதிலும் நாடுகளின் கணக்கீட்டின் துல்லியமின்மையால், தரவுகள் இன்மையால் விடுபட்டவர்கள் இன்னும் சில சதவிகிதம் இருப்பார்கள்.

2022 கணக்கீட்டின்படி இந்தியாவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் 14.5 லட்சம் பேர். உலகில் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்கள் 2 கோடிப் பேர். உலக மக்கள் தொகையில் 38% பேர் உடற்பருமன் உடையவர்கள். இது 2035-ல் 50 சதவிகிதமாக மாறும் என கணித்துள்ளனர். இந்தியாவில் மக்கள்தொகையில் 20% பேர் உடற்பருமனால் பாதிக்கப்பட்டவர்கள் என்று ஒரு தரவு கூறுகிறது.

இந்தியாவில் எந்த ஒரு பெரிய நகரமும், தூய காற்றைக் கொண்டிருக்கவில்லை. அதாவது பாதுகாப்பான அளவு மாசு எனச் சொல்லப்படும் காற்று மாசைக் கொண்டிருக்கவில்லை. அதிலும் தலைநகரான டெல்லியின் மாசு அளவு, கேஸ் சாம்பர் எனச் சொல்லக்கூடிய ஆட்களைக் கொல்லப் பயன்படுத்தக்கூடிய விஷவாயு அறை போலத்தான் இருக்கிறது என எச்சரித்துள்ளார்கள். இந்திய நகரங்கள் மட்டுமில்லை. உலக நகரங்கள் முழுக்கவே இதுதான் கதை. பிற நாட்டு நகரங்கள் இந்தியாவைவிட சற்று மேம்பட்ட நிலையிலிருக்கும் மாசைக் கொண்டிருக்கலாம்.

இவை தவிர இன்னும் ஆயிரம் நோய்கள். மேற்சொன்னதில் ஒருவரே சர்க்கரையையும் ரத்த அழுத்தத்தையும் கொண்டிருக்கலாம். இன்னொருவர் புற்றுநோயுடன் சர்க்கரை நோய்க்கு ஆளாயிருக்கலாம். அதாவது வளர்ச்சியின் பெயரால் நோய்களுக்கு நம் ஆயுளைச் சந்தாவாகக் கட்டியிருக்கிறோம்.

இந்தியாவை எடுத்துக்கொண்டால் 2020-ல் சர்க்கரை நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 91,000 பேர். 2050-ல் உலகிலேயே அதிக சர்க்கரை நோயாளிகள் இந்தியாவில்தான் இருப்பர் என மதிப்பிடப்படுகிறது. இப்படியே உயர் ரத்த அழுத்த நோயால் இறந்தவர்கள், புற்றுநோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை என கணக்கிட்டோமானால், ஒரு உலகப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கையை, ஒரு பத்தாண்டு கால நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை எளிதில் பின்தங்கச் செய்துவிடும்.

அதாவது, ஒரு துப்பாக்கிக் குண்டு வெடிக்காமல், ஒரு பீரங்கி முழங்காமல், ஒரு போர்விமானம் குண்டு வீசாமல் போரை பின்னுக்குத் தள்ளிவிடக்கூடியவை இன்றைய நவீன நோய்கள்.

ஆகவே, நுகர்வு மற்றும் பேராசையின் யுகத்தில் மனிதன் அஞ்சவேண்டியது மூன்றாம் உலகப் போருக்கு அல்ல. மனிதனின் பேராசையாலும் விழிப்புணர்வின்மையாலும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வின்மையாலும், மக்களை ஆக்கிரமித்திருக்கும் பேரழிவு நோய்களை எண்ணியே பயப்படவேண்டும். அதைக் குறித்த சிந்தனைகளே உலகை ஆள்பவர்களின் சிந்தனையாய் இருக்கவேண்டும்.

●

• மாலதி

# வரலாற்றைப் பேசும் நாணயங்கள்!

வரலாறு என்றாலே நமக்குச் சுவாரசியம் பிறந்து விடும். நம் முன்னோர்கள், வாழ்வியல் முதல் அனைத்துக் கூறுகளையும் இலக்கியப் பாடல்கள், கதைகள் முதலானவற்றின் மூலமும் வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் செல்கிறார்கள். அணு முதல் அண்டம் வரை பற்றிய அனைத்தும் அவற்றுள் அடக்கம் என்பது மெய் ஆகும். இயல்பிலேயே நம் தமிழ்ச் சமூக மரபணுக்களில், கதைகள், வரலாறு சார்ந்த கதைகள், வரலாற்று நிகழ்வுகள் முதலான வற்றை ஆர்வத்துடன் கேட்டு உட்கிரகிக்கும் பண்பு உள்ளது என்பது யாவரும் அறிந்ததே ஆகும். அத்தகைய ஆர்வமும் உழைப்பும் சேர்ந்த ஒருவரால் உருவாக்கப்பட்ட ஒரு ஆவணப் புத்தகம் தான் 'பழங்காசுகளை அறிவோம்'.




**நூலாசிரியர் பற்றிய குறிப்பு**

புதுச்சேரியைச் சேர்ந்தவர் இந்நூலின் ஆசிரியர் த.ந. கோபிராமன் ஆவார். புதுச்சேரியில், தொண்டை மண்டல நாணயவியல் கழகம் (THONDAIMANDALA NUMISMATICS SOCIETY) (பதிவு எண்: 221/07) என்ற அமைப்பு 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். இந்தத் தொண்டை மண்டல நாணயவியல் கழகம் (தொ.ம.நா. கழகம்) த.ந.கோபிராமனால் நிறுவப் பட்டதாகும். மேலும், 'தொல்புதையல்' காலாண்டிதழின் நிறுவுநர் மற்றும் ஆசிரியராகவும் இவர் உள்ளார். இவ்விதழானது, 2006-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டதாகும்.

மேலும், புதுச்சேரி வரலாற்றுச் சங்கம் (La Société de l'Histoire de l'Inde française) என்ற அமைப்பு நூறு ஆண்டுகளைக் கடந்து, வரலாறு படைத்து வருகிறது. இச்சங்கம், 1911-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். இந்திய அளவில் வேறெங்கும் தோன்றுவதற்கு முன்னர், பிரஞ்சியர்களால் தோற்றுவிக்கப்பட்ட மிகப் பழமையான வரலாற்றுச் சங்கமாகும்.

பிரஞ்சிந்தியா, 1954-இல் இந்தியாவுடன் இணைக்கப் பட்ட பிறகு, பிரஞ்சிந்திய வரலாற்றுச் சங்கம் (La Société de l'Histoir de l'Inde Française), புதுச்சேரி வரலாற்றுச் சங்கம் (La Sociét de l'Histoire de Pondichéry) எனப் பெயர் மாற்றப்பட்டது.

La Revue Historique de Pondichery எனும் இதழ், 1916 ஆம் ஆண்டு முதன்முதலில் வெளியிடப்பட்டது. இது புதுச்சேரி வரலாற்றுச் சங்கத்தின் இதழாகும். 1916ஆம் ஆண்டு முதல் நடக்கும் 2025 ஆம் ஆண்டு வரை இதுவரை 26 இதழ்கள் வெளியாகி உள்ளன. இந்தப் புதுச்சேரி வரலாற்றுச் சங்கத்தின் பொருளாளராக, 'பழங்காசுகளை அறிவோம்' எனும் இந்நூலாசிரியர் உள்ளார்.

தொ.ம.நா. கழகம் என்பது சேகரிப்புக் கலையை வளர்க்க, ஊக்குவிக்க நோக்கமும் குறிக்கோளும்

கொண்டதாகும். அதன் செயல்பாடுகளில் ஒன்றாக, இக்கழகத்தின் வழியே, 'தொல் புதையல்' காலாண்டிதழ் வெளியாகி றது.

'தொல்புதையல்' இதழில் இடம்பெறும் செய்திகள், கட்டுரைகள், பலவிதமான பழம்பொருட்கள் பற்றிய விவரங்கள், இன்னும் பல என யாவும் நம் பழம்பெருமைகளை படங்களுடன் பறைசாற்றக் கூடியதாக இருக்கிறது. அதன் உள்ளடக்கம் யாவும் நம் முன்னோர்களின் வரலாற்றுத் தடங்கள் பற்றியதே ஆகும்.

'தொல்புதையல்' இதழில் வெளியான, 'பழங் காசுகளை அறிவோம்' என்ற கட்டுரைத் தொடரின் தொகுப்பே இந்நூலாகும். இது ஆசிரியரின் இரண்டாவது நூலாகும்.

இந்நூலில், நாம் படித்தறிய வேண்டிய வரலாற்று உண்மைகளும் ஆச்சரியங்களும் பொதிந்து கிடக்கின்றன என்பது மிகையில்லை. அதனை, இந்த நூலில் உள்ள அணிந்துரை மற்றும் வாழ்த்துரை மூலமும் அறியலாம்.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியவர் களில் ஒருவர் புதுச்சேரி அரசு மேனாள் பள்ளிக்கல்வி இணை இயக்குனர் அ. ராமதாசு. இந்நூலைப் பற்றி எழுதிய அணிந்துரையில், 'நாணயங்கள் பற்றிய அளவற்ற விவரங்களையும் விளக்கங்களையும் அனைவரும் படித்து புரிந்து கொள்ளும் வகையில் ஆர்ப்பாட்டம் இல்லாத எளிய மொழியில் நடையில் வெளியிட்டிருக்கும் த. ந. கோபிராமனுக்கு நம் பாராட்டையும் வாழ்த்தை யும் தெரிவித்துக் கொள்வதோடு அவரை ஊக்குவிக் கும் வகையில் நூலை வாங்கி படித்து இன்புறுவோம்' என்று பாராட்டி வாழ்த்தியுள்ளார்.

புதுச்சேரி வரலாற்று சங்கத்தின் காப்பாளர் மற்றும் புரவலரான மருத்துவர் நல்லாம் வாழ்த்துரை வழங்கி உள்ளார். அவருடைய வாழ்த்துரையில், "நாணயவியலில் அவருடைய ஆர்வத்தையும் செயல்பாட்டையும் பாராட்டி புதுச்சேரி வரலாற்றுச் சங்கம் தனது நூற்றாண்டு விழாவில் 'நாணயச் செம்மல்' என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தது" என்று நூல் ஆசிரியரை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறையின் பேராசிரியர், புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தின் மேனாள் துறைத் தலைவர் மற்றும்

இயக்குனர், முனைவர் க. நாகராஜன் அணிந்துரையில், ''நாணயம் எனும் ஒற்றைப் பொருளை மட்டும் எதிர்பார்த்து வாசித்த எனக்கு எதிர்பாராத பல பரிமாணங்களை நூல் அருளியது'' என்று தன் அனுபவத்தைப் பகிர்ந்து உள்ளார். மேலும், எளிய மொழியில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது என்றும் ஒரு சிறப்பு ஆய்வு நூலுக் கான இறுக்கம் இதில் இல்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

சேகரிப்புக் கலையை வளர்க்கும் எண்ணத்தில் திரட்டிய பல்வேறு வரலாற்று விவரங்களும் விளக்கங்களுடன் கூடிய இந்தப் புத்தகத்தின் முன்னுரையில் கவனயீர்ப்பு செய்யும் ஒரு வாக்கியம் உள்ளது. 'ஒவ்வொரு பழைய காசும் ஒரு வரலாற்றை தன்னுள் அடக்கிக் கொண்டுள் ளது' என்பதே அதுவாகும். பழங்காசுகளைத் தொகுத்து வைப்பதும் வரலாற்றுச் சான்றுகளைத் தொகுத்து வைப்பதைப் போன்றதாகும் என்றும் குறிப்பிட்டுள் ளார் ஆசிரியர். இது பழம்பெருமை பேசுவதற்கு மட்டும் இல்லை. வேறு என்னென்ன என்பதை, இப்புத்தகத் தைப் படித்தால் அறியலாம்.

பல்லாண்டுகள் கடந்தாலும் பழமையான சான்றுகளில், பாறை / கோயில் கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், ஓலைச்சுவடிகள் என இன்னும் பலவற்றைச் சொல்லலாம். அதில் முதன்மைச் சான்றுகளில் ஒன்றாக நாணயங்களைப் பற்றிச் சொல்லலாம். அத்தகைய நாணயங்கள் சொல்லும் வரலாறு நமக்குப் பல நூறு ஆகும்.

ஆதி மனிதனைப் பற்றித் தொடங்கி, உலக நாடுகள் பலவற்றில் காசுகளின் தோற்றம், பண்டமாற்று முறை எவ்வாறு இருந்தது என்று விவரிக்கிறது இந்நூல். மேலும், இதன் மூலம், எந்தெந்த பொருட்கள் பண்டமாற்றும் முறைக்கு பயன்படுத்தப்பட்டன என்பதையும் நாம் அறியலாம்.

காசுகள் குறித்த சொல்லாடல், பயன்படுத்தப்பட்ட உலோகங்கள், அதன் வடிவங்கள், எடை, விட்டம், முத்திரைகள், குறியீடுகள், கடவுளரின் வடிவங்கள், மனித உருவங்கள், அஃறிணை வடிவங்கள், காசுகளில் இருக்கும் சின்னங்கள், தமிழ் தொல் எழுத்துகள் என இப்படிப் பல்வேறு கூறுகள் பற்றி விளக்கி எழுதியுள்ளார் இந்நூலாசிரியர் த.ந.கோபிராமன்.

இந்நூலிலிருந்து, உதாரணமாக சிலவற்றை, இங்கு வாசகர்களின் ஆவலுக்காகப் பகிர்கிறோம்.

அக்காலத்தில் இருந்த பண்டமாற்றுப் பொருள்கள் பற்றி உதாரணமாகக் காட்டுவதெனில், ரசியா, சீனா, திபெத் போன்ற நாடுகளில், தேயிலையும் அமெரிக்கா, வெர்ஜினா, மேரிலேண்ட், வடக்கு நார்லினாவில் புகையிலையும் நியூகுனியாவில் நாயின் பல்லும் அபிசினியா, ஆப்பிரிக்க நாடுகளில் உப்பும் ரோமானியர்களிடத்தில் வெண்கலக் கட்டிகளும் இருந்துள்ளனவாம்.

கோபிராமன்

பண்டமாற்று முறை களைப் பற்றிச் சொல்வ தானால், மேற்கு ஆப்பிரிக்கா வில் வியாபாரிகள் தங்கம், கோலாநட், பருத்தி, உப்பு போன்ற வற்றைப் பயன்படுத்தி அடிமைகளை வாங்கவும் விற்கவும் பயன்படுத்தினார்களாம்.

நாணயங்கள் உபயோகத்திற்கான சூழல்கள் எனில் உதாரணமாக, மன்னர்களின் வெற்றி, இராணுவ வெற்றி, திருமண ஒப்பந்தங்கள் உறுதிப்படுத்துதல், அரசாட்சிக்குரிய சின்னங்கள்/ அரசியல் நடவடிக்கை கள், சமயச் சடங்குகள்/ பூசைக்குரிய மங்கலப் பொருள், மாண்டவர்களின் வாயிலும் கையிலும் வைத்தல் எனக் குறிப்பிடலாம்.

எந்தெந்த நாடுகளில் காசுகள் குறித்த வழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்பதுடன் அது குறித்த வரலாறும் நமக்கு அறியத் தருகிறார்.

இந்நூலில், சங்க கால, சேர சோழர் பாண்டிய மன்னர்கள், மலையமான்கள், பல்லவர்கள் உட்பட முகலாயர்கள் மற்றும் கிழக்கிந்திய கம்பெனி காலம் வரை விவரங்கள் கிடைக்கின்றன. தொடர்புடைய ஆட்சி காலத்தைப் பற்றிய விவரங்களும் இருக்கின்றன

இப்படி நாணயங்களின் வழியே, உலக வரலாற் றினை, இந்திய வரலாற்றினை, தமிழக வரலாற்றினை, புதுச்சேரி வரலாற்றினை வெளிக்கொணர்ந்து செய்திகளைத் தருகிறார் ஆசிரியர்.

இந்நூலின் பிற்பகுதியில், பின் இணைப்புகளாக, பழங்காசுகள் குறித்த சில கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவை, வெவ்வேறு தளங்களில் வெவ்வேறு ஆளுமைகள் எழுதியவை ஆகும்.

மேலும், 193 நாடுகளின் பெயர்களும் நாணயங்களின் பெயர்களும் இந்நூலில் பட்டியலிடப்பட்டுள்ளது.

நம் வரலாற்று ஆவணங்களில் முக்கியமான ஒன்றாக, இந்தப் படைப்பு இடம்பெறும் என்பதில் பெருமையும் மகிழ்வும் அடைகிறோம். இது போன்ற படைப்புகள், இன்னும் வெளிவரட்டும்!

**தலைப்பு:** பழங்காசுகளை அறிவோம்

**ஆசிரியர்:** த.ந. கோபிராமன்

**பக்கங்கள்:** 160

**விலை:** ரூ 200/-

**வெளியீடு:** தொல்புதையல் பதிப்பகம், புதுச்சேரி.

# கிரிக்கெட் கறுப்புச்சந்தையை நோக்கி ஒரு யார்க்கர் பால்!

## -பிளாக்ஃபாரஸ்ட்டும் சில சிந்தனைகளும்...

**'உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து'**

என்பது வள்ளுவர் வாக்கு.

இதைச் சொல்லும் குறளே இரண்டடிதான். ஆனால் குறளின் ஆழமும் விரிவும் எத்தனை பெரியவை என தமிழர்க்குச் சொல்லவேண்டியதில்லை. நம் எல்லோருக்கும் ஆலம் விதை எத்தனை சிறிதென்றும், ஆலமரம் எத்தனை பெரிதென்றும் தெரியும். விளக்க வேண்டியதில்லை.

இன்னும் ஒரு உதாரணம் சொல்லப்போனால், அரைமணி நேர தொலைக்காட்சித் தொடர்கள் கடத்தாத உணர்வை, இடைவேளையில் வரும் ஒரு நிமிடத்துக்கும் குறைவான விளம்பரங்கள் கடத்திவிடுவதை எத்தனையோ முறை பார்த்திருப்போம். தன்னம்பிக்கை, சமத்துவம், பெண்ணியம் என ஏகப்பட்ட விஷயங்களை சுருக்கென மனதில் தைக்க உணர்த்தி விட்டு, கூடவே தாங்கள் முன்னிறுத்தும் பொருளையும் நம்மை வாங்கத் தூண்டுபவை விளம்பரங்கள்.

அதேபோல இரண்டு மணி நேர திரைப் படங்கள் தங்கள் குறிக்கோளில் சாதிக்கத் தவறும் விஷயங்களை, சில நிமிட குறும்படங்கள் சாதித்துவிடுவதை பல சமயங்களில் ஆச்சரியத்துடன் பார்த்திருப்போம்.

அத்தகையதொரு குறும்படத்தைப் பற்றிய கட்டுரைதான் இது.

ராஜி டாக்கீஸ் நிறுவனம் தயாரித்துள்ள 'பிளாக்ஃபாரஸ்ட்' குறும்படத்தைப் எழுதி இயக்கியிருக்கிறார் ராம்பிரசாந்த். ஜி.

இந்தியாவையே ஏப்ரல்- மே மாதங்களில் பித்துப் பிடித்ததாக மாற்றும் வல்லமை மிக்கதாக மாறியிருக்கிறது டி-20 கிரிக்கெட் ஆட்டம்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக அதன் கேப்டன் தோனி களமிறங்கும்போது, ரசிகர்கள் எழுப்பும் கூச்சலையெல்லாம் கணக்கிட்டு எத்தனை டெசிபல் சத்தமெழுந்தது என கிரிக்கெட் வர்ணனையாளர்கள் பெருமிதமாகக் குறிப்பிடுவதெல்லாம் ஆட்டத்தில் நடக்கும். இதே சென்னை அணி, சூதாட்டத்துக்கு இடம்தந்ததாகக் கூறி இரண்டு வருடங்கள் ஆட்டத்திலிருந்தே ஒதுக்கிவைக்கப்பட்ட நிகழ்வுகளும் நடந்தது.

ஒதுக்கிவைக்கப்பட்டதால் என்ன நடந்தது? புதிதாக இரண்டு அணிகள் உருவாக்கப்பட்டு, அந்த அணியில் சென்னை

இந்தப் படத்தை முதல்ல என்னோட நண்பரும் எடிட்டரு மான மார்ட்டின் டைட்டஸ்கிட்ட பேசுனேன். அவர், எனக்கு திரைத்துறைல வாய்ப்புத் தேடுற நவீன் குமார் என்னும் உதவி இயக்குநரா இருக்கும் நண்பரை பரிந்துரை செய்தார். அவர்கிட்ட இந்தக் கதைசார்ந்து பேசிக்கிட்டிருக்கும்போது கிடைச்சது தான் என்னோட கேமராமேன் அமல்வல்சன். படம் ரியலிஸ்டிக்கா, வியந்துபார்க்க வைக்கிறதா, எப்படி வரணும்னு சொன்னேன். ஒரு கூட்டத்துக்கு நடுவுல ஆர்ட்டிஸ்ட்டுகளைவிட்டு எடுக்கிற கொரில்லா மேக்கிங் டெக்னிக் பற்றி அவர்தான் சொன்னார்.

நான் எடுக்க நினைச்ச கதைப்படி, நாயகன், பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர். ஒரு செய்தியாளருக்கு அவரோட வேலைக்குச் சிக்கல் வரும்போது, தன்னோட வேலையை நிலைநிறுத்த ஒரு ப்ரேக்கிங் நியூஸ் கொடுக்கவேண்டிய சூழல். அப்ப ஐ.பி.எல். நடந்துக்கிட்டிருக்கும். ஏன் இதையே வெச்சு ப்ரேக்கிங் நியூஸ் கொடுக்கலாம்னு போய் பார்க்கும்போது, அதைச்சுத்தி இயங்குற ப்ளாக் டிக்கெட் சந்தை பத்தி தெரியவரும். முதல்ல கதை இப்படி நேர்கோட்டுலதான் இருந்துச்சு. பிறகு டிஸ்கஷன்ல டாக்குமெண்ட்ரியா பண்ணாம, டாக்கு ட்ராமாவா எடுக்கிற யோசனைக்கு வந்தோம்.

படத்தை எல்லாம் எடுத்துமுடிச்ச பிறகு ஒரு இடத்துல தடுமாறிநின்னேன். இதை கரெக்டான வடிவத்துல கொண்டுவரலைன்னா படத்தோட கதையே குழப்பமாயிடும். அப்பதான் உருவகமா சொல்லலாம்கிற யோசனை வந்துச்சு. இது பாரின்னு ஒரு நண்பர் சொன்ன யோசனை தான்.

## “ரிஸ்குன்னு தெரிஞ்சேதான் இந்தக் கதையைப் படமாக்கினோம்!”

நானும் என்னோட எடிட்டரும் எடிட்டிங்குக்கு உட்காரும்போது படத்தை சீரியஸான டோனோட காட்டினாத்தான் கவனிப்பாங்கன்னு முடிவு பண்ணினோம். ‘நக்கீரன் 25’ டாக்குமெண்ட்ரி பண்ணின இசையமைப்பாளர் சுந்தர் சிவராமகிருஷ்ணன். அவரிடம் நாங்கள் கேட்டுக் கேட்டு இந்த இசையைக் கொண்டுவந்தோம்.

படத்துக்கு எஸ்.எப்.எக்ஸ் முக்கியம். காந்தி கதை, காந்தாரா உட்பட பல படங்கள் சவுண்ட் என்ஜினியரா பண்ணினவர் பாலாஜி. அவரும் இந்தக் குறும்படத்துக்கு பெரிய பங்களிப்பு தந்திருக்கார். போஸ்டர் உள்ளிட்ட டிசைன்களை, என்னுடைய க்ளாஸ்மேட் டிபோர் நல்ல தரத்துக்கு வெரைட்டியா பண்ணிக்கொடுத்தார்.

விளம்பரம் தந்து, 200 பேர் எனக்கு ரெஸ்யூம் அனுப்பி ஒரு ஸ்க்ரீனிங் பண்ணி 3 பேரைத் தேர்ந்தெடுத்தேன். இது ஒரு கூட்டுமுயற்சி. நடிச்சவங்கள்ல இரண்டு பேர் என் ஆபிஸ்ல உள்ளவங்க. ஒருத்தரை பாண்டிச்சேரியில பிடிச்சோம்.

இதை படமாக்குறது சிரமமா இருக்கும் ரிஸ்குன்னு தெளிவா தெரிஞ்சுதான் பண்ணினோம். பொதுவா குறும்படம் ஒரு வரம்புக்குட்பட்ட, சின்ன இடத்துல எடுப்பாங்க. அதுக்கு மாறாக, திரைத்துறைக்குப் போறோம் அதுக்கான பயிற்சியா இருக்கணும்னு நினைச்சோம். ஒரு அறுபதாயிரம் பேர் கூடுற இடத்துல குறும்படம் எடுக்கிற முடிவெடுத்தோம். ஒரு கட்டத்துல பட்ஜெட் ரொம்ப அதிகமாச்சு. ஒரு பயம் வந்து, படத்தை ட்ராப் பண்ணிடலாம்னுகூட யோசிச்சோம். அப்புறம், என்ன ஆனாலும் பரவாயில்லை ஷூட்டிங் போயிரலாம்னு தைரியமா ஷூட்டிங் கிளம்பிட்டோம்.

எங்களுக்கு சவாலா இருந்தது, கூட்டம். சேப்பாக்கம் மைதானம் ரொம்ப பிஸியான இடம், போலீஸ் இருப்பாங்க. அங்க ஒரு முக்கியமான ஒயின் ஷாப் இருக்கு, அங்கிருந்து நிறைய பேர் குடிச்சுட்டு வருவாங்க. ஐ.பி.எல் நடக்கிற அன்னைக்கு அங்க ஒரு அறுபதாயிரம் பேர் வருவாங்க. இங்கே எப்படி ஷூட் பண்ணப் போறோம்னு கேள்வி வந்துச்சு

முந்தின நாளே ஆர்ட்டிஸ்டுகளை கூப்பிட்டுப் போய் எந்தெந்த இடத்துல என்னென்ன ஷூட் பண்ணப்போறோம்னு விளக்கி அந்த இடத்தைப் பழக்கப்படுத்திட்டோம். யார் என்ன டிஸ்டர்ப் பண்ணினாலும் நீங்க உங்க ரோலைப் பண்ணிடனும் சொல்லியிருந்தோம். நானும் கேமராமேனும், எங்கெங்க ப்ரேமை வைக்கலாம், எப்படி ஷூட் பண்ணலாம்னு ப்ளான் பண்ணிக்கிட்டோம்.

கேமராவைப் பார்த்ததும் முகத்தைக் காண்பிக்கணும், பேசனும்னு நிறைய பேர் வருவாங்க. போலீஸுக்கு நாங்க படம் எடுக்கிறது தெரியக்கூடாதுன்னு நினைச்சோம். படம் எடுத்ததை போலீஸ் கண்டுபிடிச்சாலும், யாரையும் நாங்க டிஸ்டர்ப் பண்ணததால விட்டுட்டாங்க. கேமராவைப் பார்த்ததும் குடிச்சிருந்த சில பேர் வந்து டோனியைப் பத்தி, கபில்தேவைப் பத்தி பேசனும்னு சொன்னாங்க. அதையெல்லாம் தாண்டி தான் படப்பிடிப்பை நடத்தினோம். அந்த ரிஸ்குக்கு படம் வெளியானதும் பாராட்டு கிடைச்சிருக்கு.

படத்தலைப்பு இன்னும் கேட்சிங்கா இருக்கலாம்னு சிலர் சொன்னாங்க. ஆனா இந்தக் கதைக்கு இந்தத் தலைப்பு பொருத்தமானதுங்கிறத னாலதான் வெச்சோம். இப்ப ‘பிளாக்ஃபாரஸ்ட்’னா கிரிக்கெட் டிக்கெட் கறுப்புச் சந்தையைப் பற்றி பேசுற படம்னு நிறைய பேர் மனசுல பதிவாயிடுச்சு. அதுவே சக்சஸ்தான். ●

**–இயக்குநர் ராம்பிரசாந்த் ஜி**

சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாடிய வர்கள் போய் சேர்ந்துகொண்டு ஆடி விட்டு, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மீதான நடவடிக்கை முடிவுக்கு வந்ததும் பழைய அணிக்கே திரும்பியது மட்டுமே நடந்தது.

**சரி, இதெல்லாம் எதற்கு என்கிறீர்களா? இந்த ஐ.பி.எல். போட்டியால் என்ன நன்மை நடந்தது?**

அணிகளில் இடம்பிடித்த வீரர்கள், அணிக்குச் சொந்தக்காரர்கள் கோடீஸ்வரரானார்கள். இந்திய கிரிக்கெட் வாரியம் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்தது. 2024-ல் மட்டும் ஐ.பி.எல். போட்டிகள் மூலம் மட்டும் 5,761 கோடி வருமானம் ஈட்டப்பட்டது. ஆனால், பி.சி.சி.ஐ. ஒரு லாபநோக்கமற்ற அமைப்பு எனக் கூறி ஐ.பி.எல். போட்டிகளுக்கு இதுவரை வருமான வரியே கட்டவில்லை.

மாறாக, ஐ.பி.எல். போட்டியைப் பார்வையிடும் ரசிகர்களுக்கு டிக்கெட் ரூ 800 முதல் 50,000 வரை விற்கப்படுகிறது. இதற்கு ஜி.எஸ்.டி. வேறு கட்ட வேண்டும். டிக்கெட் கிடைக்காதவர்கள் கள்ளச் சந்தையில் டிக்கெட்டை வாங்கிப் பார்க்கவேண்டும். அந்தக் கள்ளச் சந்தை டிக்கெட் அதன் அசல் விலையிலிருந்து ஐந்து முதல் பத்து மடங்கு விலைபோகும்.

'பிளாக்ஃபாரஸ்ட்' குறும்படம் சென்று தொடும் இடம் அந்தக் கள்ளச்சந்தை டிக்கெட்டும் ரசிகர்களின் பரிதாப நிலையும்தான். சென்னையை ஒரு கான்கிரீட் காடாக வர்ணிக்கும் இயக்குநர், அதில் வேட்டையாடப்படும் ரசிகர்களின் பாடுகளை நம் கண்முன் உயிர்ப்புடன் கொண்டுவருகிறார்.

படத்தை நம்பகமாக காட்சிப்படுத்த, சென்னையில் ஐ.பி.எல். போட்டிகள் நிகழும்போது, சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தின் சுற்றுப்பகுதிகளையும் உட்பகுதிகளையும் அதன் ரசிகர்கள் திரளோடும், மக்களின் பாதுகாப்புக்காக நிற்கும் காவல்துறையினரோடும் படம்பிடித்து சேமித்துக்கொண்டு, அதே பகுதியில் ஏழெட்டு கதாபாத்திரங்களை மட்டும் வைத்துக்கொண்டு கள்ளச்சந்தைக் குழுவினரின் செயல்பாடுகளைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்.

தி லென்ஸ், தி போல்ட், தி வுல்ஃப் என ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் பெயர் சூட்டுவதாகட்டும், அவர்கள் பலியாடுகளை அணுகி வேட்டையாடி வசூல் செய்வதிலாகாட்டும் வெகுநேர்த்தியாக திரைக்கதை எழுதி, அதை சரியாக இயக்கவும் செய்திருக்கிறார்.

வெறுமனே டிக்கெட்டுகளை வாங்கி ப்ளாக்கில் விற்பது மட்டுமில்லாமல், அசல் டிக்கெட்டுகளைப் போலவே போலி டிக்கெட்டுகளையும் தயார்செய்து விற்று ரசிகர்களின் கழுத்தறுக்கும் நுட்பத்தையும் தொட்டுச்சென்றிருக்கிறது குறும்படம். ஏமாறுவதற்கான கும்பல் இருக்கும்வரை இங்கு ஏமாற்றவும் ஆட்களிருக்கும் எனச் சொல்லும் இயக்குநர், அந்த ஏமாற்றுக்காரர்கள் கள்ளச்சந்தையில் டிக்கெட் விற்பவர்கள் மட்டுமில்லை ஐ.பி.எல். ஆட்டத்தைத் தொடங்கி நடத்துபவர்களும்தான் என்கிறார்.

குறும்படத்தின் தொடக்கத்திலேயே இந்த ஆட்டத்தை சர்க்கஸ் என வர்ணித்திருக்கிறார் இயக்குநர். 'இல்லை, நான் ஸ்டேடியம் பக்கமே வருவதில்லை. கள்ளச்சந்தையில் டிக்கெட் வாங்குவதில்லை. என் பர்ஸ் பத்திரமாகத்தான் இருக்கிறது' என சிலர் சொல்லலாம். ஆனால், வருடம் தோறும் டி-20 பார்க்கும் பழக்கம் மாறாதவர் எனில், ஐ.பி.எல். அடிக்சனுக்கு ஆளானவகையில் இந்த கான்கிரீட் காட்டில் நீங்களும் வேட்டையாடப்படும் ஒரு பலி விலங்குதான்.

டி-20 விளையாட்டில் பிளாக் டிக்கெட், போலி டிக்கெட்டுக்கான கள்ளச்சந்தை குறித்த கண் திறப்புக் குறும்படமாக தன் குறிக்கோளில் வென்றிருக்கிறது பிளாக்ஃபாரஸ்ட். ●

# புரியாத கவிதை

● செ.நாகநந்தினி

புரியாத கவிதை
புரியாதிருக்கிறது
கவிதையின் உள் அர்த்தம்
றெக்கையின் நிறத்தைச்
சொல்லாமல் மறைத்திருக்கும்
வளரும் பட்டுப் பூச்சியின் லார்வாக்குள்
பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது
முற்றுப்புள்ளியற்ற சில வரிகள்
கிருஷ்ணன் திரௌபதிக்குத் தந்த
சேலையென
நீள்கின்றன
பொருள் விளங்காமல்!
எளிதில் புரிந்த சில உவமைகளை
ரசிக்கையில்
இதயத் துடிப்பு
உவம உருபை உச்சரித்து ஒலிக்கிறது
அர்த்தம் தெரியாத படிமங்களின்
உள்ளுறை உவமம்
காரணம் தெரியாமல் உண்டாகும்
பதின்பருவக் காதலின் அழகியலைத்
துய்த்திருக்கின்றன

முடிவிருந்தாலும்
புரியாத கவிதையின் சுவை
புரியாதிருக்கும் வரை மட்டுமே
தீராதிருக்கிறது!

●

# சிந்தனைக்கு செந்தமிழ் விருந்து வைக்கும் 49-வது சென்னை புத்தகக் கண்காட்சி!

2021-ஆம் ஆண்டில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி அமைந்தபின்னர், தமிழக எழுத்தாளர்களைக் கொண்டாடும்விதமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, எண்ணற்ற விருதுகள் வழங்கப்பட்டு கவுரவிக்கப்படுகிறார்கள். தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் (பபாசி) சார்பாக, 49-வது சென்னை புத்தகக் கண்காட்சி, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில், 2026, ஜனவரி 8 முதல் ஜனவரி 21ஆம் தேதி வரை நடைபெறுகிறது. ஒருபுறம் காகிதத்தின் விலை, ப்ரிண்டிங் பணிகளுக்கான செலவுகள் அதிகரித்த படி இருந்தபோதிலும், பதிப்பகங்களின் எண்ணிக்கை குறையாமல், அதிகரித்தபடியே இருப்பது ஆச்சர்யமான உண்மை.

கடந்த சில ஆண்டுகளாக, மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்படுவதன் விளைவாக, நூல்களை வாசிப்பவர்களின் எண்ணிக்கையும், படைப்பாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதால், நிறைய புதிய பதிப்பகங்கள் ஒவ்வொரு ஆண்டும் உருவெடுத்தபடியே இருக்கின்றன. அப்படி வரக்கூடிய பதிப்பகங்களின் கனவு புத்தகத் திருவிழாவாக சென்னை புத்தகக் கண்காட்சி இருக்கிறது. சென்னை புத்தகக் கண்காட்சியானது ஆயிரக்கணக்கான அரங்குகளோடு மிகவும் பிரம்மாண்டமான அளவில் நடைபெறுகிறது. தினமும் காலை 11 மணி முதல் இரவு 8.30 மணி வரை புத்தகக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப் படுவார்கள். இந்த புத்தகக் கண்காட்சியில், சிறுவர்களுக்கான நூல்களை விற்பனை செய்வதற் கென்று பிரத்யேகமான அரங்கும் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை புத்தகக் கண்காட்சியில் வழங்கப்படும் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பொற்கிழி விருது 2026-க்காக, கவிதை பிரிவில் கவிஞர் சுகுமாரன், சிறுகதைப் பிரிவில் ஆதவன் தீட்சண்யா, நாவல் பிரிவில் இரா.முருகன், உரைநடைப் பிரிவில் பேராசிரியர் பாரதிபுத்திரன் (சா.பாலுசாமி), நாடகப் பிரிவில் கருணா பிரசாத், மொழிபெயர்ப்புப் பிரிவில் வ.கீதா ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

சென்னை புத்தகக் கண்காட்சி நிறைவுபெற்றதுமே, ஜனவரி 16, 17, 18, 19 தேதிகளில், பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது. இந்த கண்காட்சியில், உலக நாடுகள் பலவற்றிலுள்ள மிக முக்கியமான பதிப்பகங்கள் ஆர்வத்தோடு பங்கெடுக்கவுள்ளன. இக்கண்காட்சியில், பன்னாட்டு கலாசாரங்களை, வரலாறுகளை, ரசனைகளைத் தாங்கிய ஆயிரக்கணக்கான நூல்கள் பார்வைக் காக வைக்கப்படும்.

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!' என்று மகாகவி பாரதியார் பாடிய பாடலுக்கேற்ப. பல மொழிகளில் எழுதப்பட்ட நூல்களை நம் தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கான நல்வாய்ப்பாக இக்கண்காட்சி அமைந்துள்ளது. அதேபோல்,

**● தெ.சு.கவுதமன்**

புத்தகம் வாசிப்பவன், இறப்பதற்கு முன் ஆயிரம் வாழ்க்கையை வாழ்கிறான். ஆனால், வாசிக்காதவன் ஒரேயொரு வாழ்க்கையை மட்டுமே வாழ்கிறான்' என்கிறார் அமெரிக்க எழுத்தாளர் ஜார்ஜ் ஆர்.ஆர்.மார்ட்டின். 'ஒரு நல்ல புத்தகம், ஒரு புதிய உலகத்தை உங்களுக்குக் காட்டுகிறது' என்கிறார் பிரிட்டிஷ் எழுத்தாளர் ரோல்ட் டால். இந்த உலகமே ஆன்லைன் பயன்பாட்டுக்கு பழக்கப் பட்டுப் போனாலும், புத்தகங்களை வாங்கி, அவற்றை புரட்டிப்பார்த்து வாசிக்கும்போது கிடைக்கும் உணர்வே தனி என்பதைப் புரிந்து கொண்டவர்கள், புத்தக வேட்கை குறையாதிருக்கிறார்கள். அப்படிப்பட்ட புத்தக விரும்பிகளுக்கான திருவிழாவே சென்னை புத்தகத் திருவிழா!

தமிழ் மொழியில் எழுதப்பட்ட நூல்களை, மற்ற நாடுகளைச் சேர்ந்த பதிப்பகங்கள் விரும்பினால், நம் எழுத்தாளர்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது, தமிழ் மொழியின் இலக்கியச்செழுமையை, உலகெங்கும் கொண்டுசெல்வதற்கும், மற்ற நாடுகளைச் சேர்ந்த இலக்கியங்களை தமிழுக்கு கொண்டுவருவதற்கான திறப்பாகவும் அமைந்துள்ளது. இந்த பன்னாட்டு புத்தகக் கண்காட்சியின் மூலமாக, கடந்த ஆண்டுகளில் எண்ணற்ற எழுத்தாளர்கள், பதிப்பகங்கள் பலனடைந்துள்ளனர்.

49-வது சென்னை புத்தகக் கண்காட்சியில், நக்கீரன் பதிப்பகம், பாரதி புத்தகாலயம், சாகித்ய அகாதெமி, தமிழ் இந்து, காலச்சுவடு, பெரியார் சுயமரியாதை புத்தக நிறுவனம், உயிர்மை பதிப்பகம், டிஸ்கவரி புக் பேலஸ், வேரல் பதிப்பகம் உள்ளிட்ட பல்வேறு பதிப்பகங்கள் பங்கேற்கவுள்ளன. நமது நக்கீரன் பதிப்பகத்தின் சார்பாக, தோழர் நல்லகண்ணுவின் போராட்ட வாழ்க்கை வரலாற்றை, பல்வேறு தரவுகளுடனும், அவரோடு பயணித்தவர்களின் அனுபவப் பகிர்வுகளோடும் நக்கீரனில் தோழர் சி.மகேந்திரன் தொடராக எழுதி, வாசகர்களின் வரவேற்பைப் பெற்ற 'கைதி எண் 9658', நூல் வடிவில் புத்தகக் கண்காட்சியில் நக்கீரன் அரங்கில் விற்பனைக்கு வருகிறது. பத்திரிகைப் போராளி நக்கீரன் ஆசிரியரின் துணிச்சலான பத்திரிகை பயணம் தொடர்பான 'போர்க்களம்' தொடரின் 8 பாகங்கள் அடங்கிய முழுத்தொகுப்பு நக்கீரன் அரங்கில் இடம்பெறும்.

தமிழ்நாட்டின், தமிழர்களின் வீரம்தோய்ந்த கலாச்சாரங்களில் ஒன்றான சல்லிக்கட்டு விளையாட்டை மையப்படுத்தி, சல்லிக்கட்டு மாடுகளின் வளர்ப்பு, குணாதிசயம், சல்லிக்கட்டு விளையாட்டின் வரலாறு என அனைத்தையும் உள்ளடக்கி, நக்கீரனில் இயக்குநர் ல.ராஜ்குமாரால் 'திமில்' என்ற பெயரில் எழுதப்பட்ட தொடர், நூல் வடிவில் வெளியாகிறது. மேலும், முன்னாள்





















முதல்வர் கலைஞரின் வரலாற்றை பேசக்கூடிய நெஞ்சுக்கு நீதி நூலின் 6 பாகங்கள், கலைஞரின் குறளோவியம், ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், அறிஞர் அண்ணா எழுதிய வேலைக்காரி, ஆரிய மாயை, நீதிதேவன் மயக்கம், ரோம் எரிகிறது, ரோமாபுரி ராணிகள் ஆகிய 5 நூல்களையும் புதிய வடிவில் ஒரே புத்தகமாகத் தொகுத்து நக்கீரன் வெளியிட்டுள்ளது. மேலும் நக்கீரனில் வெளியான திரைப்பட இயக்குநர் லியாகத் அலிகானின் 'கருப்பு + சிவப்பு = புரட்சி!' நூலும், சித்தர்கள் பற்றிய பரபரப்பான செய்திகள் அடங்கிய தொகுப்புகளும் விற்பனைக்கு வந்துள்ளன.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'இயர் புக் 2026' சிறப்பான முறையில் தயாராகியுள்ளது. மேலும், சின்னக் குத்தூசியாரின் படைப்புகள், பேரறிஞர் அண்ணாவின் படைப்புகள், பெண்ணியம் போற்றிய பெரியார், தியாகராஜ பாகவதரின் வாழ்க்கை வரலாறு, உள்ளிட்ட பல்வேறு நூல்கள் விற்பனைக்கு வந்துள்ளன. பொன்னியின் செல்வன் நாவல், கி.வா.ஜகந்நாதன் எழுதிய பாரிவேள், நினைவோ ஒரு பறவை, வீரப்பனின் வாழ்க்கை வரலாறு குறித்த நூல்கள் உள்ளிட்ட பலவும் நக்கீரன் பதிப்பகத்தில் விற்பனைக்கு வருகின்றன.

இயக்குநர் வி.சி.குகநாதன், தனது திரையுலக அனுபவங்களை நக்கீரன் வாசகர்களோடு பகிர்ந்துகொண்ட 'சினிமா கொட்டகை' தொடர், நூல் வடிவம் பெற்றுள்ளது. எழுத்தாளர் ஆதனூர் சோழனின் படைப்புகளான, நெருப்பாற்றில் நீந்திய கலைஞர் கடிதங்கள், இந்திய நாத்திகம், மறவன் மடல்கள், வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பராசக்தி மனோகரா, அம்பேத்கர் வாழ்வும் பணியும் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. நாஞ்சில் கி.வேலப்பன் எழுதியுள்ள பாரியின் வழித்தோன்றல் கலைஞர் என்ற நூலும், நக்கீரனின் முதன்மை துணை ஆசிரியர் சி.என்.ராமகிருஷ்ணன் எழுதியுள்ள 'சிறை ஊழல்கள்' என்ற நூலும் நக்கீரன் வெளியீடாக வந்துள்ளன.

வார்த்தை சித்தர் வலம்புரிஜானின் படைப்புகளான மீண்டும் மகாத்மா, வருடம் முழுவதும் வசந்தம், அந்தக இரவில் சந்தன மின்னல், அம்மா அழைப்பு, திருக்குறளைத் திறப்போம், வரலாற்றில் கலைஞர், எல்லா ராத்திரிகளும் விடிகின்றன, சொர்க்கத்தில் ஒருநாள், பாரதியார், சவேரியார் ஆகிய நூல்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

அனைவரின் கைவிரல் நுனிகளும் செல்பேசியை வருடிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்திலும், புத்தகங்களின் பக்கங்களை புரட்டுவதற்கும் விரல்கள் ஆர்வத்தோடு இருப்பது பெருமைப்படவைக்கிறது! ●

# உன் வெப்பம்

மெய்ம்மைக்கும் மாயைக்கும்
நடுவே நிற்கிறாய்
வழிவிடு
நான் என்னை அடைய
உன்னை அடைய வேண்டும் .

●

நான்
எத்தகைய அடிமை பார்த்தாயா?
காதல் சந்தையில்
என்னை
விற்பதும் நீதான்
வாங்குவதும் நீதான்

●

காதல்

# என் காய்ச்சல்!

● தி.கலையரசி

பாவத்திற்கும் உரைகல்
புண்ணியத்திற்கும் உரைகல்
இரண்டையும் உய்த்துணர
நீதான் வேண்டும்

●

காதலிலிருந்து வெளியேற
விளிம்பைத் தேடுகிறேன்
ஆனால்
நுழைந்த பிறகுதான் தெரிகிறது
காதலுக்கு
புறமும் அகம் தானென்று

●

திறக்கப்படாத பாதை நீ
முடிவுறாத பயணம் நான்

●

காதல் ஒரு நோய்மை
அதன் காரணமும் களிம்பும்
கண்களில்தான் இருக்கிறது

●

காதலை
தராசில் நிறுத்த முடிவதில்லை
அரூபத்தின் கனம்
இதயத்தின் பக்கமே சாய்கிறது

●

உன்னை எழுதும் பேனா
ஓர் அதிசய வாள்
எழுதுபவளையே கொல்கிறது

●

நான் வில்
நீ அம்பு
பிரிவே காதலின்
இலக்காகிப்போனது

●

காதல் ஓர் ஆபத்தான
மலைப்பாதை
பொதி நிறைந்த வண்டியில்
ஆன்மா பயணிக்கிறது

●

கடல் நீ
நான் அலைபாய்ந்தால்
கரை சேர்க்கிறாய்
அமைதியானால்
விழுங்கிக் கொள்கிறாய்

●

உன்னை
நெருங்குவதுமில்லை
விலகுவதுமில்லை
மையப்புள்ளிக்குள் ஒதுங்கிய
வட்டம் நான்

●

ஏன் இந்த முரண்?
சுவர்களைத் தகர்த்தால்தான்
காதலுக்கு வீடுபேறு

●

இமைமூடி காக்கும்
கனவு நீ
அதனாலேயே காதல் என்னை
விழிப்புற்றவளாக்கி விட்டது

●

காதல் ஒரு நோய்முரண்
உன் வெப்பத்தில்
என் காய்ச்சல் தணிகிறது

●

உனது தரிசனம் எளிதானதல்ல
நமக்கிடையேயான திரை
நுண்மையானது
ஆனால்
இதயத்தின் கனம் வாய்ந்தது

●

தண்டனையையே தீர்ப்பாக்கு
காதலுக்கான
வாதியும் நான்தான்
பிரதிவாதியும் நான்தான்.

●

நான் கடல்
என்னில் எழுந்து
என்னையே மூழ்கடிக்கிற
அலை நீ.

●

எங்கே தொடங்கி
எங்கே முடிப்பது?
பாதைகளற்ற பாதை
உன்னுடையது.

●

காதல்
விசித்திரமான படிக்கட்டு
அதில்
காலிடறி காலிடறித்தான்
உன்னில் உயர்கிறேன்.

●

இருத்தலின் சிகரம் நீ
உன்னை அடைய
நான்
மாயையின் கயிறு பற்றுகிறேன்.

●

கோட்பாட்டுக்குள்
அடங்கவியலாத
நீதான்
உனது கோட்டுக்குள்
என்னை நிறுத்தியிருக்கிறாய்

●

நான் வெறும் காற்று
தென்றலாவதையும்
புயலாவதையும்
உன் சுவாசம்
வழி நடத்துகிறது

●

காதல் ஒரு
கல்வாரி மலை
ஏறுபவர்கள் அனைவரும்
சிலுவை சுமக்கிறார்கள்

●

# மகளதிகாரம்

## மகள் குறித்த கவிதைகள்

● ஆண்டன்பெனி

ஒரு தந்தையின் பாசம் என்பது பெற்ற பிள்ளைகள் மீது பொதுவானதெனினும் பெண் குழந்தைகள் மீது தந்தைக்கு மகன்களைவிட கூடுதலாகவே பிரியம் இருக்கும். பெண்பிள்ளைகளுக்கும் அம்மாவைவிட அப்பாவிடம் அதிகமாக செல்லம் கொஞ்சுவார்கள். பெண் என்றால் சமூகத்தில் வேண்டாவெறுப்பாக பார்ப்பார்கள். பெண் குழந்தைகள் பிறந்தால் பெற்றோர்களும் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருப்பதாகக் கூறுவர். இந்நிலையில் மகள் தொடர்பான கவிதைகள் எழுதி தொகுத்து 'மகளதிகாரம்' என்னும் தொகுப்பைக் கொடுத்துள்ளார் கவிஞர் ஆண்டன்பெனி.

**பிறந்ததும்**
**வெள்ளைத் துணியில்**
**ஏந்திக் கொடுத்தார்கள்**
**என் இளஞ்சிவப்புத் தேவதையை**
**அதன் மூடிய இமைகளுக்குள்**
**இரு விழிகள்**
**அசைவது போலத்தான் இருந்தது**
**அதுவரையில் என் இதயம்**

என்பது தொகுப்பின் முதல் கவிதை. மகள் பிறப்பிலிருந்தே தொடங்கியுள்ளார். முதன்முதலில் பிறந்த பிஞ்சு மகளை கையிலேந்தும் கணம் இருக்கிறதே.. அது பேரின்பம். சொற்களால் சொல்ல முடியாது. கவிதையாகவும் எழுத இயலாது. அனுபவித்த அப்பன்களுக்கே தெரியும். ஆனால் கவிஞர் இருவிழிகளின் அசைவை இதய அசைவுடன் ஒப்பிட்டுள்ளார். இரு விழிகளில் இதயத்தைக் காண்கிறார். மகளின் சிறுவிரல் பட்டால் இதயத்துடிப்புகள் சீராகின்றன என்றொரு கவிதையில் எழுதியுள்ளார்.

அப்பன்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் போதாது. அப்பன்களுக்கு மட்டுமில்லை எல்லோருக்கும் பொதுவான குணமிது. ஆனால் மகள்கள் பொன் வைக்குமிடத்தில் ஒரு பூவை வைத்தாலும் அப்பன்கள் அளவில்லா மகிழ்ச்சி அடைவார்கள். இதையே கவிஞர்

**அள்ளிக் கொடுத்தாலும்**
**ஆறாத மனம்**
**மகள் கிள்ளிக் கொடுப்பதில்**
**அடங்கி விடுகிறது**

என்கிறார். இலை நிறைய பரிமாறி சாப்பிடுவதை விட மகள் கையால் ஒரு பிடி சாதம் வாங்கி சாப்பிட்டால் மனமும் திருப்தியுறும். வயிறும் நிறையும்.

மலர்களைப்போல் தங்கை உறங்குகின்றாள் என கவிஞர் கண்ணதாசன் பாடினார். மகள்கள் உறங்குகையிலும் மலர்களைப் போலவே இருக்கும். மலர்களை பார்ப்பது மனதுக்கு ஆறுதல். ஓர் அமைதியையும் கொடுக்கும். கவிஞர்,

**ஒவ்வொரு**
**இரவும்**
**தூங்கும் மகளின்**
**முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பேன்**
**தியானம் என்று**
**தனியாக எதுவும்**
**செய்வதில்லை**

என எழுதியுள்ளார். தியானம் என்பது மன அமைதிக்காகவும் உடல் ஆரோக்கியத்திற்காகவும் செய்வது. உறங்கும் மகளைப் பார்ப்பதே தியானத்திற்கு சமம் என்கிறார்.

**மகளின்**
**பாதங்களால்**
**நிறைகிறது**
**என் வீடு**

என்றொரு கவிதை வாசிக்கையில் மனதும் நிறைகிறது. மகள் நடக்கத் தொடங்கினால் வீடு போதாது. வீடெங்கும் கால்கள் பதிந்துகொண்டே இருக்கும். பின்னாலேயே போக வேண்டும். ஓடி ஓடி பிடிக்கவேண்டும். கவிஞர் நான்கே வார்த்தைகளில் படம் பிடித்துள்ளார்.

• பொன். குமார்

*அப்பன்கள் சும்மா அழுதாலும் மகள்கள் கை சும்மா இராது. வராத கண்ணீரையும் விரல்களால் துடைக்க ஆரம்பித்து விடும். உண்மையிலேயே அழுதால்..?*

**நான் அழும்போது**
**மகள்**
**தன் பிஞ்சுக் கைகளால்**
**என் கண்ணீர்க் குளத்தின்**
**மொத்தத் தண்ணீரையும்**
**வாரி இறைத்துவிடுகிறாள்**

*மகள் கண்ணீரைத் துடைத்து விடுவதாக மகிழ்கிறார். மகள்கள் துடைப்பதற்காகவே அழவேண்டும் போலிருக்கிறது. கவிஞரின் கவிதையும் அழத் தூண்டுகிறது.*

**அழும் போதெல்லாம்**
**மகள்**
**அப்பாவைத் தேடுவதன்**
**காரணத்தில்**
**முழுமையாக வாழ்ந்து விட்டவன் என்றிருந்தது**

*என்னும் கவிதை மகள் அழுவதைப் பற்றியது. மகள் அழுதால் அப்பனைத் தேடுவது இயல்பு. கவிஞரோ வாழ்க்கையே முழுமையாக வாழ்ந்த உணர்வு ஏற்படுகிறது என்கிறார்.*

**கோபித்துக்கொள்ளும்**
**மகளிடம்**
**மண்டியிட்டு மன்னிப்புக் கேட்பேன்**
**தெய்வங்கள் போலில்லை**
**உடனே மன்னித்துவிடுகிறாள்**

*என்பது நல்ல அனுபவம். தெய்வங்கள் போலில்லை மகள் என்கிறார். மகளை விடவா மற்ற தெய்வங்கள். மகளே தெய்வம் அல்லவா?*

**வீட்டின் பூசை அறையில்**
**கை கூப்பி நிற்கிறாள்**
**இருக்கக்கூடும்**
**கடவுளுக்கும் சில வேண்டுதல்கள்**

*என்னும் கவிதையில் மகளைத் தெய்வமாகக் காட்டுகிறார்.*

**மகள் கோபத்திலிருக்கும் போது**
**அருகில் அமர்ந்துவிடுவேன்**
**சமாதானத்திற்குத்**
**தலை நிமிரும்போது**
**ஆளில்லை என்றால்**
**பாவம்**

*என மற்றொரு கவிதையில் மகள் கோபித்துக் கொண்டால் சமாதானப் படுத்த தயாராக இருப்பதாக தெரிவித்தார். அப்பா மகள் கோபமெல்லாம் அரை நாழியும் நீடிக்காது. எல்லாமே செல்லக் கோபங்கள். பொய்க் கோபங்கள்.*

**ஓடி வந்து இறுகக் கட்டிக்கொள்வாள் மகள்**
**இறக்கிவிடும் போதெல்லாம்**
**ஒரு தகப்பன்**
**மகளைப்**

பிரசவிப்பதுபோல்
உணர்கிறேன்

*என்பது நெகிழ்ச்சியானது. உணர்வுபூர்வமானது. அப்பன் நெஞ்சில் சுமப்பது தாய் கரு வறையில் சுமப்பதற்கு சமம் என்கிறார். ஒரு கவிஞராகவும் ஒரு தந்தையாகவும் உயர்ந்து நிற்கிறார்.*

மகள் பிறந்ததும்
சுண்டுவிரல் பிடித்துப் பார்த்தேன்
அதன் நினைவாக
என்
சுண்டுவிரல் பிடித்தே
எங்கும் வருகிறாள்

*என்று ஒரு கவிதையில் எழுதியவர் இன்னொரு கவிதையில்*

என் கைகளில்
மோதிர விரலுக்கு அடுத்து இருப்பது
மகள் விரல்

*என்றெழுதியுள்ளார். முன்னதின் தொடர்ச்சியாகவே பின்னது உள்ளது. செல்ல மகள் பிடித்ததாலே சுண்டு விரல் மகள் விரல் என சுட்டிக்காட்டியுள்ளார்.*

அப்பாவை எவ்ளோ பிடிக்கும் என்றால்
இரு கைகளையும் அகல விரித்து
மூச்சுமுட்டும் வரை குரல் உயர்த்தி
'அவ்ளோ' பிடிக்கும் என்பாள்
அவ்வளவுதானே உலகமும்

*என்று அப்பாவை மகளுக்கு எவ்வளவு பிடிக்கும் என்பதை மகள் கைகளை விரித்துக் காட்டுவதாக காட்டியுள்ளார். மகளின் கை சின்னதாக இருந்தாலும் அது உலகத்தை விட பெரியது. அந்தளவிற்கு அன்பும் விரிந்தது.*

*குழந்தைகள் உலகம் என்பது வேறு. குழந்தைகள் உலகத்தில் எளிதாக பெரியவர்கள் பிரவேசிக்க முடியாது. அவர்கள் உலகம் தெரிய வேண்டும். குறிப்பாக அவர்கள் மொழி தெரிய வேண்டும்.*

மகள் மொழி புரியும்
என்பதாலேயே
என்னால் வாழ்ந்திட முடிகிறது
மகள் உலகத்தில்

*என்கிறார். மகள் மொழி தெரிந்தாலே அப்பாக்களால் மகளுடன் உரையாட முடியும். உறவாட முடியும். கவிஞருக்கு மகள் மொழியும் தெரிந்திருக்கிறது. கவிமொழியும் கைகொடுத்திருக்கிறது.*

மகள் மொழி என்பது
மனதுக்கானது
வெறும் வார்த்தைகளால்
நிரப்பிவிட வேண்டாம்

*எனவும் ஒரு கவிதையில் எழுதியுள்ளார். மகள் மொழியுடன் மனத்தில் உறவாடுகிறார் என தெரிகிறது.*

போகும் தூரமே
வரும் என்றாலும்
வரும் போதிருப்பதில்லை
போகும்போதான மனநிலை

*என்பது பொன். குமார் பொதுவாக எழுதியது. இதே மனநிலையில் கவிஞர் மகளை வைத்து எழுதிய கவிதை*

மகளை
விட்டுவரும் தூரம்
அழைத்து வருவதில்
இல்லை

*மகளை விட்டுவரும் போது ஒருமனநிலை இருக்கும். அழைத்து வரும்போது ஒருமனநிலை இருக்கும். விட்டு வரும் போது ஒரு சோகம் இருக்கும். அழைத்து வரும் போது ஆனந்தம் இருக்கும். ஓர் அனுபவ வெளிப்பாடாகவே கவிதை வெளிப்பட்டுள்ளது. வாசிப்பவருக்குள்ளும் ஓர் அனுபவத்தை ஏற்படுகிறது.*

*மகளுடன் தொடரியில் பயணிப்பதாக ஒரு சில கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. அவையில் ஒன்று*

தொடரியின் சாளரக் கம்பிகளில்
தொக்கி நிற்கும்
சாரல் துளிகளை
மகள் சேகரிக்கத் துவங்கியதும்
விரும்பிப் பெய்கிறது
பெருமழை

*மகள் சாரல் துளிகளை சேகரிக்க துவங்கியதைக் கண்டு மனமிரங்கிய வானம் பெருமழையைப் பெய்தது என்கிறார். மகள்களுக்காக அப்பா மட்டுமல்ல வானமும் மனமிரங்கும். தரையிறங்கும்.*

குளக்கரையிலிருந்து தவளைக்கல் விடுகிறவள்
தூரப் போகும் கல்லெல்லாம்
அப்பாவைப் போய் சேர்ந்திருக்கும்
என்கிறாளாம்

*என்றொரு கவிதையில் குளத்தில் தவளைக்கல் விடும் விளையாட்டை பதிவு செய்துள்ளார். இன்றைய தலைமுறையினருக்கு தெரிவித்துள்ளார். இதிலும் மகள் விடும் கல் அப்பாவைச் சேர்ந்திருக்கும் என மகள் நம்புவதாக எழுதியுள்ளார். அப்பா மீது மகள் கொண்டிருக்கும் நம்பிக்கையாக சில கவிதைகள் உள்ளன.*

முயல் குட்டிபோல்
என் மடியில் சுருண்டு கொள்கிறாள்
இது வரம் என்பதால்
என் நாட்கள்
தவமாகிறது

*இக்கவிதையில் மகள் மடியில் படுத்திருப்பது வரம்*

என்கிறார். மகள் பிறந்ததே மகாவரம்தான். மகளைப் பெற்றவர்களுக்கே இந்த வரம் கிடைக்கும். மகளைப் பெற்றவர்களே வரம் பெற்றவர்கள்.

**ஊருக்குச் சென்று வந்த**
**மகள்**
**கதை சொல்லத் தொடங்குகிறாள்**
**கைகள் அசைக்க இருள் விலகுகிறது**
**இமைகள் படபடக்க காற்று வீசுகிறது**
**சிரிக்கும் போது**
**வீடே வெளிச்சக் காடாகிறது**

என்னும் கவிதை காட்சியாக கண்முன் விரிகிறது. மகள் கதை சொல்லும் காட்சியைக் கவிதையாக்கிக் காட்டியுள்ளார். மகள்கள் வீட்டின் விளக்குகள். மகள் இருந்தாலே வீடு வெளிச்சமாகத்தான் இருக்கும்.

மகளுக்கு பெயர் சூட்டி, சூட்டிய பெயரில் அழைக்காமல் செல்லப்பெயரில் அழைத்து அப்பாக்கள் மகிழ்வர். ஆனால் மகள் அப்பாவை அப்பாவென அழைக்காமல் பெயரைச் சொல்லி அழைத்துவிட்டாலோ அப்பாக்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இராது. கவிஞர்

**மகள்**
**என்னைப்**
**பெயர் சொல்லி அழைப்பதை விரும்புகிறேன்**
**உச்சரிப்பின்**
**மெல்லிய அதிர்வுகளில்**
**என் ஆயுள் கூடுகிறது**

என்கிறார். அப்பா பெயர் சொல்லி மகள் அழைக்கும் போது ஆனந்தமும் கூடும். ஆயுளும் கூடும். பேர் சொல்ல ஒரு பிள்ளை வேண்டும் என்பர். பெயர் சொல்லி அழைக்கவும் அவசியம் மகள்கள் வேண்டும்.

**மகள்**
**புத்தகத்தைப்**
**புரட்டிக்கொண்டிருப்பாள்**
**நான் அவளைப்**
**படித்துக் கொண்டிருப்பேன்**

என்னும் கவிதையை நாங்கள் படித்துக் கொண்டிருக்கிறோம். பெயரன் பிறந்தபோது பொன். குமார் எழுதியது

**நான் வாசிக்க கிடைத்த**
**நல்லதொரு புத்தகம்**

இக்கவிதையை நினைவூட்டியது கவிஞரின் கவிதை. பொதுவாக குழந்தைகள் படிக்கப்படவேண்டியவர்கள்தான் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. கவிதையும் வாசிக்கப்பட வேண்டியதே.

**மகள் எனக்குப்**
**பாடம் நடத்துகையில்**
**என் மீது அவள் செலுத்தும்**
**கண்டிப்பில் தெரிகிறது**
**பாடத்திட்டத்தின் வன்முறைகள்**

என்னும் கவிதை மகளைப்பற்றியதாக இருந்தாலும் பாடத்திட்டத்தின் மீதான விமர்சனமாக உள்ளது. மகளதிகாரம் மூலம் ஆசிரியருக்கு அதிகாரங்கள் கூடாது என்கிறார். கண்டிப்பை விட கனிவே ஆசிரியர்க்கு தேவை என்கிறார்.

**மகளின் விளையாட்டை**
**வேடிக்கை பார்த்த புத்தகங்கள்**
**அதன்பிறகு அவளைப்**
**புரிந்து கொள்கின்றன**

என்னும் கவிதை, புத்தகங்கள் மகளைப் புரிந்து கொள்கின்றன என்கிறார்.

நவீனத்தன்மையுடன் எழுதப்பட்ட கவிதை

**மகளையும் என்னையும்**
**பள்ளிக்கு அனுப்பிவிட்டு**
**நான் மட்டும்**
**தனியே இருப்பேன் வீட்டில்**

ஒரு வாசிப்பில் குழப்பி மறுவாசிப்பில் தெளிவு ஏற்படுத்தும். மகளைப் பிரிந்து தனியே இருக்க முடியாது என்கிறார். மகளுடனே தானும் துணையாக செல்வதாக தெரிவித்துள்ளார்.

**கண்ணாமூச்சி விளையாட்டில்**
**நான் அப்பா என்பதால்**
**தேடிக்கொண்டேயிருப்பேன்**
**அவள் மகள் என்பதால்**
**தானாகவே வந்து கண்படுவாள்**

என்னும் கவிதையில் கவிஞர் கண்ணாமூச்சி ஆடியுள்ளார். அப்பாக்கள் விளையாட்டுக் காட்டவே விரும்புவர். மகள்கள் அப்பாக்களை மகிழ்விக்கவே விரும்புவர். அப்பா மகள் விளையாட்டில் வெற்றி தோல்வியைவிட மகிழ்வே முக்கியம்.

பொதுவாக பிரசவம் பெண்ணுக்கு மறுபிறவி என்பர். பிரசவத்தில் பிறந்தன / பெண் குந்தைகள் இரண்டு / தாயும் சேயும் என்றொரு கவிதை வாசித்த நினைவு. கவிஞர்

**நீ மகளாகப் பிறந்து**
**அழுத சத்தத்தில்**
**நான்**
**தகப்பனாகப்**
**பிறந்தேன்**

என்கிறார். மகள் பிறந்தால் பெற்றவன் அப்பாவாகி விடுகிறான். இது இயல்பு. மகளோ மகனோ பிறக்காத வரை அப்பா என்னும் அந்தஸ்து கிடைக்காது. கவிஞர் இதையே மகள் பிறந்து அழுத சத்தத்தில் தகப்பனாக பிறந்தேன் என்கிறார்.

மகள் என்னும் ஒற்றைப் பொருண்மையிலே ஒரு முழுத் தொகுப்பையும் தருவது சாதாரணம் அல்ல. ஆயினும் சாத்தியப்படுத்தியுள்ளார் ஆண்டன் பெனி.

●

# இசைக்கு ஏது மதம்?

• கோவி.லெனின்

**“மதம் கடந்த இசை என்பது தமிழ் மண்ணின் பாரம்பரியம்.**

**காலையில் பெரிய கோவிலில் தேவாரம் ஓதுவார்கள். பள்ளிவாசலில் அல்லாஹு அக்பர் ஒலிக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்தில் பாடல்கள் இசைக்கும். தமிழ்நாட்டு மக்கள் எல்லாவற்றையும் ரசித்துக் கேட்டபடிதான் கடந்து செல்வார்கள்.**

என் சிறு வயதில், அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்காமலேயே தலைமாட்டில் உள்ள டிரான்சிஸ்டர் ரேடியோவை ‘ஆன்’ செய்வார் அப்பா. வானொலியில் ‘வந்தே மாதரம்’ பாடி முதல் நிகழ்ச்சி தொடங்கும்போது, பாடப் புத்தகத்துடன் அவருக்கு அருகே உட்கார்ந்திருப்பேன்.

காலை நேரத்தில் அப்போது 6.50 மணிக்கு செய்தி அறிக்கை ஒலிபரப்பாகும். அது நிறைவடையும் வரை அப்பாவின் தலைமாட்டிலேயே டிரான்சிஸ்டர் இருக்கும். செய்தி அறிக்கை கேட்டபிறகுதான் எழுந் திருப்பார். அப்புறம் எதற்கு அத்தனை சீக்கிரமாக ரேடியோவை ஆன் செய்தார்?

காலை 6 மணி வாக்கில் பக்தி மாலை என திருச்சி வானொலி நிலையத்தார் ஒலிபரப்புவார்கள். அதன் பிறகு உழவர்கள்-வேளாண் விரிவாக்கப் பணியாளர்களுக்கான ஆலோசனைகள் 10 நிமிடம். அதன்பிறகே செய்தி அறிக்கை.

மாலை நிகழ்ச்சி சைவ-வைணவப் பாடல்களுடன் தொடங்கும். அப்பாவுக்குப் பிடித்த சீர்காழி கோவிந்தராஜன் குரலில் முதல் பாட்டு ஒலித்த நாட்கள் நிறைய உண்டு. உளுந்தூர்பேட்டை சண்முகத்தின் ‘சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை இடை உடுத்தி-சிவகங்கை குளத்தருகே ஸ்ரீதுர்கை சிரித்திருப்பாள்..’ பாடலை தன் வெண்கலக் குரலால் சீர்காழி கொண்டு செல்லும் உயரத்தை அளவிடமுடியாது.

பக்தி மாலையில் வைணவப் பாடல்கள் நிறைய இருந்தாலும் எளிமையானதும், எல்லோருடைய காதுகளிலும் நிறைந்ததுமான கண்ணதாசனின் ‘கிருஷ்ண கானம்’ இசைத் தொகுப்பு தனித்துவமானது. அதிலிருந்து ஏதாவது ஒரு பாடல் அடிக்கடி வானொலி யில் ஒலிக்கும்.

எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில், ‘புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே...’ என்ற டி.எம்.எஸ். குரல்,

சீர்காழி கோவிந்தராஜன்



நாகூர் ஹனீஃபா

வானொலி-கோயில் கேட்காத இடமே இல்லை. அடுத்ததாக அந்த தொகுப்பிலிருந்து, 'குருவாயூருக்கு வாருங்கள்' என பி.சுசீலா அழைப்பார். எல்.ஆர். ஈஸ்வரி குழுவினர், 'கோபியரே. கோபியரே.. கொஞ்சி விளையாடுங்களேன்' எனக் கொஞ்சுவர்.

அடுத்ததாக ஒலிக்கும் எஸ்.பி.பி.யின், 'ஆயர்பாடி மாளிகையில்..' எல்லா தலைமுறைக்குமான எவர்க்ரீன் ஹிட். மீண்டும் பி.சுசீலா, 'கோகுலத்தில் ஒரு நாள் ராதை' எனப் பாடுவார். அவரைத் தொடர்ந்து எஸ்.ஜானகி, கோகுலத்து பசுக்களெல்லாம் கோபாலன் பெயரைக் கேட்டு 4 படி பால் கறந்து, அதில் 3 படி நெய் கிடைத்ததாகப் பாடுவார். இசைத் தொகுப்பின் இறுதியில் கே.வீரமணியின் மணிக்குரலில், கோதையின் திருப்பாவை குரல் கேட்டு கண்ணன் வருவதை கண்ணதாசன் வர்ணித்திருப்பார்.

வீரமணியின் ஸ்பெஷாலிட்டியான அய்யப்பன் பாடல்கள் சைவத்துக்கும் வைணவத்துக்குமான 'உறவு'. அதுவும் ஒலித்தபிறகு, மிச்சமிருக்கும் நேரத்தில் மற்ற மதத்தினரின் பாடல்கள் ஒலிக்கும். 'கேளுங்கள் கொடுக்கப்படும்.. தட்டுங்கள் திறக்கப்படும்' என்கிற கிறிஸ்தவப் பாடல் பிரபலம். அருட்தந்தை-அருட் சகோதரி என்ற முன்னொட்டுடன் கிறிஸ்தவ பாடல்கள் பல ஒலிக்கும்.

வானொலி ஒலிபரப்பிய கிறிஸ்தவப் பாடல்களைக் கடந்து, அச்சாணி படத்தில் எஸ்.ஜானகி குரலில் கேட்ட 'மாதா உன் கோவிலில் மணி தீபம் ஏற்றினேன்'

எல்லா மதப் பாடல்களையும் காதுக்குள் நிறைத்த வானொலிப் பெட்டிக்கு,

## கடவுள் எந்த மதம் என்று தெரியுமா?

பாட்டு, அன்னை வேளாங்கண்ணி படத்தின் கே.ஜே.யேசுதாஸின் 'வானமெனும் வீதியிலே...' டி.எம்.எஸ். குழுவினரின் 'நீலக்கடலின் ஓரத்தில்..' போன்ற பாடல்கள் 'ஏசு பாட்டு-மாதா பாட்டு' என எல்லாரிடமும் பெயர் பெற்றிருந்தன. அந்தப் படத்தில் 'தேவ மைந்தன் போகின்றான்...' என்கிற சிலுவைக் காட்சிக்கான பாடல் உருக்கமாக இருக்கும்.

புனித அந்தோணியார் படத்திலிருந்து, 'மண்ணுல கில் இன்று தேவன் இறங்கி வருகிறார்.. என்கிற கிறிஸ்துமஸ் நாளுக்கான பாடல் வாணிஜெயராம் குரலில் ஒலித்தது. 'ஜீசஸ்', 'குழந்தை ஏசு', 'வில்லியனூர் மாதா' என கிறிஸ்தவ சமயப் படங்களிலும் பாடல்கள் நிறைந்திருந்தன.

அன்புள்ள ரஜினிகாந்த் படத்தில் ஒலிக்கும், 'கடவுள் உள்ளமே.. கருணை இல்லமே', வெள்ளை ரோஜா படத்தின் 'தேவனின் கோவிலிலே யாவரும் தீபங்களே' என்கிற பாட்டின் தொகையறாவில் பருவமழை, உழவரின் உவப்பு, பாட்டாளி உயர்வு எனப் பொதுச் சிந்தனைகளுடன் வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்' என பிரார்த்தனைக் குரல் இருக்கும்.

இஸ்லாமிய பாடல்களுக்கும் தமிழ்த் திரையில் எப்போதும் தனி இடம் உண்டு. அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்திலேயே அல்லாவின் கருணை கூறும் வரிகள் உண்டு. 'குலேபகாவலி' படத்தின் டைட்டிலில் தஞ்சை ராமைய்யாதாஸ் வரிகளில், நாகூர் அனீபாவும் இணைந்து பாடிய, 'நாயகமே.. நபி நாயகமே' என்ற பாடலில் இந்து-முஸ்லிம் ஒற்றுமை வரை வலியுறுத்தப்பட்டிருக்கும். ஆனாலும் எல்லாரையும் கவர்ந்தது 'பாவ மன்னிப்பு' படத்தில் 'எல்லோரும் கொண்டாடுவோம்' பாட்டின் இடையே ஒலிக்கும் அனீபாவின் குரல்.

'முகமது பின் துக்ளக்' படத்தில் எம்.எஸ்.வி. குரலில் ஒலித்த 'அல்லா.. அல்லா.. நீ இல்லாத இடமேயில்லை' பாட்டு மத எல்லைகளைக் கடந்து எல்லாரையும் பாட வைத்தது. கமல்-ரஜினி சேர்ந்த நடித்த 'ஆடு-புலி ஆட்டம்' படத்தில் விஜயபாஸ்கர் இசையில், எஸ்.பி.பி. பாடிய 'வானுக்கு தந்தை எவனோ.. மண்ணுக்கு மூலம் எவனோ..' எனத் தொடங்கி, 'அல்லா பெற்ற பிள்ளைதானே யாரும்' என்கிற பல்லவியும் அதைத் தொடர்ந்து ஒலிக்கும் 'லா இலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரசூலுல்லாஹ்'வையும் பள்ளி விழா மேடையில் சக மாணவர் ஒருவர் துல்லியமாகப் பாடியது இப்போதும் கேட்கிறது.

கலைஞரின் மூத்த பிள்ளை முரசொலிக்கு அடுத்த பிள்ளையான மு.க.முத்துவின் குரலில் 'அணையா விளக்கு' படத்தில், 'கூன் பிறையைப் போற்றிடுவோம்.. குரானை ஓதிடுவோம்...' என்ற தொகையறாவுடன் 'நல்ல மனத்தில் குடியிருக்கும் நாகூர் ஆண்டவா..' எனத் தொடங்கும் பாட்டை எப்போது கேட்டாலும் இன்பம்.

வானொலி பக்திப் பாடல் நிகழ்வில் சினிமா பாடல்களைத் தவிர்ப்பது வழக்கம். அதனால் தனி இசைத் தொகுப்புகளையே தேர்வு செய்வார்கள். 'தமிழகத்தின் தர்காக்களைப் பார்த்து வருவோம்' என்ற காயல் சேக் முகமது குரலில் கவிஞர் சலீமின் வரிகள் ஒலிக்கும்போது தமிழகத்துக்கும் இஸ்லாத்திற்குமான உறவுப் பாலத்தின் மீது நம்மை பயணிக்கச் செய்வது போல இருக்கும்.

சேக் முகமதுவின் மற்றொரு சிறப்பான பாடல், 'ஈச்சை மரத்து இன்பச் சோலையில்.. நபி நாதரை..' 'அது அனைத்து மதத்தினரின் மனங்களிலும் பேரீச்சையாய் சுவை தந்தது.

'இறைவனிடம் கையேந்துங்கள்.. அவன் இல்லை யென்று சொல்லுவதில்லை' என்ற நாகூர் அனிபா குரல் வானொலி நிகழ்ச்சியில் கேட்டால், அப்பாவின் கை தானாகவே ரேடியோ வால்யூமை அதிகரிக்கும். அனீபா குரல் என்றால் அவருக்கு honeyதான்.

புலவர் ஆப்தீன், பேராசிரியர் கபூர் போன்றவர்கள் எழுதிய பாடல்களை அனீபா தனது உரத்த குரலி ல்-உச்சரிப்பு சுத்தமாகப் பாடும்போது யார்தான் மயங்க மாட்டார்கள்?

'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு.. எங்கள் திருநபியிடம் போய் சொல்லு.., 'கண்கள் குளமாகு தம்மா.. கர்பலாவை நினைக்கையிலே..' 'தக்பீர் முழக்கம்.. கேட்டால் உள்ளம் இனிக்கும்' இந்தப் பாடல்களெல் லாம் அப்பா கேட்க கேட்க, பாடப் புத்தகத்தை மீறி என் மனதில் பதிந்தவை.

எல்லா மதப் பாடல்களையும் காதுக்குள் நிறைத்த வானொலிப் பெட்டிக்கு, கடவுள் எந்த மதம் என்று தெரியுமா?

அனீபாவின் குரல்தான் அதையும் பின்னாளில் கேட்டது.

'உன் மதமா.. என் மதமா ஆண்டவன் எந்த மதம்?'

ஆண்டவன் எல்லோருக்குமானவர் என்பதை தொடர்ந்து நிரூபிக்கும் தமிழ் மண்ணில் இயேசு பிறப்பு நாளில் சபரிமலை ஐயப்பன் பாடல் இணைந்து ஒலிப்பதும் அதற்கு மகிழ்ந்து ஆடுவதும் மத நல்லிணக்கத் தின் அடையாளம்.

இதைக் கெடுக்கத்தான் சங்கிகள் படாதபாடு படுகிறார்கள்.

எச்சரிக்கையாக இருப்போம். சங்கிகளையும் அவர் களின் பழைய புதிய அடிமைகளையும் அடையாளம் காண்போம்.

●

# ஹைக்கூ – சென்ரியு

# கவிப்பிரசவத்தின் இரட்டைக் குழந்தைகள்

● புதுகை முருகுபாரதி

**தொ**ன்மையும் நீண்டநெடிய வரலாற்றுச் சிறப்பையும் உடையது நம் செம்மொழியாம் தமிழ் மொழி. உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியான தமிழ் மொழியில், சங்க காலத்தில் எழுதப்பட்ட படைப்புகள் யாவும் கவிதை நடையிலேயே அமைந்திருந்தன. சங்க இலக்கிய நூல்கள் காப்பிய வடிவில், செய்யுள்களாகவும் வெண்பாக்களுமாகவே எழுதப்பட்டன. அதன் காரணமாகவே தமிழ் மொழிக்கு 'கவிதை மொழி' என்றொரு சிறப்பும் உண்டு.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே, ஆங்கிலம் கற்றறிந்த தமிழறிஞர்கள் ஆங்கில இலக்கியங்களையும் படித்தனர். அதன் தாக்கத்தினால் தான் உரைநடை, சிறுகதை, புதினம் ஆகிய வடிவங்களிலான படைப்புகளையும் தமிழில் எழுதத் தொடங்கினர்.

'தமிழ் உரைநடையின் தந்தை' எனப் போற்றப்படும் வீரமாமுனிவரும் (கான்ஸ்டன்டைன் பெஸ்கி, 1680-1747), 'தமிழின் முதல் புதின ஆசிரியர்' என அழைக்கப்படும் மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் (1826-1889), 'தமிழின் முதல் சிறுகதையாளர்' என்று சொல்லப்படும் வ.வே.சு.ஐயரும் (குளத்தங்கரை அரசமரம், 1881-1925), 'தமிழ்ப் புதுக்கவிதைகளின் முன்னோடி' என்று அறியப்படும் ந. பிச்சமூர்த்தியும் (1900-1976) தமிழில் புதுவகை இலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்திய ஆளுமைகள் ஆவர்.

தமிழில் இன்றைக்குப் பலராலும் விரும்பி எழுதப்படும், படிக்கப்படும் இலக்கிய வடிவமாக விளங்கிவரும் புதுக்கவிதை வடிவத்தை முதன்முதலாக அறிமுகம் செய்தவர் பாரதியார். ஆங்கிலக் கவிஞர் பெர்சி பைஸ்சி ஷெல்லி எழுதிய கவிதைகளை வாசித்த பாரதி, அக்கவிதைகள் உண்டாக்கிய தாக்கத்தினால் தமிழின் கவிதை மரபிலிருந்து விலகி, இலக்கணத் தளைகளில்லா கவிதைகளை 'ஷெல்லி தாசன்' எனும் புனைபெயரில் எழுதத் தொடங்கினார். பின்னாளில் 'வசன கவிதை' என்றழைக்கப்பட்ட இக்கவிதைகளே, புதுக்கவிதையின் வரவிற்கான வரவேற்புக் கம்பளத்தை விரித்துவைத்த பெருமைக்குரியவை.

மேலைநாடுகளிலிருந்து தமிழுக்கு அறிமுகமான புதுவகை இலக்கிய வடிவங்களையெல்லாம் ஆழமும் செறிவுமிக்க தமிழ் மொழி, தனக்கான இலக்கிய வடிவங்களாகச் சுவீகரித்துக்கொண்டது. அதன் விளைவாகவே, இன்று உலகெங்கும் எழுதப்படும் இலக்கியப் படைப்புகளுக்கு நிகராகவும், ஏன் அதை விட சற்றே உயர்ந்த தரத்திலும் தமிழில் உரைநடை,

நாவல், சிறுகதை, கவிதை ஆகியன எழுதப்படுகின்றன என்பதே இலக்கிய ஆய்வறிஞர்களின் தீர்மானமாக உள்ளது.

கீழ்த்திசைப் பூமியான ஜப்பானில், ஜென் புத்திஸ பார்வையோடு இயற்கையையும் இணைத்து எழுதப் பட்ட 5-7-5 எனும் 17 அசைகளையுடைய மூவரி மரபுக் கவிதையே ஹைக்கூ (Haiku). இக்கவிதை ‘ரென்கா’ என்கிற நீள்கவிதை வடிவத்தின் தொடக்க மூன்று வரிகளாக அமைந்தவையே.

சங்கக் காலத் தமிழர்களின் வாழ்வையொத்ததே ஜப்பானியர்களின் வாழ்க்கை முறைகளும். ‘ஹனாமி’ எனப்படும் ‘பூப்பார்த்தல்’ என்பது, ஒவ்வொரு ஆண்டின் இளவேனிற்காலத்தின் தொடக்கத்திலும் ஜப்பானில் நடைபெறும் ஒரு கலாச்சார செயலாகும். பூத்துக் குலுங்கும் செர்ரிப் பூக்களைக் குடும்பத்தோடு சென்று பார்த்து ரசிப்பது ஜப்பானியர்களின் வழக்கம். ஜப்பானிய இலக்கியத்தின் மறுமலர்ச்சி காலத்தில் உருவான கவிதை வடிவமான ஹைக்கூ எனும் சொல் லுக்கு ‘ஒரு கோப்பைத் தேநீர்’ என்பது பொருளாகும்.

‘அழகு நிலையற்றது; ஆனால் இயற்கையின் அழகு எனும் தத்துவம் என்றைக்கும் நிரந்தரமானது’ எனும் ஜென்னின் தத்துவப் பின்புலத்தில் பூத்துக்குலுங்கின ஹைக்கூ மலர்கள்.

ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளின் முன்னோடிகளாக விளங்கியவர்கள் மோரிடாகே (1473-1549), சோகன் (1465-1553) இருவரும்தான். என்றாலும், மட்சூவோ பாஷோவே, ‘ஹைக்கூவின் தந்தை’ என்றழைக்கப்படுகிறார்.

16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடுத்தர மக்களின் கவிதையாக விளங்கிய ‘ரென்கா’ கவிதையின் ஆரம்ப வரிகளைச் சற்றே மாற்றி, ‘ஹொக்கு’ எனும் தனிப் பாடல்களாக எழுதினார் பாஷோ. ‘ஹொக்கு’ என்றால் ‘தொடக்கப் பாடல்’ என்று பொருள். இந்த மூவரி ஹொக்குப் பாடல்களே, பின்னாளில் ஹைக்கூ கவிதைகள் என்றழைக்கப்படலாயின.

‘ஹைக்கூ எழுதும்போது உனக்கும் உன் கருப் பொருளுக்கும் ஒரு மயிரிழைகூட இடைவெளி இருக்கக் கூடாது. உள்மனதை நேரடியாகப் பேசு; எண்ணங் களை கலைய விடாமல் நேராகச் சொல்’ என்று வலியுறுத்திய ஜப்பானிய மகாகவி பாஷோ எழுதிய புகழ்பெற்ற ஹைக்கூ ஒன்று:

**பழைய குளத்தில்**
**தவளை குதித்தது**
**நீரில் சத்தம்.**

பாஷோவைத் தொடர்ந்து பூஸன், இஸ்ஸா, ஷிகி ஆகியோர் ஹைக்கூ கவிதைகளை அடுத்தடுத்த தளங்களை நோக்கி முன்னெடுத்துச் சென்றனர்.

ஜப்பானிய மண்ணில் பிறந்த ஹைக்கூ கவிதைகள் ஆங்கில மொழியாக்கத்தின் வழியாக, உலகின் திசையெங்கிலும் பரவியது. ரெஜினோல்ட் ஹோரேஸ் பிளித் (ஆர்.ஹெச். பிளித்-1898-1964) மற்றும் ஹரோல்ட் கோல்ட் ஹெண்டர்சன் (ஹரோல்ட் ஜி.ஹெண்டர்சன்-1889-1974) இருவரும் ஆங்கிலத்தில் ஹைக்கூவை மொழிபெயர்த்து உலகக் கவிஞர்களின் கவனத்திற்கு கொண்டுபோயினர்.

சரியாய் நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் முதன்முதலாக இந்தியாவிற்குள் அறிமுகமானது ஹைக்கூ. 1916-ஆம்

ஆண்டில் வங்கத்திலும் தமிழகத்திலும் சமகாலத்தில் அறிமுகமானது. வடஇந்தியாவில் தேசியக் கவி இரவீந்திரநாத் தாகூராலும், தென்னிந்தியாவில் மகாகவி பாரதியாராலும் அறிமுகமானது.

மேற்கு வங்கத்திலிருந்து 1907-ஆம் ஆண்டு முதல் மாத இதழாக வெளிவந்த ‘மாடர்ன் ரிவ்யூ’ எனும் ஆங்கில இதழில் வந்த ஜப்பானிய ஹைக்கூ கவிதையை வாசித்த பாரதி, அது குறித்த கட்டுரை ஒன்றினை எழுதினார். ‘பிற நாட்டுக் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’ என்று சொன்ன பாரதியே, 16.10.1916 தேதியிட்ட ‘சுதேசமித்திரன்’ இதழில், ‘ஜப்பானியக் கவிதை’ எனும் கட்டுரையை எழுதினார்.

அக்கட்டுரையில், ‘இங்கிலாந்து, அமெரிக்கா என்ற தேசங்களிலுள்ள இங்கிலீஷ் கவிதையைக் காட்டிலும், ஜப்பானியக் கவிதை சிறந்தது. காரணமென்ன? மேற்குக் கவிதையில் சொல் மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கையில்லாமல் சொல்லும் வழக்கம்

ஐரோப்பியக் கவிதையிலே இல்லை... ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்றுகூடச் சேர்ப்பது கிடையாது. கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டும் என்று ஒரே ஆவலுடன் எப்பொழுதும் துடித்துக் கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதையெழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையை கவிதையாக செய்தோன் அவனே கவி என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

பாரதியின் கட்டுரை வெளியாகி, சரியாய் 50 ஆண்டுகள் கடந்தோடிய நிலையில், எழுத்தாளர் சுஜாதா, ‘கணையாழி’ (1967) இதழிலும், சி.மணி ‘நடை’ (1968 அக்டோபர்) இதழிலும் சில ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து வெளியிட்டனர். பேராசிரியர் சி.சந்திரலேகாவும் சில ஹைக்கூ கவிதைகளை மொழிபெயர்த்தார்.

உருது இலக்கியங்களை அதிலும் குறிப்பாக, கஜல் கவிதையைத் தமிழுக்கு அறிமுகம் செய்த கவிக்கோ அப்துல் ரகுமான், தமிழில் ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய அறிமுகக் கட்டுரைகளை வெகுசன இதழ்களில் தொடர்ந்து எழுதி, ஹைக்கூவைப் பரவலாகக் கொண்டுசேர்த்தார்.

முதன்முதலாக நேரடியான தமிழ் ஹைக்கூ கவிதைகளை 1973-இல் கவிக்கோ அப்துல்ரகுமான் எழுதினார். கவிக்கோ எழுதிய 5 ஹைக்கூ கவிதைகள், 1974-இல் வெளியான அவரது ‘பால்வீதி’ கவிதை நூலில் ‘சிந்தர்’ எனும் தலைப்பின்கீழ் இடம்பெற்றன. அதிலொரு ஹைக்கூ;

**மயான வாயிலில்**
**பழுதாகி நின்றது**
**ஈனில் ஊர்தி.**

தமிழ் நிலத்தில் ஹைக்கூ மெல்ல மெல்ல வேரிறக்கித் துளிர்த்தது. ‘தமிழில் முதன்முதலாக வெளிவரும் ஹைக்கூ கவிதை நூல்’ எனும் அறிவிப்போடு, 1984 ஆகஸ்டில் ஓவியக்கவிஞர் அமுதபாரதியின் ‘புள்ளிப் பூக்கள்’ நூலும், அதே ஆண்டு நவம்பரில் கவிஞர் அறிவுமதியின் ‘புல்லின் நுனியில் பனித்துளி’ நூலும் வெளியாகின. 1985 பிப்ரவரி மாதத்தில் நம் காலத்து மகாகவி ஈரோடு தமிழன்பனின் ‘சூரியப் பிறைகள்’, 1990 மார்ச்சில் கவிஞர் மித்ராவின் ‘ஹைகூ கவிதைகள்’ நூல்களும் வெளிவந்து, ஹைக்கூ கவிதைகளைப் பலரும் அறியச் செய்ததோடு, சிலரை எழுதவும் தூண்டின.

**நீண்ட அலகு நாரை**
**நீரைக் குத்திக் கிழித்தாலும்**
**நீங்காதிருக்கும் நிலா.**

**-அமுதபாரதி**

**உடைந்த வளையல் துண்டு**
**குளத்தில் எறிந்தேன்**
**அடடா! எத்தனை வளையல்கள்.**

**-அறிவுமதி**

**பயம்**
**ஊர்ந்து கொண்டேயிருக்கிறது - இது**
**பாம்பு போன தடம்.**

**-ஈரோடு தமிழன்பன்**

**அணில்களே**
**நகங்களை வெட்டுங்கள்**
**பூவின் முகத்தில் காயங்கள்.**

**-மித்ரா**

தமிழில் ஹைக்கூ கவிதை அறிமுகமான ஆரம்பக் காலங்களில் துணுக்குக் கவிதை, குட்டிக்கவிதை என்று அதன் மூவரி வடிவத்தை மனதில்கொண்டே பலரும் கேலியாக விமர்சித்தனர். மேலும், ஓரிருவர் ‘ஹைக்கூ எழுதுவது அந்நிய கவிதை மோகம்’ என்றும் கிண்டலடித்தனர்.

ஹைக்கூ என்பது வெறும் மூன்று வரிகளையுடைய கவிதை மட்டுமல்ல; அதையும் தாண்டி, அதன் செறிவான மொழி, காட்சியழகு, வாசிக்கிற வாசகனையும் தன் கூட்டுப் படைப்பாளியாக்கிக்கொள்ளும் அதன் சமூகப் பயன்பாடு என எதைப் பற்றியும் அறிந்து கொள்ளாமல் மேம்போக்கான பார்வையிலேயே ஹைக்கூவை அணுகிய பலரும் இன்றைக்கு அமைதியாகி விட்டனர்.

தமிழில் ஜப்பானிய மரபுப்படி 17 அசைகளுடன் ஹைக்கூ எழுத முடியாது. மேலும், ஜப்பானில் தொடக்க காலத்தில் ஹைக்கூவில் காதலோ, சமூக விமர்சனமோ கூடாது என்றும் சொல்லப்பட்டது. அத்தோடு மூன்று வரி எனும் வரையறையையும் கடந்து 6, 7 வரிகளில் கூட ஹைக்கூ எழுதப்பட்டது. ஆனால், காலப்போக்கில்

ஹைக்கூ தனக்கான வடிவச் செறிவை வரித்துக் கொண்டது. அவ்வாறே இன்றைக்குத் தமிழில் எழுதப் படும் ஹைக்கூ கவிதைகளும் சிலவற்றை அடிப்படைக் கூறாகக் கொண்டுள்ளன. அவை;

1. நேரடியான காட்சியின் அனுபவத் தாக்கம்
2. செறிவான - கவித்துவமான மூன்று வரிகள்
3. மூன்றாவது வரியில் எதிர்பாரா மின்தூண்டல்

இத்தகைய உள்ளடக்கத்தை முன்வைத்தே இன்றைக் குத் தமிழில் ஹைக்கூ கவிதைகள் எழுதப்படுகின்றன.

'சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம்; சுண்டக் காய்ச்சிய இறுகிய மொழியால் ஹைக்கூ எழுதப்பட வேண்டும்' என்று கவிக்கோ அப்துல் ரகுமான் சொன்னதையும், 'கவிதை புறமனம் தீட்டும் ஓவியம்; ஹைக்கூ அடிமனதின் வெடிப்பு' என்று கவிஞர் சேலம் தமிழ்நாடன் சொன்னதையும் மனதிலிறுத்தியே இன்று தமிழில் ஹைக்கூ கவிதைகள் படைக்கப்பட்டு வருகின்றன. தமிழில் ஹைக்கூ எழுதும் எல்லாக் கவிஞர்களுமே ஹைக்கூ குறித்த சரியான புரிதலோடும் தெளிவோடும் எழுதுவதில்லை என்றாலும், தமிழில் அறிமுகமாகி வளர்ந்துவரும் ஒரு புதிய வடிவம் எனும் வகையில் பலரும் ஆர்வத்தோடும், தேடலோடும் ஹைக்கூவை எழுதி வருகின்றனர்.

அவர்களை முதலில் திறந்த மனதோடு வரவேற்க வேண்டும்.

தமிழில் எழுதப்பட்ட சில ஹைக்கூ கவிதைகளைக் காண்போம்.

திண்ணையிலிருந்து
நிலவை ரசிப்போம்
தொலைந்தது வீட்டுச்சாவி.

**-ராஜமுருகுபாண்டியன்**

அய்யனார் கை அரிவாள் மீது
சிட்டுக் குருவியொன்று
இயல்பாக அமர்கிறது.

**-மணி சண்முகம்**

திடீர் மழை
சுள்ளி பொறுக்கும் சிறுமிக்கு
குடை பிடிக்கும் மரம்.

**-ஆரூர் தமிழ்நாடன்**

செருப்பில் ஏறிப் பார்த்து
காலுக்குப் பொருந்தாமல் இறங்கிச்செல்கிறது
எறும்பு.

**-என்.லிங்குசாமி**

விண்மீன்கள் ரசித்தபடியே
உறங்கும் குழந்தைகள்
பழுதடைந்த தொலைக்காட்சி.

**-பாரதி ஜிப்ரான்**

மெழுகோடு இருளையும்
சேர்த்துண்ணும் சுடர்
சுடரையுண்ணும் இருள்

**-ஸ்ரீரசா**

நண்பனின் மரணம்
இடுகாட்டில் நுழைகையில்
நெற்றியில் முதல் தூறல்.

**-மு.முருகேஷ்**

சோளக்காட்டுப் பொம்மை காவல்
அறுவடைக் காலம்
பயமின்றி நெல்லறுக்கிறது எலி.

**-கோ.லீலா**

தமிழின் தொன்மைச் சிறப்பையும் செழுமையையும் உலகிற்குச் சொல்லும் வகையிலான செறிவான ஹைக்கூ கவிதைகள் இன்று தமிழில் ஆயிரமாயிரமாய்ப் படைக்கப்பட்டு வருகின்றன என்பதை தொடர்ந்து அதனை வாசித்து வருபவர்களால் கண்டுணர முடியும்.

தமிழில் ஹைக்கூ அறிமுகமாகி, தற்போது சரியாய் 41 ஆண்டுகளைக் கடந்திருக்கிறோம். தற்போது, இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழியில் மட்டுமே மிகவும் அதிகமாக சுமார் 1100-க்கும் மேற்பட்ட ஹைக்கூ நூல்கள் வெளிவந்துள்ளதாக அறிய முடிகிறது. அவை முழுக்கவும் ஹைக்கூ கவிதை நூல்களாக மட்டுமல்லா மல், ஹைக்கூ சார்ந்த பிற கிளை வடிவங்களான சென்ரியூ, லிமரைக்கூ, லிமர்புன், ஹைபுன் ஆகிய வடிவங்களிலும் வெளியாகியுள்ளன என்பது சிறப்புக்குரியது.

### சென்ரியூ எனும் சிரிப்பு மத்தாப்புகள்:

தமிழுக்கு ஹைக்கூ கவிதைகள் அறிமுகமான போதே, அதனோடு சேர்ந்துவந்த, ஹைக்கூவோடு ஒட்டிப்பிறந்த இன்னொரு கவிதை வடிவம் சென்ரியூ **(Senryu)**.

தொடக்கக் காலத்தில் ஹைக்கூ, சென்ரியூ எனப் பிரித்துணரத் தெரியாமல் அல்லது முடியாமல் எல்லோரும் ஹைக்கூ என்ற பெயரிலேயே சென்ரியூவை யும் எழுதிவந்தனர்.

இருபத்தியோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் சென்ரியூவை தனியே பிரித்தறிய வேண்டும் என்கிற புரிதல் பலரிடத்தும் உண்டானது. எது ஹைக்கூ, எது சென்ரியூ எனும் கேள்விகளுக்கும் விடைதேடத் தலைப்பட்டனர்.

ஹைக்கூ என்பது இயற்கையை அடிப்படையாகக் கொண்டது. எதையும் அதிர்ந்து சொல்லாது. மௌன மாக அதே நேரத்தில் வீர்யத்துடன் சொல்லும் செறிவான மொழியைக் கொண்டிருக்கும்.

சென்ரியூ என்பது நகைச்சுவையைப் பிரதான மாகக் கொண்டது. எதையும் எவ்வித மறைவுமின்றி உரத்த குரலில் சொல்லும். ஹைக்கூவில் நேரடியாகச் சொல்ல முடியாத சமூகச் சீர்கேடுகளையும், அரசியல் விமர்சனங்களையும் தயங்காமல் சொல்லிவிடும். கேலி யும், கிண்டலுமாகப் படித்ததும் நம்மைச் சிரிக்க

வைக்கும் கவித்தெறிப்பே சென்ரியூ.

ஹைக்கூ ஆய்வறிஞர் ஆர்.ஹெச்பிளித் கூறுகையில், ‘கவித்துவம் அதிகமாக இருந்தால் அது ஹைக்கூ எனப் படும். நகைச்சுவை அதிகமெனில் அது சென்ரியூ ஆகும்’ என்கிறார்

‘ஹைக்கூவில் நீதி கூறுதல், கொள்கை பரப்புதல் ஆகியவை இல்லையெனும் குற்றச்சாட்டை சென்ரியூ நீக்குகிறது. சென்ரியூவில் அங்கதச் சுவை கொண்ட நகை (Satirical humour), அரசியல், சமுதாயம், இயக்கம் சார்ந்ததாயுள்ளது. ஹைக்கூவின் வழித் தோன்ற லாயுள்ள சென்ரியூவின் மூலம் ‘கலை வாழ்வுக்காக’ எனும் நோக்கம் நிறைவேறும்’ என்று கவிஞரும் ஹைக்கூ ஆய்வாளருமான நிர்மலா சுரேஷ் தனது கருத்தாகக் கூறியுள்ளார்.

தமிழில் ஹைக்கூ, சென்ரியூ கவிதைகள் எல்லாம் ஒன்றாகக் கலந்து, ஒரே நூலாகவே வெளியாகி வந்தன. இச்சூழலில் 2001 ஏப்ரலில், தமிழின் முதல் சென்ரியூ நூலினைக் கவிஞர் ஈரோடு தமிழன்பன் வெளியிட்டார். நூலின் பெயர்; ‘ஒரு வண்டி சென்ரியு.’

**எல்லோர் வீட்டிலும்**
**இரவல் குழம்பு கேட்கிறாள்**
**காணாமல்போனது கோழி.**
**சிலைக்கு வெளியே போய்வந்த**
**கடவுள் நிலையாய் நின்றார்**
**சிலையைக் காணோம்.**

அந்நூலிலுள்ள இவ்விரு சென்ரியூ கவிதைகளும், மூன்று வரிகளில் இருந்தாலும் இவை ஹைக்கூ அல்ல; படிக்கையிலேயே நமக்குள் வெடிச்சிரிப்பை உண்டாக்கு மெனில் அது சென்ரியூ என்பதை உணர வேண்டும்.

கவிஞர் ஈரோடு தமிழன்பனின் முன்னெடுப்பைத் தொடர்ந்து, சில சென்ரியூ கவிதை நூல்களும் தமிழில் வந்தன. பின்னர் ஹைக்கூ கவிதை நூலுக்குள்ளேயே சென்ரியூ கவிதைகளைத் தனியே பிரித்து அடையாளம் காட்டும் வகையிலும் சில நூல்கள் வெளியாகின. தமிழில் எழுதப்படும் ஹைக்கூ கவிதைகளில் பாதி கவிதைகள் சென்ரியூவாகவே உள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

தற்காலத்தில் எழுதப்பட்ட சில சென்ரியூ கவிதைகள் இவை;

**இருக்காது சும்மா**
**ஆடிய காலும் பாடிய வாயும்**
**ஊழல்வாதி கையும்.**

**-இரா.இரவி**

**உடைந்த நிலையில்**
**மாரியம்மன் வாய்**
**பூசாரி தங்கப் பல்லில்.**

**-பா.சிவா**

**ராஜாஜியைத் தூக்கு அண்ணாவை வை**
**வரலாறு புரண்டு கொண்டிருந்தது**
**புத்தகக் கண்காட்சியில்.**

**-ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம்**

**எல்லை மீறல்**
**நடந்துகொண்டே இருக்கிறது**
**பேச்சுவார்த்தைகளில்.**

**-புதுகை ஆதிரா**

**கவனமான தேர்வு**
**கலந்துகொண்டோர் குறைவு தான்**
**ஹைக்கூ மாநாடு.**

**-சகா**

ஹைக்கூ கவிதைகள் இயற்கை மீது கூடுதல் நேசம் கொள்வதைப் போலவே, சமூகச் சாடல்களைச் சொடுக்குவதில் சென்ரியூ கவிதைகள் கூடுதல் கவனம் செலுத்துகின்றன. ஹைக்கூ, சென்ரியூ இரண்டுமே மூவரி எனும் வரையறைக்குள் இருந்தாலும், நகைச்சுவை உணர்வையூட்டும் கவிதைகளை, நேரடியான கருத்து களைப் பிரதிபலிக்கும் கவிதைகளை இனியேனும் சென்ரியூ என நாம் இனம் பிரித்து அறிய வேண்டும்.

‘கீழ்த்திசை பௌத்தச் சிந்தனையில் அரும்பி, சீனத் துப் பண்பாட்டில் போதாகி, ஜப்பானிய அழகுப் பார்வையில் மலர்ந்து மணம் பரப்பும் மலர் ஹைக்கூ. இந்திய, சீன, ஜப்பானிய பௌத்தக் கூறுகள், தாவோயி சம், கன்பூஷியனிசம், சீனக் கலை, ஜப்பானிய ஓவியம், இகபானா மலர்க் கலை என்று இவையெல்லாம் சங்கமித்துக் கலந்து புதிய பரிமாணம் பெற்ற வடிவம் ஹைக்கூ’ என்று பேராசிரியர் தி.லீலாவதி (பக்கம்: 14, ஜப்பானிய ஹைக்கூ - டிசம்பர்-1987) கூறியதற்கேற்ப, தமிழ் மொழிக்குப் புதிய செறிவையும் இறுக்கத்தையும் தரும் வகையில் ஹைக்கூ கவிதைகள் எழுதப்படுகின்றன.

ஒரு கவிதையானது மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை, சென்ரியூ கவிதை என எவ்வகை வடிவம் கொண்டதாக இருந்தபோதிலும், அது தான் எழுதப்படும் காலத்தைப் பிரதிபலிக்கிறதா, அக் காலத்தில் வாழும் மக்களின் குரலை எதிரொலிக்கிறதா என்பதே மிகவும் முக்கியமாகும்.

**‘வாழும் கவிதை வடிவத்தில் இல்லையடா;**
**சூழும் பகைவர்க்குச் சொல்’** என்றெழுதினார்

**-கவிப்பேரரசு வைரமுத்து.**

‘காலமாற்றத்தை உணர்ந்து, உள்வாங்கிக்கொண்டு எழுதப்படும் கவிதைகளே காலத்தை வென்று நிற்கும்’ என்பதே வரலாறு. இந்த வரலாற்று உண்மையைச் சரியான அர்த்தத்தில் உள்வாங்கிக்கொண்ட ஹைக்கூ மற்றும் சென்ரியூ கவிதைகள் தமிழில் இன்னும் இன்னு மாகச் செழித்தோங்கி வளரும். இன்னும் பல்லாயிரம் இளைய கவிஞர்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தரும் எனும் நம்பிக்கையோடு காத்திருக்கலாம்.

●

# சர்வே கல்

## (மலையாள கதை)

குட்டப்பப் பணிக்கர் குஞ்ஞித்தேயி அம்மாவைத் திருமணம் செய்து கொண்டான். குட்டப்பப் பணிக்கருக்கு சந்தோஷம் உண்டானது. குஞ்ஞித்தேயி அம்மாவிற்கும் சந்தோஷம் உண்டானது. அனைவரையும் விட, அதிகமான சந்தோஷம் உண்டானது குஞ்ஞித்தேயி அம்மாவின் மாமாவான ஈச்சரன் நாயருக்குத்தான். குடும்பத்தைப் பற்றி மிகவும் அக்கறை கொண்டிருக்கும் அந்த பெரியவர் தன் குடும்பத்தின் ஒரே வாரிசான அந்த மருமகளின் திருமணத்தைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். குஞ்ஞித்தேயி அம்மாவிற்கு ஒரு குழந்தை பிறந்துதான் அந்த குடும்பத்தின் பரம்பரை நிலைநிற்க வேண்டிய நிலை... ஒரு பூவைக்கூட சுமக்க வைக்காத வகையில் ஈச்சரன் நாயர் அவளை வளர்த்திருந்தார். தாயும் தந்தையும் இல்லாத அந்தச் சிறுமி மாமாவின் நிழலில் வளர்ந்தாள். பதினெட்டு முடிந்து வனப்புடன் நின்று கொண்டிருக்கிறாள். எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்?

பிள்ளைகளைப் பற்றி ஈச்சரன் நாயர் எந்தச் சமயத்திலும் கவலைப்பட்டதே இல்லை.' அவர்கள் நன்றாக இருந்தால், அவர்களின் குடும்பத்திற்கு நல்லது' என்பதுதான் அவரின் நம்பிக்கையாக இருந்தது. "குஞ்ஞித்தேயி பிரசவமாகி குழந்தைகள் பிறந்து குடும்பம் தளராமல் இருக்க வேண்டுமே!"

என்பதைத்தான் ஈச்சரன் நாயர் தினமும் குடும்ப தெய்வத்திடம் வேண்டிக் கொண்டிருந்தார்.வர இருக்கும் அந்தத் தலைமுறைக்காக எப்போதும் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தார். காலையில் எழுந்ததும் கஞ்சியைக் குடித்து விட்டு மண்வெட்டியை எடுத்து தோளில் வைத்துக் கொண்டு நிலத்தில் இறங்கினால், திரும்பி வருவது சூரியனின் தலை மறைந்த பிறகுதான். குளியலும் உணவும் முடிந்து வாசல் படியில் சிறிது நேரம் ஓய்வெடுப்பார். அப்போது மருமகளைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பார். மருமகளின் சிறப்புகளைப் பற்றியும் ஜாதக குணங்களைப் பற்றியும் பெருமையாக நினைத்தாலும், அவள் அந்த அளவிற்கு அழகான தோற்றத்தைக் கொண்டவள் அல்ல என்ற எண்ணம் ஈச்சரன் நாயரின் மனதின்

அடித்தளத்தில் இருந்தது. அதனால், பார்த்து விருப்பம் உண்டாகி, ஒரு மணமகன் வந்து சேர்வது என்பது எளிதான விஷயமல்ல. தேடி அலைய வேண்டும். அதே நேரத்தில் இதை வெளிப்படையாக யாரிடமாவது கூறமுடியுமா? மருமகளுக்குக் கணவனைத் தேடி ஈச்சரன் நாயர் நடந்து திரிகிறார் என்று ஊரில் இருப்பவர்கள் பேசுவார்கள். அந்த பரம்பரை பெருமை கொண்ட குடும்பத்தால் அதை நினைத்துக் கூட பார்க்க முடியாது.

குஞ்ஞித்தேயியோ? தனக்கு எந்தவொரு குறைவும் இருப்பதாக அந்த இளம்பெண் நினைக்கவில்லை. இளமைக்கு வேண்டிய அளவிற்கு அந்த மேனியில் கலை வேலைப்பாடுகள் நடந்திருக்கின்றன. எப்படிப்பட்ட காட்டு புதரையும் புன்னகைக்க வைக்கக்கூடிய அளவிற்கு வசந்த காலம் அவளை இறுக தழுவி நின்று கொண்டிருக்கிறது. சுருண்டு இருண்ட தலைமுடி, எண்ணெய் புரண்ட சரீரத்தின் நிறம், தூண்டில் வளையத்தைப் போன்ற பார்வை, அழுத்தி நடக்கும் நடை, 'எனக்கென்ன?' என்ற நினைப்பு - அவளைப்

பொறுத்தவரையில் அனைத்தும் மிகவும் சரியாகவே இருந்தன.

எனினும், மதிய வேளையில் அமர்ந்து, புதிய ஆடையில் கோழிக் கண்ணைப் பின்னும்போதும், மாலை வேளையில் விளக்கு ஏற்ற பயன்படும் திரியை உருவாக்கும்போதும் தன்னுடைய இதயத்தில் அலைமோதிக் கொண்டிருக்கும் சில உணர்ச்சிகளை வெளிப்படுத்த அவள் முயற்சிப்பதுண்டு. அப்போது ஒரு இனம் புரியாத தனிமைச் சூழலை அவள் உணர்வாள்.

அன்று குஞ்ஞித்தேயி கிணற்றின் கரையில் அமர்ந்து வெங்கல பாத்திரங்களைத் தேய்த்து மினுக்கிக் கொண்டிருந்தாள். தலையை உயர்த்தி பார்த்தபோது, நிலத்தின் எல்லையிலிருக்கும் சர்வே கல்லின் மீது ஒரு தலைக்கட்டு கட்டிய மனிதன்! இன்னொரு முறை கூர்ந்து பார்த்தாள். குட்டப்பப் பணிக்கர்! அங்கு இருக்கக்கூடிய நிலத்தின் உரிமையாளன். அங்கு நடக்கும் நிலத்தைக் கிளறும் வேலையை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருக்கிறான். அவ்வப்போது ஒவ்வொரு கட்டளையையும் பிறப்பித்துக் கொண்டிருக்கிறான். ''சாத்தப்பா.... வெயில் போகுறதுக்குள்

அந்தப் பகுதியை முழுமையா கிளறி முடிக்கணும். தெரியுதா?'' மிகவும் கம்பீரமாக இருந்த அந்த குரல் இனிமையான ஒன்றாக குஞ்ஞித்தேயிக்குத் தோன்றியது. இன்னுமொரு முறை கூர்ந்து பார்த்தாள். ரோமங்கள் அடர்த்தியாக இருக்கக்கூடிய விரிந்த மார்பு, கடைந்தெடுத்ததைப் போன்ற நீண்ட கைகள், உயரமான சரீரம்.... குட்டப்பப் பணிக்கர் ஒரு

# உறூப்
# தமிழில் : **சுரா**

ஆணேதான். அவன் எழுந்து சென்ற பிறகு, கதிர்கள் அறுக்கப்பட்ட நெல் செடியைப் போல அந்த சர்வே கல் உயிரற்றதாக குஞ்ஞித்தேயிக்குத் தோன்றியது. அதற்குப் பிறகு அடிக்கடி அந்த கல்லின் மீது கண்களைச் செலுத்தாமல் இருக்க முடியவில்லை. ''இது முன்பே இங்கு இருந்ததுதானே?'' என்று ஆச்சரியப்படவும் செய்தாள்.

மறுநாள் கதவைத் திறந்தபோது, பாதி கிளறப் பட்ட அந்த நிலத்தை நோக்கி குஞ்ஞித்தேயியின் கண்கள் பாய்ந்து சென்றன. அந்த நிலமும் அவளுடைய இதயத்தைப் போலவே இருந்தது. அந்த சர்வே கல் வெறுமனே நின்று கொண்டிருந்தது. எங்கிருந்தோ பறந்து வந்த ஆடிக் கொண்டிருக்கும் வாலைக் கொண்ட ஒரு கிளி, அந்தக் கல்லின் மீது அமர்ந்து இரண்டு மூன்று தடவைகள் அசைந்தது. வேறொரு இடத்திற்குப் பறந்து சென்றது.

குஞ்ஞித்தேயியின் கறுத்த கன்னங்களில் மேலும் கொஞ்சம் எண்ணெய் படலம் வந்து சேர்ந்தது. கண்களில் புலர்காலைப் பொழுதின் பிரகாசம் எட்டிப் பார்த்தது. எனினும், ஒரு சோர்வு உண்டானது. காலையில் எழுந்தவுடன் மிகுந்த ஒழுங்குடன் காரியங்களைச் செய்யக்கூடிய அந்த இளம்பெண்ணுக்கு ஒரு கொட்டாவி விட வேண்டும் போல இருந்தது. தொடர்ந்து ஒரு இடத்தில் சாய்ந்து படுத்தவாறு ஒவ்வொன்றையும் அசை போட வேண்டும் என்ற நினைப்பு... ஆனால், வேறு வழியில்லை. அனைத்து இடங்களிலும் அவளின் கண்கள் பாய்ந்து கொண்டிருந்தன. கால்நடைகளைப் பார்த்துக் கொள்ளக்கூடிய பையனை அழைத்தாள்... சமையல்காரியைத் திட்டினாள்...

அடுப்பிலிருந்த சாம்பலை வாரினாள்... நெருப்பைப் பற்ற வைத்தாள்... குளித்து முடித்து குல தெய்வத்திடம் வேண்டினாள்:

"எனக்கு உதவு...."

தோளில் மண்வெட்டியை வைத்தவாறு ஈச்சரன் நாயர் மேலே இருக்கும் வாய்க்காலை நோக்கிச் சென்றார். குஞ்ஞித்தேயி மீண்டும் கிளறப்பட்ட நிலத்தைப் பார்த்தாள்.

பணியாட்கள் வரிசையாக வந்து சேர்ந்திருந்தார்கள். கிளறிக் கொண்டும், புரட்டி போட்டுக் கொண்டும்... ஆழமாக பணியில் ஈடுபட்டிருந்தனர். புதுமண்ணின் அருமையான வாசனை... ஒரு தாயாக ஆவதற்கு தன்னைத் தயார் பண்ணிக் கொண்டிருக்கிறது. அவளுடைய கண்கள் அந்த சர்வே கல்லை நோக்கி தாவிச் சென்றன. அந்த சர்வே கல்லின் மீது ஒரு

காலை எடுத்து வைத்தவாறு குடையை ஊன்றிய கோலத்தில் நின்று கொண்டிருந்தான் குட்டப்பப் பணிக்கர். மரணத்திற்குப் பிடி கொடுக்காமல் ஓடிய மார்க்கண்டேயன் சென்று கட்டிப் பிடித்த சிவலிங்கத்திற்குப் பின்னால் தெரிந்த பரமேஸ்வரனின் உருவம் குஞ்ஞித்தேயிக்கு ஞாபகத்தில் வந்தது. மொத்தத்தில் ஒரு நிம்மதி உண்டானது.

பத்து மணி தாண்டியது. பதினொன்று ஆனது. பன்னிரண்டும் கடந்தது. அந்தக் கடுமையான வெயிலிலும் சர்வே கல்லை மிதித்தவாறு குட்டப்பப் பணிக்கர் நின்று கொண்டிருந்தான். கிணற்றின் கரைக்குச் சென்றபோது, குஞ்ஞித்தேயி அம்மாவிற்கு ஒரு சிந்தனை.... பணிக்கர் பரம்பரை பெருமையைக் கொண்ட ஒரு இல்லத்தைச் சேர்ந்தவன் அல்லவா? தங்களுடைய எல்லையில் வந்து இவ்வளவு நேரமாக நின்று கொண்டிருந்த பிறகும், ஒரு மரியாதையைக் காட்டாமல் இருக்கலாமா? பாதி தூரத்திற்கு கிணற்றிற்குள் விட்ட வாலியையும் கயிறையும் பிடித்து இழுத்து கீழே போட்டு விட்டு, இரு சிந்தனைகளுடன் அருகில் சென்று கேட்டாள் : " தாகம் எடுக்கிறதா? "

குட்டப்பப் பணிக்கர் குடையை உயர்த்தி தலையைத் திருப்பிக் கொண்டு குஞ்ஞித்தேயியை முழுமையாக பார்த்தான். பிறகு கூறினான் :

"கொஞ்சம்..."

"காப்பியா? மோரா? என்ன வேணும்?"

"மோராக இருந்தால், ரொம்பவும் நல்லது. குளிர்ந்த நீராக இருந்தாலும், பிரச்சினையில்லை."

அதற்கு குஞ்ஞித்தேயி பதில் கூறவில்லை. அவள் அழுத்தி மிதித்து ஒரு வேக நடையை நடந்தாள். ஐந்து நிமிடங்களில் ஒரு சொம்பு மோருடன் திரும்பி வந்தாள். குட்டப்பப் பணிக்கர் ஓசை எழும் வண்ணம் வாய்க்குள் ஒரு நீரோட்டத்தை உண்டாக்கிக் கொண்டு அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த வேளையில், குஞ்ஞித்தேயியின் கண்கள் அவனுடைய தொண்டையில் மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் பாய்ந்து விளையாடும் பந்தையே சுற்றிச் சுற்றி பார்த்துக் கொண்டிருந்தன. சொம்பைத் திரும்ப தந்தபோது, அவள் கேட்டாள்:

"போதுமா?"

''இப்போ போதும்...''- குட்டப்பப் பணிக்கர் கூறினான். தொடர்ந்து தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து நான்காக மடித்து சர்வே கல்லின் மேலே வைத்து, அதன் மீது அமர்ந்தான். அப்போது நான்கு ஏப்பங்களையும் விட்டான்.

மண்ணைக் கிளறும் பணி அதற்குப் பிறகும் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. மூன்று நாட்களும் குட்டப்பப் பணிக்கருக்குத் தாகம் உண்டானது. குஞ்ஞித்தேயி மோரைக் கொண்டு போய் கொடுக்கவும் செய்தாள். மூன்றாவது நாளன்று அவள் கேட்டாள்:

"எதற்கு இந்த சர்வே கல்லின் மீது உட்கார்ந்து இருக்கீங்க? இந்த திண்ணையில அமர்ந்திருந்தாலும், கிளறும் வேலையைப் பார்க்க முடியுமே?"

"ஆனால், இந்த சர்வே கல்லின் மீது அமர்ந் திருந்தால், அதிக சுகம் கிடைக்கும். இது என் நிலத்தின் எல்லை அல்லவா? எல்லையை விட்டு நீங்காமலிருப்பது எப்போதும் நல்லதுதானே?"

"அது சரிதான்."- குஞ்ஞித்தேயி அதைக் கூறி விட்டு, சமையலறைக்குள் நுழைந்தாள். அன்றுடன் நிலத்தைக் கிளறும் வேலை முடிந்தது. மறுநாள் புதிய மண் புரண்டு காணப்பட்ட அந்த நிலம் தனியாக சூடான பெருமூச்சுகளை விட்டுக் கொண்டிருந்தது.

நான்கு நாட்கள் இவ்வாறு கடந்தன. ஐந்தாவது நாளன்று குட்டப்பப் பணிக்கரின் மூத்த மைத்துனன் வந்தான்.குசலம் விசாரித்து விட்டு, ஈச்சரன் நாயரிடம் கூறினான்:

"நம்முடைய குட்டப்பாவிற்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணும்."

"அப்படியா? அதற்கான வயது வந்திருச்சே? "- என்றவொரு அருமையான வார்த்தையை ஈச்சரன் நாயர் தட்டி விட்டார்.

வந்திருந்த மனிதன் குரலை இறக்கி வைத்துக் கொண்டு தொடர்ந்தான்:

"இங்கிருக்கும் பொண்ணோடு இணைந்தால் பரவாயில்லன்னு...."

ஈச்சரன் நாயரின் இதயத்திலிருந்து சந்தோஷத்தின் ஜுவாலை மேல்நோக்கி வேகமாக எழுந்தது.இந்த அளவிற்கு சாதாரணமாக ஒரு ஆலோசனை வந்து சேரும் என்று அவர் நினைக்கவே இல்லை." எனக்கும் இதைவிட பெரிய சந்தோஷம் இருக்கிறதா? "- என்று கூறி வேகமாக எழுந்த ஈச்சரன் நாயர், பிறகு சரியாக அமர்ந்தது குஞ்ஞித்தேயியின் திருமணம் முடிந்த பிறகுதான். இப்படித்தான் அந்தத் திருமணம் நடந்தது.

குஞ்ஞித்தேயியின், குட்டப்பப் பணிக்கரின் குடும்ப வாழ்க்கை பிரகாசமாக இருந்தது. காலையில் எழுந்து பல் தேய்ப்பதற்காக கிணற்றிற்கு அருகில் இருக்கும்போது, குஞ்ஞித்தேயி கேட்பாள்:" அந்த சர்வே கல்லைப் பார்த்தீங்களா?"

"ம்..."- குட்டப்பப் பணிக்கர் சற்று நீட்டி முன குவான். அந்த சர்வே கல்லின் மீது கொத்தப்பட்டிருந்த அம்பு அடையாளம் அர்த்தம் நிறைந்ததாக அப்போது அவளுக்குத் தோன்றியது. ஒரு சிவலிங்கத்தைப் போல புனிதத் தன்மை கொண்டதாக அந்த கல்லை குஞ்ஞித்தேயி நினைத்தாள்.

பல் தேய்ப்பதை முடித்து விட்டு, மேற்துண்டை எடுத்து தோளில் போட்டவாறு குட்டப்பப்

பணிக்கர் தன் வீட்டை நோக்கி நடந்து சென்றான்.

இரண்டாவது வருடத்தின் மத்தியில் குஞ்ஞித்தேயி பிரசவமானாள். குழந்தையின் அழுகையைக் கேட்டதும் வாசலில் ஒதுங்கி நின்றிருந்த ஈச்சரன் நாயர் உள்ளே தலையை நீட்டியவாறு கேட்டார்: "என்ன குழந்தை?"

"ஆண்..."

ஆண் குழந்தை பிறந்தால், வாசலுக்கு வெளியே உரத்த குரலில் கூற வேண்டும். ஈச்சரன் நாயர் அரைமணி நேரம் சத்தம் போட்டு கூறினார். அனைவரிடமும் நடந்து சென்று கூறவும் செய்தார்:

"பாருங்க. நமக்கு ஒரு மருமகன் பிறந்திருக்கிறான். என் குடும்பத்திற்கு வாரிசு வந்திருச்சு...."

அதற்குப் பிறகு அந்த மனிதர் மிகவும் அதிகமாக உழைக்க ஆரம்பித்தார். வளர்ந்து வரும் மருமகனுக்காக நான்கு காசுகளைச் சம்பாதித்து வைக்க வேண்டும். குட்டப்பப் பணிக்கருக்கும் பெரிய சந்தோஷம். ஒரு தந்தைக்கு அந்த அளவிற்கு சந்தோஷம் இருக்க வேண்டிய அவசியமில்லை என்பது ஈச்சரன் நாயரின் கருத்து:

"இந்த குழந்தை அவனோட குடும்பத்திற்கானது இல்லையே!"

குழந்தையின் பெயர் வைக்கும் செயலும், தொட்டிலில்போடும் காரியமும் விமரிசையாக நடந்தன. பொதுவாகவே கஞ்சனான ஈச்சரன் நாயர் மடியின் கயிறை நன்றாகவே அவிழ்த்தார்.

சோறு ஊட்டும் செயலை இதைவிட சிறப்பாக நடத்த வேண்டும் என்பதுதான் அந்த மாமாவின் எண்ணமாக இருந்தது. ஆனால், விடாமல் பெய்த மழை எதற்கும் ஒத்து வரவில்லை. சோறு ஊட்டும் காரியம் நடந்து முடிந்த பிறகும், மழை நிற்கவில்லை. அது மட்டுமல்ல... மழையைத் தொடர்ந்து ஒரு வெள்ளப்பெருக்கும் உண்டானது. வெறி பிடித்த காளையைப் போல நீர் பாதைகளின் வழியாக வேகமாக பாய்ந்து ஓடியது.ஊரே நீரில் மூழ்கிக் கிடந்தது. ஈச்சரன் நாயர் நெஞ்சில் கையை வைத்தார் : "ஓ! என் வயல்!"

குட்டப்பப் பணிக்கரும் நீண்ட பெருமூச்சை விட்டான்:" ஓ.... என் விதைக்கப்பட்ட கீரை...!"

குஞ்ஞித்தேயி அம்மா இவ்வாறு கூறினாள்: "இந்த குளிர்ந்த காற்று என் மகனுக்கு ஜலதோஷத்தை உண்டாக்கிடும்."

மூன்று நாட்கள் கடந்த பிறகுதான் நீர் வருவது நின்றது. எதிர்பார்த்தவை அனைத்தும் நடந்திருக்கின்றன. பச்சை பிடித்து நின்ற நிலம் முழுவதும் வெளிறிப் போய் கிடந்தது. வயலில் சேறு தேங்கிக் கிடந்தது. கீரை இருந்த நிலத்திற்குள் மணல் வந்து கிடந்தது. குஞ்ஞித்தேயி அம்மாவின் மகனுக்கு ஜலதோஷம் பிடித்தது. ஈச்சன் நாயர் நிலம் முழுவதையும் நடந்து பார்த்தார். கிணற்றின் அருகிலிருந்த சர்வே கல் அடியோடு பெயர்ந்து நீங்கி விட்டிருந்தது. அதைப் பார்த்ததும் குஞ்ஞித்தேயி அம்மாவிற்குப் பெரிய அளவில் கவலை உண்டானது. அன்றே கணவனுக்குத் தகவலை அறிவிக்கவும் செய்தாள். மறுநாள் காலையில் குட்டப்பப் பணிக்கரின் வேலையாட்கள் வந்து சர்வே கல்லை குழி தோண்டி நிமிர்ந்து நிற்க வைத்தார்கள். ஆனால், முன்பு இருந்த இடத்திலிருந்து ஒரு அடி தள்ளி குழி தோண்டி நிற்க வைத்திருந்தனர். மதிய வேளை தாண்டிய பிறகு, ஈச்சரன் நாயர் அதைப் பார்த்தார். அவருக்குக் கோபம் வந்தது: ''என்ன வேலை செஞ்சிருக்கீங்க? சர்வே கல்லை என் நிலத்துப் பகுதியில் தள்ளி பதிச்சிருக்கீங்க. கேட்பதற்கு இங்கு ஆணும் தூணும் இல்லாமல் இல்லை."

உடனடியாக பணியாட்களை வரவழைத்து முன்பு இருந்த இடத்திலிருந்து ஒரு அடி அந்தப் பக்கம் தள்ளி இருக்குமாறு குழி தோண்டி புதைத்து நிற்கும்படி செய்தார். மறுநாள் பல் தேய்க்கும்போதுதான் குட்டப்பப் பணிக்கர் அதைப் பார்த்தான். எதுவும் பேசவில்லை. மதியம் பணியாட்கள் வந்து சர்வே கல்லைப் பெயர்த்தெடுத்து, ஈச்சரன் நாயரின் நிலத்திற்கு மூன்று அடிகள் தள்ளி குழி தோண்டி, நிற்க வைத்தார்கள். ஈச்சரன் நாயர் அடங்கி இருப்பாரா? அந்த வகையில் நின்று கொண்டிருந்த சர்வே கல் நடக்க ஆரம்பித்தது.

குஞ்ஞித்தேயி அம்மாவிற்குக் கவலை உண்டானது. மாமாவிற்கும் கணவனுக்கும் இடையே ஒரு கயிறு இழுக்கும் போட்டி நடப்பதைப் பார்க்க அவள் விரும்பவில்லை.

"மாமாக்கிட்ட எதற்கு சண்டைக்குப் போனீங்க?"- குஞ்ஞித்தேயி தன் கணவனிடம் கேட்டாள்.

"மாமா எதற்கு என்கூட சண்டை போடுறதுக்கு வருகிறார்?"- குட்டப்பப் பணிக்கர் தொடர்ந்தான்:" என் நிலத்தை ஒரு அங்குலம் கூட நான் விட மாட்டேன். "

அவள் தோற்று விட்டாள். மாமாவை அணுகினாள். ஒரு அங்குல நிலத்தைக்கூட விடமுடியாது என்று அவரும் கூறினார்: ''பிறகு...? என் மருமகன் பெரியவனாக ஆகுறப்போ, நிலம் வேறொருவரின் கையில் இருக்கக் கூடாது."

''இன்னொருவரின் கையிலா? அவனுடைய தந்தையின் கையில்தானே இருக்கும்?"- குஞ்ஞித்தேயி மெதுவான குரலில் வாதம் செய்து பார்த்தாள்.

"என்ன?"- ஈச்சரன் நாயருக்குக் கோபம் வந்தது:

"குட்டப்பாவின் கையில் இருந்தால், அவனோட குடும்பத்துக்குப் போயிடும். புரியுதா?"

மீண்டும் சர்வே கல்லுக்கு நிம்மதி இல்லாத நிலை உண்டானது. அசைப்பதும், பிடுங்குவதும், புதைப்பதும், எடுத்து புதைப்பதும்... அந்தச் சண்டை

அதிகமானது. சர்வே கல்லுக்கும் பணியாட்களுக்கும் இடையே இருந்த பிரச்சினை நின்றது. மாமனுக்கும் மருமகனுக்கும் இடையே போர்... குட்டப்பப் பணிக்கரின் மகனுக்குச் சொத்து உண்டாக்குவதற்காக, குட்டப்பப் பணிக்கருக்கு எதிராக ஈச்சரன் நாயர் கடுமையாக வாதாடினார். தன் மகனுக்கு நிலத்தைத் தராமல் இருப்பதற்காக குட்டப்பப் பணிக்கரும் தீவிரமாக போராடினான். குஞ்ஞித்தேயி அம்மா பார்த்தவாறு நின்று கொண்டு கண்ணீர் விட்டாள். அவளுடைய இடுப்பிலிருந்த குழந்தையோ அனைத்தையும் அறிந்தவனைப் போல, குலுங்கிக் குலுங்கி சிரித்தான்.

பிடிவாதம் அதிகமாகி, வழக்காக ஆனது. முதல் நீதிமன்றம் முடிந்து இரண்டாவது நீதிமன்றத்திற்கு வந்தபோது, மலைப்பகுதியிலிருந்த மரங்கள் அனைத்தையும் அறுத்து விற்று வழக்கை நடத்துவதற்கான வழியைப் பார்த்தார் ஈச்சரன் நாயர். ஒரு துண்டு நிலத்தை விற்க வேண்டிய நிலை குட்டப்பப் பணிக்கருக்கு ஏற்பட்டது. அதற்குப் பிறகும் அந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த மனிதர்களும் விடுவதாக இல்லை.

இரண்டு பேரும் பார்க்க நேர்ந்தால், பேச மாட்டார்கள். தலையைத் திருப்பிக் கொண்டு ஓடி விடுவார்கள். சில நாட்கள் கடந்த பிறகு, குட்டப்பப் பணிக்கர் இல்வாழ்க்கை நடத்துவதற்காக வருவதை நிறுத்திக் கொண்டான். குஞ்ஞித்தேயி அம்மாவிற்குக் கவலை உண்டாகும் அல்லவா? பணிக்கர் எதற்கு திருமண உறவிலிருந்து விலகி இருக்கிறான் என்பதை ஈச்சரன் நாயரால் புரிந்து கொள்ள முடியவில்லை. மருமகளைப் பற்றி குறை கூறும் அளவிற்கு ஒரு விஷயமும் இல்லையே!

மூன்று நாட்கள் குஞ்ஞித்தேயி அம்மா காத்திருந்தாள்.

வரவில்லை. நான்காவது நாளன்று அவள் சர்வே கல்லுக்கு அருகில் சென்று சற்று ஆட்டிப் பார்த்தாள். அசைந்தது. சில நாட்களாகவே அந்தக்கல்லுக்கு ஒரே இடத்தில் இருப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை. அவள் பணியாளை அழைத்து அதை ஆட்டிப் பிடுங்க வைத்தாள். இரண்டு பேரும் சேர்ந்து தாங்கிப் பிடித்து கிணற்றில் கொண்டு போய் போட்டார்கள். மருமகனுக்காக ஈச்சரன் நாயர் அந்தக் கிணற்றில் வளர்த்த ப்ரம்மி நாற்றுகள் (ஒரு வகையான செடி. சரீரத்தைச் சுத்தம் செய்வதற்காகவும், நினைவாற்றலை உண்டாக்கவும் குழந்தைகளுக்கு இதன் நீரைத் தருவார்கள். பொதுவாக கிணற்றில் வளர்ப்பார்கள்) அலைகளில் கிடந்து ஊசலாடின. குஞ்ஞித்தேயி அம்மா தலையை உயர்த்திப் பார்த்தாள். சர்வே கல் இல்லாத அந்த நிலம் அவளுடைய இதயத்தைப் போலவே விரிந்து கிடந்தது. தொடர்ந்து பெருமூச்சு விட்டவாறு அந்த பெண் கூறினாள்:

"இது இத்துடன் முடியட்டும்!"

அன்று சாயங்காலம் ஈச்சரன் நாயர் சர்வே கல்லைப் பார்த்தார். காணவில்லை. பதைபதைத்து விட்டார். மருமகளை அழைத்து கேட்டார்: "சர்வே கல் எங்கே... குஞ்ஞித்தேயி?"

''என் நெஞ்சில்....!''- சற்று கோபத்துடன் குஞ்ஞித்தேயி கூறினாள் : '' மாமா, நீங்க என் குழந்தைக்கு சர்வே கல் உண்டாக்கித் தருவதற்காக, தந்தையைத் தூக்கி எறிஞ்சிட்டீங்க!"

''தந்தை இல்லாமலும் வாழலாம். நிலம் இல்லாவிட்டால், வாழ முடியாது.''- பெரியவர் நினைவுபடுத்தினார்.

''நிலம் முழுவதையும் கொடுத்தாலும், ஒரு தந்தை கிடைக்க மாட்டான்.''- குஞ்ஞித்தேயி தொடர்ந்து கூறினாள்: "சிவனே! என் நெஞ்சிலிருந்து இந்த சர்வே கல்லைச் சற்று எடுத்து நீக்கினால் போதும்." குஞ்ஞித்தேயியின் அந்த வார்த்தைகள் வெட்டவெளியில் சென்று மோதி எதிரொலித்தது. பூமியும் அதை ஏற்றுக் கொண்டு எதிரொலிப்பதாக அவள் உணர்ந்தாள்.

''எனக்கு அதைத் தவிர, வேறுவழியில்லை.''- பெரியவர் கூறினார்: ''என் குடும்பத்தை நான் நாசமாக்க மாட்டேன்."

"அப்படின்னா.... நான் என் உயிரைப் போக்கிக் கொள்வேன்."- குஞ்ஞித்தேயி சத்தியம் செய்தாள். ஈச்சரன் நாயர் அதிர்ச்சியடைந்து விட்டார். அன்று வரை அந்த குடும்பத்தில் ஒரு பெண்ணின் குரல் இவ்வாறு எழுந்ததில்லை. தன் மருமகளா இப்படிப் பேசுகிறாள்? அவர் ஆகாயத்தையும் பூமியையும் சற்று பார்த்தார். சுற்றிலும் கண்களை ஓட்டினார். வாசலுக்குச் சென்று சிந்தனை செய்தவாறு நடந்தார். பூமியின் ஆணிக்கற்கள் நகர்கின்றனவோ? பூமியே கையை விட்டுப் போகிறதோ? காலுக்குக் கீழே வெறுமையோ? அத்துடன் சேர்ந்து தன் குடும்பத்தின் மூல கற்களும் அசைந்து நீங்கி போகின்றனவோ? ஈச்சரன் நாயருக்கு அழுகை வந்தது. சாயங்காலம் முடியும் வரை அவர் நடந்து கொண்டிருந்தார். இறுதியில் மருமகளை அழைத்தார் :

"குஞ்ஞித்தேயி..."

"என்ன மாமா?"

"பாரு... நீ தூக்கில் தொங்கி சாக வேண்டாம். நான் வழக்கைத் திரும்ப பெறுகிறேன். உனக்கு விருப்பமில்லாத ஒன்றை மாமாவான நான் செய்தால், இந்த குடும்பத்தில் எந்த சர்வே கல்லையும் உறுதியாக நிறுத்தி வைக்க முடியாது. இப்போதே நான் குட்டப்பனைப் பார்க்குறேன். கவலைப்பட வேண்டாம். புரியுதா?"

● ● ●

# மொழி பெயர்ப்பாளரின் உரை...

வணக்கம்.

அனைத்து இலக்கிய உள்ளங்களுக்கும் என் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

இந்த மாத 'இனிய உதய'த்திற்காக

3 சிறுகதைகளை நான் மொழி பெயர்த்து வழங்குகிறேன்.

'சர்வே கல்' என்ற கதையை எழுதியவர் மலையாள இலக்கியத்தின் நட்சத்திர எழுத்தாளர்களில் ஒருவரான உறூப்.

இவரின் உண்மைப் பெயர்

பி.சி.குட்டிக் கிருஷ்ணன்.

தேசிய சாகித்ய அகாடெமி விருது பெற்றவர் இவர்.

இந்த கதை எழுதப்பட்ட வருடம் 1954.

ஈச்சரன் நாயர், அவரின் மருமகளான குஞ்ஞித்தேயி அம்மா, அவளின் கணவனான குட்டப்பப் பணிக்கர் என்ற மூன்று கதாபாத்திரங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட கதை.

1950 களின் மலையாள மக்களின் வாழ்க்கையைக் கண்ணாடி என இந்த கதை பிரதிபலிக்கிறது.

'மருமக்கத்தாயம்' என்ற வழக்கு கேரள மக்களின் வாழ்க்கையில் எத்தகைய பங்கு வகித்திருக்கிறது என்பதை இந்த கதையின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

'காளியமர்த்தனம்' என்ற கதையை எழுதியவர் தேசிய சாகித்ய அகாடெமி விருது பெற்றவரும்,மூத்த மலையாள எழுத்தாளருமான மலயாற்றூர் ராமகிருஷ்ணன்.

இவர் ஒரு

ஐ. ஏ. எஸ். அதிகாரி.

கலெக்டராக பணி புரிந்தவர்.

கேரள அரசின் பிரதான செக்ரட்டரியாக இருந்தவர்.

ஓய்வு பெற்ற ஒரு காவல் துறை அதிகாரி, அவரின் மனைவி, பாஷிணி என்ற பணிப்பெண் ஆகியோரை கதாபாத்திரங்களாக வைத்து எழுதப்பட்ட கதை.

மாறுபட்ட கதைக்கருவைக் கொண்ட இந்த கதையில் வரும் மஞ்சுபாஷிணி என்ற பாஷிணி அருமையான, வித்தியாசமான கதாபாத்திரம்.

கதையை வாசித்து முடித்த பிறகும், பாஷிணி நம் மனங்களில் குடி கொண்டிருப்பாள்.

'ஒரு புதிய நுண்ணுயிர்' என்ற கதையை எழுதியவர் உலக புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளரான

ஓ. ஹென்றி.

அறிவியலில் அளவற்ற ஆர்வத்தை வைத்திருக்கும்... நுண்கிருமிகளைப் பற்றிய ஆராய்ச்சியைச் செய்யும் ஒரு மனிதரின் கதை.

ஓ. ஹென்றியின் கதை என்றாலே, இறுதியில் ஒரு 'ட்விஸ்ட்' இருக்கும். இதிலும் அந்த 'திருப்பம்' இருக்கிறது.

அதுதான் 'ஓ. ஹென்றி டச்'.

இந்த கதைகள் ஒவ்வொன்றும் உங்களுக்கு வெவ்வேறு அனுபவங்களைத் தரும் என்பது நிச்சயம்.

'இனிய உதயம்' மூலம் நான் மொழி பெயர்க்கும் சிறந்த இலக்கிய ஆக்கங்களை ஆர்வத்துடன் வாசிக்கும் அனைத்து உயர்ந்த உள்ளங்களுக்கும் என் இதய நன்றி.

**அன்புடன்,**

**சுரா**

# காளியமர்த்தனம்

## (மலையாளக் கதை)

மனிதர் தைரியசாலி. இதைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் நெருக்கமாக தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

சற்று பார்த்தால் போதும். பிரகாசித்துக் கொண்டிருக்கும் வட்டக் கண்கள்... கம்பீரமான மீசை... உடல் பலம் தேவையான அளவிற்கு இருக்கிறது என்பதை அறிவிக்கக்கூடிய முக உணர்ச்சிகள்....

பணியில் இருந்த காலத்திலும் தைரியமானவராக இருந்தார். சீருடையும் குறுக்குவாட்டு பெல்ட்டும் கிடைத்த நாளிலிருந்தே அவர் திருடர்களைப் பிடிப்பதிலும் தெரு ரவுடிகளைக் கீழ்ப்படியச் செய்வதிலும் திறமைசாலி என்ற பெயரை வாங்கினார். ஒருமுறை எட்டு ரவுடிகளை தனி மனிதனாகச் சந்தித்து மோதிய விஷயத்தை பரபரப்புக்கு முக்கியத்துவம் அளிக்காத பத்திரிகைகள் கூட பெரிய அளவில் செய்தியாக வெளியிட்டன. இருபது வருட காலம் பணியில் இருந்துவிட்டு, போலீஸ் சூப்ரெண்ட் பதவியும் போலீஸ் மெடலும் கிடைக்கும் என்றிருந்த சூழலில், அனைவரையும் ஆச்சரியப்பட வைக்கும் வகையில் அவர் 'கெ. எஸ். ஆர்.' என்ற அரசாங்கத்தின் பிரிவில், பொதுவாக உபயோகத்தில் இல்லாத ஒரு வகுப்பின்படி, தானே ஓய்வூதியம் வாங்கும் நிலையை உண்டாக்கிக் கொண்டார். அருமையான காலத்தில்... நல்ல காலத்தில்.... நாற்பத்தைந்தாவது வயதில்....

'ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள்' என்று கேட்டவர்களிடம் அவர் கூறினார்:

''இனி என்னை விட தோள்பட்டையில் நட்சத்திரங்களையும் வாள்களையும் தடிமனான ஆயுதங்களையும் தாங்கிக்கொண்டு நடக்கும் அதிகாரிகளுக்கு நான் சலாம் வைக்க வேண்டிய அவசியம் இல்லையே! போலீஸ் மெடல் விஷயத்தை எடுத்துக் கொண்டால், கான்ஃபிடன்ஷியல் ரிப்போர்ட்டில் 'கோழை' என்ற பெயரைப் பெற்றிருக்கும் மன்னர்களுக்குக் கூட இப்போது அது எளிதில் கிடைக்கிறது. அதை நான் பெற்றால், எனக்கு என்ன பெருமை? இவற்றிற்கெல்லாம் மேலாக, என் மைத்துனர் ஆரம்பித்திருக்கும் சிறுதொழில் நிறுவனத்தின் பொது மேலாளராக நான் பணியாற்ற இருக்கிறேன்.''

இவ்வளவையும் கேட்ட பிறகு, 'நல்லது' என்று சிலர் கூறினார்கள். சாமர்த்தியம் உள்ள மனிதராக இருந்தால், ஒரே நேரத்தில் போலீஸ் சூப்ரண்டாகவும் பொது மேலாளராகவும் இருந்திருக்கலாம். அரசாங்க பணியைத் துறக்காமல், வர்த்தகம் செய்பவர்கள் எத்தனை பேர்! போலீஸ் வேலையை இழந்த பிறகு... தவறு... இழக்க வைக்கப்பட்ட பிறகு, அவர் ஒற்றப்பாலத்தில் தங்கினார். அங்குதான் சிறுதொழில் நிறுவனம் இருந்தது.ஆடர்லிகள் இல்லை... வேண்டாம்.... பரவாயில்லை. ஷூக்களை அவரே பாலீஷ் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் என்ன? தானே முக சவரம் செய்து கொள்வதில்லையா? யாரும் தன்னைப் பார்த்து பயப்படுவதில்லை. அதற்கான அவசியம் என்ன? இனி தேவையானது உற்பத்தி, விற்பனை, லாபம் ஆகியவைதான். அதற்கு யாரும் பயப்படக்கூடாது என்பது மட்டுமல்ல.. அனைவரும் தன்மீது அன்பு செலுத்தவும் வேண்டும். வட்டக் கண்களில் பிரதிபலித்தது பப்ளிக் ரிலேஷன்ஸின் வெளிச்சம். பெரிய மீசையின் புதிய தோற்றம் நட்பின் சின்னமாக ஆனது.

ஒரு விஷயத்தில் மட்டும் சிரமம் இருந்தது. வேலைக்காரிகள்...

அது... இந்த இடத்தால் உண்டான பிரச்சினை. இரண்டு வாரங்களோ மூன்று வாரங்களோ பணியைச் செய்து விட்டு, வேலைக்காரிகள் இடத்தை விட்டுச் செல்வது, தான் போலீஸ் பணியை விட்டதாலா? இல்லவே இல்லை. செர்ப்பளஸேரியைச் சேர்ந்த அம்மிணி மட்டும்தான் மூன்று மாதங்களுக்கு நெருக்கமாக பணியில் இருந்தாள். வெளுத்த நிறம்... பயந்த குணம் கொண்டவள். வயது முப்பத்தைந்து ஆகியும், இருபது வயதிற்கான அழகிய தோற்றத்தைக் கொண்டவள். இவ்வளவு தகுதிகள் ஒரு வேலைக்காரியிடம் ஒன்று சேர்ந்து இருக்கலாமா? ஒருநாள் சிறுதொழில் நிறுவனத்திலிருந்து திரும்பி வந்தபோது, மனைவி கூறினாள்: "நான் அம்மிணியைப் போகச் சொல்லிட்டேன். அந்த அளவிற்கு நல்லவள் இல்லை.'' அதற்குப் பிறகு, யாரையும் யாரும் போகுமாறு கூறவில்லை. அனைவரும் அவர்களாகவே போய் விட்டார்கள். இல்லாவிட்டால்... அதற்கான சூழல்களை உண்டாக்கினார்கள். கோதகுறிஸ்ஸி பாலாமணி திருடினாள். அதை அறிய நேர்ந்ததும் அவள் அங்கிருந்து வெளியேறிவிட்டாள். ஷொர்ணூர்காரி சாந்தா பால்காரனுடன் உறவு

## மலயாற்றூர் ராமகிருஷ்ணன்

## தமிழில் : **சுரா**

வைத்திருந்தாள். அந்த விஷயம் தனக்குத் தெரிந்துவிட்டது என்பதை அறிந்தவுடன், அவள் புறப்பட்டுப் போய்விட்டாள். இவ்வாறு ஒவ்வொரு காரணத்திற்காக, அனங்ஙனடி அம்முக்குட்டியும் பட்டாம்பி பாருவும் முத்துக்குறிஸ்ஸி மாதவியும் த்ருக்கடீரி தங்கமும் லக்கிடி லட்சுமியும் இடத்தைக் காலி பண்ணினார்கள்.

காவல் துறையில் பணியாற்றிய காலமாக இருந்திருந்தால், குற்றவாளியைக் கைது செய்து கொண்டு வரும்போதே, ஒருத்தி போய்விட்டால் இன்னொருத்தியைப் போலீஸ் கான்ஸ்டபிள்கள் கொண்டுவந்து நிறுத்தி விடுவார்கள். வேறு எதுவுமே தெரியாவிட்டாலும், வேலைக்காரிகளை அடையாளம் கண்டுபிடிப்பதற்கும் கைது செய்வதற்கும் தேவைப்படும் திறமையைக் கொண்டவர்களாக இருந்தார்களே, ரைட்டர் குட்டன் பிள்ளையும் ஹெட் அவறான் குட்டியும்! இப்போது அவ்வப்போது வேலைக்காரிகள் இல்லாமல் வீட்டுக் காரியங்கள் நடைபெறுகின்றன. த்ருக்கடீரி தங்கம் போன பிறகு, மூன்று வாரங்கள் கடந்த பிறகுதானே லக்கிடி லட்சுமியே கிடைத்தாள்!

இப்படிப்பட்ட இடைவெளிகள் வரும்போது, மனைவி புலம்புகிறாள். அவர் சிறுதொழில் நிறுவனத்திற்குத் தாமதமாக வருகிறார். உற்பத்தி குறைகிறது.

சிறுதொழில் அதிபர்களின் ஒரு கூட்டத்தை அரசாங்கம் ஏற்பாடு செய்தபோது,

'தொழிலில் லாபமும் வேலைக்காரிகளின் குறும்புகளும்' என்ற விஷயத்தை மையமாக வைத்து ஒரு கட்டுரையை வாசித்தால் என்ன என்றுகூட அவர் சிந்தித்தார்.

வேலைக்காரிகளை அமர்த்துவது என்ற விஷயத்தில் மனைவி பலமான 'ஒன் உமன்' சர்வீஸ் கமிஷன் என்றுதான் கூற வேண்டும். ஓராயிரம் தகுதிகளைக் கூறுவாள். செர்ப்புளஸேரியைச் சேர்ந்த அம்மிணி போன பிறகு, தகுதிகளில் முக்கிமானது இதுதான்: வேலைக்காரி மிகவும் இளம் வயது உள்ளவளாக இருக்க வேண்டும் (வயதிற்கு வந்தவளாக இருக்கக் கூடாது என்று அர்த்தம்). இல்லாவிட்டால்... வயதில் மிகவும் பெரியவளாக இருக்க வேண்டும் (தடிமனாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மாதவிடாயைத் தாண்டியிருக்க வேண்டும் என்று அர்த்தம்).



தானாகவே ரிட்டயர்ட் ஆன காவல் துறை அதிகாரி தேடினார்.

இந்த தகுதிகளைக் கொண்டவளாக இருந்தாள்... அனங்கனடி அம்முக்குட்டி.( மிகவும் பெரியவள்)

ஆனால், நிற்கவில்லை.

வருகிறார்கள்.... போகிறார்கள்....

பிரச்சினையே இந்த ஒற்றப்பாலம்தான்.

உற்பத்தி குறைந்து விட்டது. விற்பனை குறைந்து விட்டது. லாபம் முற்றிலுமாக குறைந்து விட்டது.

வட்டக் கண்கள் சுழன்றன. பெரிய மீசை துடித்தது.

அவர் ஒரு தீர்மானத்தை எடுத்தார்.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஒரு வேலைக்காரியைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும். அங்கு தம்பி இருக்கிறான். அவன் இருப்பதோ... புதிதாக வேலைக்கு ஆட்களை எடுக்கும் அலுவலகத்தில்.

தம்பிக்குத் தகவல் கிடைத்தது.

தம்பி ஒரு வேலைக்காரியைக் கண்டுபிடித்தான்.

முடவன்முகள் என்ற இடத்தைச் சேர்ந்த மஞ்சுபாஷிணி...

அண்ணனுடன் தம்பி தொலைபேசியில் பேசினான்.

கீழே கண்டபடி மூன்று நிமிடங்களுக்குள் ஒரு ட்ரங்க் உரையாடல் நடைபெற்றது.

“என்ன பெயர்னு சொன்னே?“

“மஞ்சுபாஷிணி“.

“திரைப்பட நட்சத்திரமா?”

“இல்லை...”

“முன்னாள் திரைப்பட நட்சத்திரமா?”

“திரைப்பட நட்சத்திரமே இல்லை.”

“வயதில் மிகவும் இளையவளா.... மிகவும் அதிகமாக இருப்பவளா?“

“மிகவும் பெரியவள். ஐம்பத்தாறு.”

“நல்லது. அனுப்பிடு...”

அந்த வகையில் ‘ம: பாஷிணி’ ஒற்றப்பாலத்திற்கு வந்து சேர்ந்தாள். பெயர் சுருக்கப்பட்டது. பாஷிணி என்று....

பாஷிணியை ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிக்கும் மனைவிக்கும் மிகவும் பிடித்திருந்தது. வயது ஐம்பத்தாறாக இருந்தாலும், நல்ல உடல் நலத்துடன் இருந்தாள். மூவாயிரத்து இருநூறு சதுர அடிகள் உள்ள மொஸைக் தரையைச் சுத்தம் செய்வது... மூன்று பசுக்களைக் கறப்பது.... தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவது... துணியைச் சலவை செய்வது... இவை அனைத்திற்கும் பாஷிணிக்குத் தேவைப்படுவதே மூன்றே முக்கால் மணி நேரம்தான். பிறகு... நல்ல முறையில் சமையல் செய்யவும் தயார்தான். பாஷிணிக்கு ஓய்வு நேரம் நிறையவே இருக்கிறது. அதை பக்தி விஷயங்களுக்கு பயன்படுத்திக் கொள்கிறாள். மகாபாரதத்தை வாசிக்கிறாள். கீதையை வாசிக்கிறாள். கீர்த்தனங்களைப் பாடுகிறாள். நிம்மதி நிறைந்த நாட்கள் நகர்ந்து நீங்கிக் கொண்டிருந்தன.

வருகின்றன.... புதிய கண்டுபிடிப்புகள்....

சர்க்கரைக்கான செலவு அதிகரித்திருக்கிறது. முன்பு ஒவ்வொரு மாதத்திற்கும் இருபத்தைந்து கிலோ கிராம் போதுமானதாக இருந்தது.

இப்போது ஐம்பது கிலோ.

காப்பிப்பொடிக்கான செலவு எட்டு ராத்தலிலிருந்து பதினேழு ராத்தலாக உயர்ந்திருக்கிறது.

ஃப்ரிட்ஜில் பாதுகாத்து வைத்திருக்கும் பழ வர்க்கங்கள் திடீரென காணாமல் போகின்றன.

பக்கத்து குடிசைகளில் வசிக்கும் குழந்தைகள் தடிமனாகி வருகின்றன.

மனைவி விசாரணை நடத்தினாள்.

இதற்கெல்லாம் காரணம் பாஷிணிதான் என்பது தெரிய வந்தது. அவள் பக்கத்து வீடுகளில் இருப்பவர்களுக்கு சர்க்கரை, காப்பிப்பொடி ஆகியவற்றை தானமாக அளித்துக் கொண்டிருக் கிறாள். குழந்தைகளுக்கு சாத்துக்குடி, ஆரஞ்சு, திராட்சை ஆகியவற்றையும்....

பாஷிணி விசாரிக்கப்பட்டாள்.

பதிலெதுவும் கூறாமல், பாஷிணி கீதையை வாசிக்க ஆரம்பித்தாள். இடையே அவ்வப்போது முணுமுணுத்தாள்: "என்னைக் குற்றம் சுமத்துவது எனக்குப் பிடிக்காது."

ஓய்வு பெற்ற அதிகாரியும் மனைவியும் கதவை அடைத்துவிட்டு ஒரு விவாதத்தை நடத்தினார்கள்.

மனைவி: "இப்படி நடந்தால்....?"

கணவர்: ''செலவு கொஞ்சம் அதிகரிக்கும் என்பதுதான் விஷயம். பரவாயில்லை. பணிகள் அனைத்தையும் செய்கிறாள்ல?"

மனைவி: "இருந்தாலும்...."

கணவர்: ''இவளையும் கோபிச்சு அனுப்பி விட்டோம்னா, பிறகு...? தம்பி கூட நினைப்பான்.... உனக்கு வேலைக்காரிகளிடம் நட்புணர்வுடன் பழகத் தெரியலைன்னு...."

மனைவி: "இன்னும் கொஞ்ச நாட்கள் பார்ப்போம்."

கணவர்: "நல்லது..."

பாஷிணி தொடர்ந்து பணியைச் செய்தாள். கீதையை வாசித்தாள். சர்க்கரை, காப்பிப்பொடி ஆகியவற்றைப் பக்கத்து வீட்டில் உள்ளவர்களுடன் பங்கு வைத்தாள்.

ஒருநாள் தயிரைக் கடைந்து கிடைத்த வெண்ணெய் முழுவதையும் எடுத்துக் கொண்டு பாஷிணி சாலையில் இறங்கினாள். ஒரு பிச்சைக்கார சிறுவனுக்கு வெண்ணெய் முழுவதையும் கொடுத்துவிட்டாள். மனைவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. "இது என்ன கூத்து?" என்று கேட்டதற்கு, பாஷிணி கூறினாள்: "என்னை ஸ்ரீ கிருஷ்ணன் அழைத்தார். அந்தச் சிறுவன் ஸ்ரீ கிருஷ்ணனுடன் கோகுலத்தில் விளையாடித் திரிந்தவன்..."

"கிறுக்கு!"- கணவரிடம் மனைவி முணுமுணுத்தாள்.

இன்னொரு நாள் பாஷிணி தன் இடது தொடையிலிருந்த ஒரு நீல நரம்பைக் காட்டியவாறு கூறினாள்: "இது என்னன்னு தெரியுமா?"

"நரம்பு..."

"இல்லை... மஹா விஷ்ணு..."

கிறுக்கு முற்றிவிட்டதாக கணவரிடம் மனைவி முணுமுணுத்தாள்.

இந்த நரம்பைக் காட்டிய நாளுக்கு அடுத்த நாள் ஊரின் முக்கிய செல்வந்தரான குஞ்னு நெடுங்நாடியின் கணக்குப்பிள்ளை ஓய்வு பெற்ற அதிகாரியின் நிலத்திற்கு வந்தான். கணக்குப்பிள்ளை ஒரு பாம்பைப் பார்த்து ஓடினான். பாம்பும் ஓடியது. தவறுதலாக கணக்குப்பிள்ளை பாம்பை மிதித்து விட்டான். அதிர்ஷ்டம்! கடிக்கவில்லை. அந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த பாஷிணி பக்திப்பெருக்குடன் கணக்குப் பிள்ளையை வணங்கியதுடன், தொழுதுகொண்டே அவனைச் சுற்றி நடனமாடி விட்டு, சமையலறைக்குள் நுழைந்து காய்ச்சிச் சுண்ட வைத்திருந்த பாலைக் கொடுத்தாள்.

மனைவியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"நீ எப்படி நடக்கிறாய், பாஷிணி?"

"பகவான் வந்திருக்கிறார்ல?"

"பகவானா?"

''அதோ... பாருங்க.''- பாஷிணி கணக்குப் பிள்ளையைச் சுட்டிக்காட்டியவாறு தொடர்ந்தாள்:

"காளியமர்த்தனம் முடிஞ்சு, பகவான் களைச்சுப் போய் வந்திருக்கிறார்."

சிறிய ஒரு தலைவலியால் பாதிக்கப்பட்ட மனைவி படுக்கையில் சென்று விழுந்தாள்.

சிறுதொழில் நிறுவனத்திலிருந்து திரும்பி வந்த கணவரிடம் மனைவி காளியமர்த்தனம் என்ற விஷயத்தைப் பற்றி கூறியபோது, அவர் குலுங்கிக் குலுங்கி சிரித்தார். "ரியல் மென்டல் கேஸ்... சரியான கிறுக்கு... ம்... பரவாயில்லை... வேலையை ஒழுங்கா செய்கிறாள்ல?"

மனைவி முனகினாள். இடையே அவ்வப்போது ஒவ்வொரு கிறுக்குத்தனமானசெயல்களையும் வெளிக்காட்டினாலும் அருமையாக பணிகளைச் செய்து கொண்டிருந்தாள்.

இருக்கட்டும்.

ஆனால், கிறுக்குத்தனம் வேறொரு 'டைமன்ஷ'னில் வளரும் என்ற விஷயம் யாருக்குத் தெரியும்?

ஒரு ஞாயிற்றுக்கிழமை...

சிறுதொழில் நிறுவனத்திற்கு விடுமுறை.

கணவர் கட்டிலில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக் கிறார்.

மனைவி குளியலறையில்....

அப்போது கண்களில் மை பூசி, பொட்டு வைத்து, கொஞ்சம் பவுடர் பூசி, தலைமுடியில் முல்லைப் பூ வைத்து... பாஷிணி கட்டிலுக்கு வந்தாள். ரிட்டயர்ட் அதிகாரிக்கு அருகில் அவள் அமர்ந்தாள். அவரை இறுக அணைத்தாள்.

அந்தக் காட்சியைப் பார்த்தவாறு மனைவி

குளியலறைக்கு உள்ளிருந்து திரும்பி வந்தாள்.

அதிர்ச்சியடைந்து விட்டாள்.

செர்ப்பளஸேரி அம்மிணி கூட செய்வதற்குத் துணியாத செயல்!

பாஷிணியை மனைவி வேகமாகச் சென்று பிடித்தாள்.

"எழுந்திருடீ... துடைப்பக் கட்டையே!"

"நான் துடைப்பம் இல்லை..."

"அப்படின்னா... பெருச்சாளி...."

"நான்... ராதா.... பிருந்தாவனத்தின் ராதா. இது... என் கிருஷ்ணன்".

மனைவி பார்த்துக் கொண்டிருக்க, கணவரை பாஷிணி கட்டிப் பிடித்தாள்.

கணவர் வெளிறிப் போய் காணப்பட்டார். நெளிகிறார்...

துடிக்கிறார்.... ராதாவின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சிக்கிறார்.

ராதா விடுவதாக இல்லை.

"கார்வண்ணா... கோகுலபாலா.... கண்ணா!"- பல பெயர்களையும் அவள் கூறினாள்.

மனைவியைக் கணவர் கையற்ற நிலையுடன் பார்த்தார்.

"கிறுக்கு!"- அவர் முணுமுணுத்தார்.

''இந்த கிறுக்குத்தனம் இங்கு வேண்டாம்''- பாஷிணியை மனைவி பிடித்து இழுத்தாள். கீழே போட்டாள்.

பாஷிணி கீதையுடன் ஒரு மூலையில் சென்று அமர்ந்தாள்.

கணவரைப் பார்த்து மனைவி கேட்டாள்: "இது என்ன கூத்து?"

"இது..... கிறுக்குத்தனம்."

''இந்த கிறுக்குத்தனம் உங்களுக்குப் பிடித்திருப்பதைப் போல தோன்றுகிறதே!"

"ச்சே... ச்சே...."

"இவளை இன்று இங்கிருந்து போகச் செய்யணும்."

"அப்படின்னா... வேலைக்காரி பிரச்சினை?"

"ஒரு வேலைக்காரியும் வேண்டாம். அனைத்தையும் நான் பார்த்துக் கொள்கிறேன்."

பாஷிணி உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் எழுந்தாள். ஒரு பையில் தன் சொத்துக்களான இரண்டு மேற்துண்டு, மூன்று வேட்டி, இரண்டு ரவிக்கை ஆகியவற்றை வைத்தாள். பிறகு.... ஒரு நடை.... கேட்டை நோக்கி.

"அவள் போகிறாள்." - கணவர் கூறினார்.

"போகட்டும்..."

"மூவாயிரம் சொச்சம் சதுர அடிகள் கொண்ட தரை, மூன்று பசுக்கள், தோட்டம், சமையல், வீட்டு வேலை ஆகியவை பற்றிய விஷயங்களுக்குள் கணவர் பயணித்தார்.

சில நிமிடங்களுக்கு மனைவி எதுவும் பேசவில்லை. பிறகு... ஒரே தாவல்.... கேட்டை நோக்கி...

"பாஷிணி, நீ எங்கு போறே?"

"பிருந்தாவனத்திற்கு"

"எதற்கு?"

"கிருஷ்ணனைப் பார்ப்பதற்கு..."

"கிருஷ்ணன் இங்கும் இருக்கிறாரே?"

"எங்கு?"

"உள்ளே... கட்டிலில்..."

''ஆனால், என்னைப் பக்கத்துல போறதுக்கு சம்மதிக்கலையே?"

"இனி சம்மதிக்கிறேன்".

பாஷிணி புன்சிரித்தவாறு திரும்பி வந்தாள்.

அன்று இரவு மனைவியும் கணவரும் படுக்கையறையில் கீழ்க்கண்டபடி பேசிக் கொண்டார்கள்:

மனைவி: "வீட்டு வேலை நடக்கணுமே! அதனால்தான் நான் அவளைத் திரும்ப அழைத்தேன்."

கணவர்: "இருந்தாலும்... அவள் என்னைக் கட்டிப் பிடிக்க வந்தால்...."

மனைவி: ''வந்தால் என்ன? ஐம்பத்தாறு ஆயிடுச்சுல்ல?"

கணவர்: "ஆமாம். ரொம்பவும் நல்லது."

மனைவி: "நீங்கள் பிரச்சினையை உண்டாக்கக்கூடிய ஆள் இல்லை என்பது எனக்குத் தெரியும்."

கணவர்: "தேங்க்ஸ்:"

மனைவி: ''எப்போதாது உங்களுக்கு அருகில் வந்துட்டுப் போகட்டும்."

கணவர்: "அய்யோ!"

மனைவி: "என்ன அய்யோ? பரவாயில்லைன்னு சொல்றேன்."

கணவர்: "அவளைக் கட்டிலை விட்டு இறக்கிய நீயா இப்போ இப்படிச் சொல்றே?"

மனைவி: ''ஒரு 'ரியலிஸ்டிக் அப்ரோச்'சை ஏற்றுக்கொண்டேன்னு அர்த்தம்."

கணவர்: "அப்படின்னா... அவளுக்கு ஒரு சந்தன சோப்பைக் கொடுக்கணும்."

மனைவி: "ஒய்?"

கணவர்: "நாற்றம் மிகவும் ரியல் ஆச்சே! என்னைக் கட்டிப்பிடித்தால், சகித்துக் கொள்ளலாம். ஆனால், நாற்றம்!"

● ● ●

# ஒரு புதிய நுண்ணுயிர்

## [ஆங்கில கதை]

ஓ. ஹென்றி

தமிழில்:**சுரா**

அறிவியல் மீது அளவற்ற ஈடுபாடு வைத்திருந்த ஒரு மனிதர் ஹவுஸ்டனில் இருந்தார். விஞ்ஞானத்தின் புதிர்களுக்கு அவர் வெறித்தனமான மாணவராக இருந்தார். தன் வீட்டில் அவர் ஒரு சிறிய சோதனைக் கூடத்தை வைத்திருந்தார். தன் பெரும்பாலான நேரத்தை அங்கு ரசாயனங்களைச் சோதனை செய்து பார்ப்பதிலும் பலவிதமான பொருட்களை ஆராய்ந்து பார்ப்பதிலும் செலவிட்டுக் கொண்டிருந்தார்.

சமீப காலமாக பலவிதமான நுண் கிருமிகளைப் பற்றிய கட்டுரைகளில் அவருக்கு மிகுந்த ஆர்வம் உண்டாகியிருந்தது. பாஸ்டியரின் எழுத்துக்களையும், கோச் எழுதிய விஷயங்களையும் வாசிக்கவேண்டும் என்பதற்காக அவர் தன் வர்த்தகத்தையே ஒதுக்கி வைத்து விட்டார். நுண்கிருமி சம்பந்தப்பட்ட எந்தச் சிறிய விஷயமாக இருந்தாலும், அதைச் சேகரித்துக் கொண்டிருந்தார்.

ஒரு புதிய 900 சக்தி கொண்ட, இருப்பதைப் பெரிதாகக் காட்டும் கருவியை அவர் விலைக்கு வாங்கினார். நுண்கிருமிகளின் வாழ்க்கை பற்றிய மதிப்புமிக்க கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கையில் வெகு சீக்கிரமே தன் கணக்கையும் சேர்க்க முடியும் என்று அவர் நம்பினார்.

கடந்த செவ்வாய் கிழமை இரவு தேவாலயங்களில் ஒன்றில் அனைவருக்கும் உணவு அளிக்கப்பட்டது. அந்த மனிதரின் மனைவி அவர் தேவாலயத்திற்கு வர வேண்டும் என்று விரும்பினாள். ஆனால், தான் வீட்டில் இருப்பதையே அதிகம் விரும்புவதாகக் கூறி அவர் கெஞ்சலுடன் மறுத்து விட்டார்.அவள் பிள்ளைகளுடன் சென்றிருக்கும் வேளையில் தன் நுண்ணோக்கியுடன் அமைதியாக நேரத்தை நல்ல முறையில் தான் செலவிடப் போவதாக கூறி விட்டார்.

முன்னாள் அரசு மண்ணியல் நிபுணரான டம்பர், ஹவுஸ்டனின் வாய்க்கால் நீரைப் பற்றி எழுதிய ஆராய்ச்சி கட்டுரையை அவர் படித்திருக்கிறார். அந்த உயர்ந்த மனிதரின் முடிவுகளை தன் சொந்த ஆராய்ச்சியைக் கொண்டு சரி பார்க்க வேண்டும் என்பதில் அவர் ஆர்வமாக இருந்தார்.

அதனால், இரவு உணவைச் சாப்பிட்டு முடித்தவுடன், அவர் சமையலறைக்குள் நுழைந்தார். அங்கிருந்த செடிக்கு அருகிலிருந்த பெஞ்சின் மீது இருந்த... முழுமையாக நீர் இருந்த... ஒரு தகர டின்னை அவர் பார்த்தார். அதை உடனடியாக தன் சோதனைக் கூடத்திற்கு எடுத்துச் சென்று, தான் அமர்ந்து பணியில் ஈடுபட்டார்.

தன் மனைவியும் குழந்தைகளும் தேவாலயத்தில் நடைபெறும் இரவு விருந்திற்காக தாங்கள் நினைத்தபடி கிளம்பும் சத்தத்தைச் சிறிது நேரத்திற்குப் பிறகு, அவர் கேட்டார். ஒன்று அல்லது இரண்டு ப்ளாக்குகளைத் தாண்டி அது இருக்கிறது.

அவர் தன் பேனாவை எடுத்து எழுத ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் அவருடைய குடும்பம் வீட்டிற்கு வந்தது. அவரின் மனைவி சோதனைக் கூடத்திற்குள் வந்தாள். பொதுவாக அவர் அவளை உள்ளே நுழைய விடமாட்டார். ஆனால், அந்தச் சூழலில் அவர் கதவைத் திறந்து, அவளை உற்சாகத்துடன் வரவேற்றார்.

"எல்லன்..."- அவர் உரத்த குரலில் கூறினார்: "நீ போன பிறகு, நான் புகழ் கிடைக்கும் காரியத்தில் வெற்றி பெற்று விட்டேன். சரியாகக் கூறுவதாக இருந்தால்... அதிர்ஷ்டத்தை அடைந்து விட்டேன். வாய்க்கால் நீரில் நான் ஒரு புதிய பேக்டீரியாவைக் கண்டுபிடித்திருக்கிறேன். இதைப் போன்ற ஒன்றை அறிவியல் கூறியதே இல்லை. உன் பெயரை நான் இதற்கு வைக்கப் போகிறேன். உன் பெயர் நிரந்தர புகழை அடையப் போகிறது. நுண்ணோக்கி மூலம் சற்று இதைப் பார். "

அவரின் மனைவி ஒரு கண்ணை மூடிக்கொண்டு நுண்ணோக்கி வழியாக பார்த்தாள்.

''வினோதமான... சிறிய... வட்ட வடிவ நுண்ணுயிர்கள்...! இல்லையா?"- அவள் கூறினாள் :

"இவற்றால் உலகிற்குக் கேடு இருக்கிறதா?"

"நிச்சயமாக... மரணம்தான். இவற்றில் ஒன்றை உன் உணவுக் குழாய்க்குள் கொண்டு போ... அத்துடன் உன் கதை முடிந்தது. நான் 'லண்டன் லேன்ஸட்'டிற்கும் ''நியூயார்க் அறிவியல் அகாடெமி'க்கும் இன்று இரவே எழுதப் போகிறேன். இவற்றை நாம் எப்படி அழைக்கலாம், எல்லன்? நாம் யோசிப்போம்... 'எல்லனோபெஸ்'.. அல்லது...

'எல்லனைட்ஸ்'... அல்லது... வேறு என்ன?"

"ஓ... ஜான்...கேடு கெட்ட மனிதரே!"- மேஜையின் மீது இருந்த தகர வாளியைப் பார்த்து விட்டு, அவருடைய மனைவி வீறிட்டாள்:

"உங்களிடம் இருந்தது என் வாளியில் இருந்த கேல்வெஸ்டன் சிப்பிகள்! தேவாலய இரவு விருந்திற்காக நான் அவற்றை வாங்கியிருந்தேன்.

ஒரு வகையில் கூறுவதாக இருந்தால்... அவையும் நுண்ணுயிர்கள்தான்! ●

தனக்குக் கிடைத்திருக்கும் அந்த அருமையான... அமைதி தவழும் நேரத்திற்காக தன்னைத் தானே அவர் பாராட்டிக் கொண்டார்.

அவர் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் பணியாற்றினார். வாளியிலிருந்து எடுக்கப்பட்ட வாய்க்கால் நீரையே திரும்பத் திரும்ப பலமான நுண்ணோக்கி மூலம் சோதித்துப் பார்த்தார்.

● ● ●

இறுதியில் வெற்றியை அறிவிக்கும் வகையில் அவர் தன் கையைத் தன்னுடைய கணுக்காலில் தட்டினார்.

"டம்பிள் கூறியது தவறு!"- அவர் ஆச்சரியத்துடன் கூறினார்: "அவர் கூறியிருக்கிறார்.....

''இது 'ஹேபேடிட் சிஸ்டால்லிஸ்' என்று. அவர் தவறாக கூறியிருக்கிறார் என்பதை என்னால் உறுதியாக கூற முடியும். இந்த நீரில் இருக்கும் நுண்கிருமிகளுக்குப் பெயர் 'ஸ்கைஸோ மைஸெடிக் பேக்டீரியா'. இவை 'ரோஸியோ பெர்சிஸினா' வகையைச் சேர்ந்த பெரிய கிருமிகளும் அல்ல.

நான் கண்டுபிடித்திருப்பது ஒரு புதிய நுண்கிருமியாக இருக்குமோ? என் கைக்குள் அறிவியல் உலகில் கிடைக்கக்கூடிய புகழைக் கொண்டு வந்து விட்டேனோ?"